விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com
சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 மாசி 30 வெள்ளிக்கிழமை (14.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 085

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

## 24 மீனவர்கள் நேற்று விடுதலை

(யாழ்ப்பாணம்)

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட இந்திய மீனவர்கள் 24 பேரையும் 5 படகுகளுடன் மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் நேற்றையதினம் விடுவித்துள்ளார்.

இதனடிப்படையில் கடந்த இரண்டு நாட்களில் மட்டும் 140 இந்திய மீனவர்கள் இலங்கைச் சிறையிலிருந்து விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்.

நேற்றையதினம் மேற்படி 24 இந்திய மீனவர்களையும்

20ஆம் பக்கம் பார்க்க..

## யாழ். நோக்கி வந்த சொகுசு பஸ் கனகராயன்குளத்தில் எரிந்து நாசம்


### உடைமைகள் தீக்கிரை: பயணிகள் தப்பினர்

(குருமன்காடு)

கொழும்பில் இருந்து நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் நோக்கி வந்த சொகுசு பேருந்து வவுனியா கனகராயன்குளம் பகுதியில் முற்றாக எரிந்து நாசமாகியது.

கொழும்பில்இருந்து பயணிகளை ஏற்றி வந்த இப் பேருந்து கனகராயன்குளம் குறிசுட்டகுளம் பகுதியில் அதிகாலை 4.30 மணியளவில் வந்து கொண்டிருந்த போது ஏற்பட்ட

20ஆம் பக்கம் பார்க்க..



## மார்ச் 25இல் மீனவர் பேச்சு

(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பில் நேற்று கொழும்பில் நடைபெறவிருந்த பேச்சுவார்த்தை, ஒத்திவைக்கப்பட்ட நிலையில், அது எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடத்தப்படும் என்று மீன்வளத்துறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நிமல் ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

இலங்கை - இந்திய மீனவர்களின் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்த்தையை எதிர்வரும் 25ஆம் திகதி நடத்த தீர்மானித்துள்ளோம். இது தொடர்பில் இந்தியாவுக்கு அறிவித்துள்ளோம். இருப்பினும் அதற்கான பதில் இன்னமும் கிடைக்கப்

20ஆம் பக்கம் பார்க்க..

## பிரித்தானியா ஆதரவு!

(லண்டன்)

இலங்கை மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தலைமையிலான சர்வதேச விசாரணைகளுக்கு பூரண ஆதரவளிக்கப்படும் 'என பிரித்தானியா அறிவித்துள்ளது.

பிரித்தானியாவின் வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹேக், அந்நாட்டு பாராளுமன்றிற்கு எழுத்து மூலம் இதனைத் தெரிவித்துள்ளார்.

சர்வதேச விசாரணைகளை வலியுறுத்தக்கூடிய வலுவான தீர்மானமொன்று ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதே தமது நிலைப்பாடு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உத்தேச தீர்மானத்தில் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்வது என்பது குறித்து கலந்துரையாடப்பட

19ஆம் பக்கம் பார்க்க..

# கிளிநொச்சியில் பதற்றம்

# வீடொன்று சுற்றிவளைப்பு

# நிர்க்கதி நிலையில் இரு பெண்கள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தாயொருவரையும் மகளையும் பொலிஸார் சுற்றி வளைத்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கிளிநொச்சி தருமபுரம் முசிலம்பிட்டி வீட்டுத்திட்டத்தில் தன் பெண்பிள்ளையுடன், கணவனையும் ஆண் பிள்ளைகளையும் இழந்த நிலையில் வசித்துவரும் ஜெயக்குமாரியின் வீட்டில் புகுந்த பொலிஸார் வீட்டை சுற்றிவளைத்துள்ள நிலையில், ஜெயக்குமாரிக்கும் கடந்த பதினைந்து நாளுக்கு முன்னதாக பருவமடைந்த அவரது பெண்பிள்ளைக்கும் என்ன நேர்கிறது என்று தெரியாத நிலையில் அந்த கிராமத்து மக்கள் பதற்றடைந்துள்ளனர்.

(20ஆம் பக்கம் பார்க்க..)

## அரச உயர் மட்டக் குழு ஜெனிவா புறப்படத் தயார்!

(கொழும்பு)

இலங்கை அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரிகளைக் கொண்ட குழுவொன்று, ஜெனிவாவில் நடைபெறுகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் 25ஆவது கூட்டத் தொடரில் பங்குபற்றுவதற்காக எதிர்வரும் 20ஆம் திகதி ஜெனிவா புறப்படவுள்ளதாக நம்பத்தகுந்த அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜெனிவாவில் நடைபெறுகின்ற ஐ.நா. மனித உரிமைப் பேரவையில் இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக அமெரிக்காவினால் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச வரைவின் கேள்வி நேரம் இம்மாதம் 20ஆம் திகதியின் பின்னர் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளையினால் சமர்ப்பிக்கப்பட்ட இலங்கை அரசாங்கம் தொடர்பாக உத்தேச வரைவில்

20ஆம் பக்கம் பார்க்க..

## புகையிரதப் பாதையில் சடலம் பரந்தனில் மீட்பு

கிளிநொச்சி - பரந்தனுக்கு இடைப்பட்ட ஏ-9 வீதியை அண்மித்த புகையிரதப் பாதைக்கு அருகில் முகம் சிதைவடைந்த நிலையில் 30 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் மீட்கப்பட்ட சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

புகையிரத வண்டியில் பயணித்த வேளை தவறி விழுந்ததனால் குறித்த நபர் மரணமடைந்தாரா அல்லது அவர் கொலை செய்யப்பட்டாரா என்ற கோணங்களில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-15.259)

### மீள் குடியமர்வை வலியுறுத்தி

## யாழ். குடாநாட்டில் கதவடைப்பு 28ஆம் திகதி மேற்கொள்ள திட்டம்

(யாழ்ப்பாணம்

யாழ்.குடாநாட்டில் எதிர்வரும் 28-ம் திகதி கதவடைப்பு போராட்டம் ஒன்றை மேற்கொள்ள அழைப்பு விடப்பட்டுள்ளது.

இதற்கான அழைப்பை வட மாகாண சபை வேட்பாளர் தம்பி தம்பிராசா விடுத்துள்ளார். வலி.வடக்கு சம்பூர் கிராம மக்களின் உறுதி காணிகளில் அவர்களை குடியேற்றுவதற்கு வசதியாக இராணுவத்தினர் 1987-ம் ஆண்டில் தாம் இருந்த நிலைகளுக்கு திரும்ப வேண்டும் என வலியுறுத்தியும்,

காணாமல் போய் திரைமறைவுச் சிறைகளில் உள்ளவர்களை விடுவிக்கக் கோரியும் சிறைகளில் விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களை விடுவிக்க வலியுறுத்தியுமே இவ் கதவடைப்பு போராட்டம் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக தம்பி தம்பிராசா வெளியிட்ட ஊடக அறிக்கை வருமாறு,

வலி.வடக்கு பகுதியில் மீளகுடியேற்றுவதற்கு பதிலாக இராணுவத்தினர் தமது பழைய நிலைகளுக்கு சொல்ல வேண்டும். கடற்படையினர் கடற்கரை பிரதேசங்களுக்கு தமது முகாம்களை மாற்ற வேண்டும் இவற்றை வலியுறுத்தி கடந்த மாதம் 21-ம் திகதி என்னால் மேற்கொள்ளப்பட்ட உண்ணாவிரதம்

20ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# தமிழீழத்துக்கான வாக்கெடுப்பு தமிழகத்தில் தொடரும் முற்றுகை

தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பை நடத்தக்கோரி சென்னை அடையாரில் உள்ள ஐ.நா. அலுவலகத்தை பாலச்சந்திரன் மாணவர் இயக்கம் மற்றும் தமிழ் மாணவர்கள் இளைஞர்கள் கூட்டமைப்பை சேர்ந்த மாணவர்கள் முற்றுகையிட்டனர்.

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை மாநாட்டில் தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பை நடத்தக்கோரியும், இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையை கொண்டுவரக் கோரியும் தமிழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஐ.நா. அவையின் விதி எண் 99 இன்படி ஐக்கிய நாடுகள் சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள உச்சகட்ட அதிகாரத்தை பயன்படுத்தி பொதுவாக்கெடுப்பை நடத்தக் கோரியும், இனப்படுகொலைக்கான சர்வதேச விசாரணையை கொண்டுவரக்கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முற்றுகையில் ஈடுபட்ட மாணவர்கள் யுனிசெப் அலுவகத்தின் கதவை பூட்டு போட்டு பூட்டினர். பின் தங்களது கோரிக்கை மனுவை அளிக்க ஐ.நா அதிகாரிகளை சந்திக்க முயன்றபோது மாணவர்களை சந்திக்க ஐ.நா அதிகாரிகள் மறுத்ததால் யுனிசெப் அலுவகத்தில் ஏற்றப்பட்டிருந்த ஐ.நா. சபையின் கொடியை மாணவர்கள் கிழித்தெறிந்தனர்.

அமெரிக்க தீர்மானத்திற்கு எதிராகவும், ஐக்கிய நாடுகள் சபைக்கு எதிராகவும் முழக்கமிட்ட மாணவர்கள் தங்களது கோரிக்கையை ஏற்கக்கோரி யுனிசெப் அலுவலகத்திலேயே சாகும்வரை உண்ணாவிரதத்தை மேற்கொள்ளப்போவதாக அறிவித்தனர்.

சுமார் ஒருமணிநேரத்திற்கு பின் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் மாணவர்கள் அலுவலகத்திற்கு போட்டிருந்த பூட்டை உடைத்து போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மாணவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட மாணவர்கள் தற்பொழுது சாஸ்திரி நகர் பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளனர்.

தமிழீழத்திற்கான பொதுவாக்கெடுப்பை நடத்தக்கோரி மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் தமிழகம் முழுவதும் வலுப்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# இறந்த பெண்ணின் சடலம் இலங்கை வராத மர்மம்

(றியாத்)

சவூதி அரேபியாவில் இறந்த ஒரு பெண்ணின் உடல் 8 மாத காலமாகியும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்று அவரது குடும்பத்தினர் முறையிட்டிருக்கிறார்கள்.

இது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து, சடலத்தை வருவித்துத் தருமாறு உறவினர்கள் இலங்கை வெளிவிவகார அமைசசிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம், கல்முனையில் நற்பிட்டிமுனை கிராமத்தை சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயாரான கணபதிப்பிள்ளை ரமணி என்ற பெண் குடும்ப கஷ்டம் காரணமாக கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 25 ஆம் திகதி சவூதி அரேபியாவுக்கு வீட்டு வேலைக்காகச் சென்றார்.

இவர் கடந்த ஆண்டு ஜூலை மாதம் 14 ஆம் திகதி சுகவீனம் காரணமாக இறந்துள்ளதாக ஆகஸ்ட் மாதம் 25 ஆம் திகதி அவரின் வீட்டிற்கு தகவல் அனுப்பபட்டிருந்தது. உடலை இலங்கைக்கு கொண்டுவந்து தருமாறு கேட்டு சம்மதக் கடிதத்தினை அமைச்சுக்கு கணவர் தெரிவித்திருந்தார். ஆனால் இதுவரை, சுமார் 8 மாதகாலமாகியும் உடல் இலங்கைக்கு கொண்டுவரப்படாதுள்ளது. (எ-11)

# ஆணைக்குழு அறிக்கை சட்டமா அதிபரிடம்

(முல்லைத்தீவு)

காணாமல் போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சி முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாண மாவட்டங்களில் மேற்கொண்ட சாட்சி பதிவுகளின் அறிக்கையை நிறைவு செய்திருக்கிறது.

இந்த அறிக்கை தற்போது இலங்கை சட்டமா அதிபரின் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சட்ட மா அதிபர் திணைக்களம் இந்த அறிக்கையை ஆராய்வு செய்து அதன் பரிந்துரைகளை மீண்டும் காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக்குழுவிடம் வழங்கும்.

இதனை அடுத்து இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-11)

# புற்றுநோய் வைத்திய விடுதிகள் முற்றாக தெல்லிப்பழைக்கு மாற்றம்

யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கிக் கொண்டிக்கும் புற்றுநோய் வைத்திய விடுதிகள் எதிர்வரும் காலங்களில் முற்றாக தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றுவதற்குச் சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதென யாழ்போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக யாழ் போதனா வைத்தியசாலையில் இயங்கிக் கொண்டிருக்கும் புற்றுநோய் வைத்திய ஆண்கள் (விடுதி இல.26A) எதிர்வரும் மார்ச் 15,16,17 ஆம் திகதிகளில் தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலைக்கு இடமாற்றப்படவுள்ளது.

இம் மூன்று தினங்களும் இவ்விடுதியில் நடைபெறும் அனைத்து சேவைகளும் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டு மீண்டும் எதிர்வரும் மார்ச் 17 ஆம் திகதி முதல் அனைத்து சேவைகளும் தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலையில் வழமைபோல் செயற்படும்.

அத்துடன் மறு அறிவித்தல் வரை புற்றுநோய் வைத்திய பெண்கள் விடுதி (விடுதி இல. 26B) மற்றும் கிளினிக் தொடர்ந்தும் யாழ். போதனா வைத்தியசாலையிலேயே இயங்கும்.

அதேவேளை நோயாளர் வசதி கருதி இலவச நோயாளர் போக்குவரத்துச் சேவைகள் மார்ச் 17 ஆம் திகதி முதல் யாழ்.போதனா வைத்தியசாலை பருத்தித்துறை வீதி நுழைவாயிலருகிலிருந்து தினமும் காலை 7.30 மணிமுதல் மாலை 4 மணிவரை 2மணித்தியாலங்களுக்கு ஒருமுறை தெல்லிப்பழை ட்ரெயில் புற்றுநோய் வைத்தியசாலையிலிருந்து யாழ்.போதனா வைத்தியசாலைக்கும் நடத்தப்படவிருக்கின்றது.

அத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலை கிளினிக் பிரிவில் இயங்கி வந்த இரத்தம் சேகரிக்கும் நிலையம் தொடர்ந்தும் அதே இடத்தில் இயங்கும் எனவும் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஏ)

# பிரபல வர்த்தகர் சிட்னியில் கொலை

(சிட்னி)

அவுஸ்திரேலியாவின் சிட்னிப் பகுதியில் பிரபல வர்த்தகர் ஒருவர் கத்தி யால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் இரவு இவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். 48 வயதான ஈசன்என்று அழைக்கப்படும் வேலுப்பிள்ளை வாகிசன் என்பரே கொலை செய்யபட்டுள்ளார். வீடு, காணி போன்ற சொத்து வர்த்தகத்தில் ஈடுபடும் நபரே தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

வர்த்தக நிலையத்திற்கு எதிரில் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையிலிருந்து இவர் அவுஸ்திரேலியாவிற்கு சென்று குடியேறியுள்ளார். தாக்குதல் சம்பவத்தில் காயமடைந்த ஈசனை பொலிஸார்வைத்தியசாலையில் அனுமதித்த போதிலும், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (எ-11)


தற்போது புதிய இடத்தில் வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை




தற்போது எமது கிளை புதிய இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது **இல. 30 கனகபுரம் வீதி, கிளிநொச்சிக்கு** மாற்றப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், அன்பளிப்புப் பொருட்கள் உணவுப் பண்டங்கள் என்பவற்றை மிகவிரைவாக அனுப்பிட. 220ற்கு மேற்பட்ட நாடுகளுக்கான மிகக் குறைந்த கட்டணம்.

11Kg மேற்பட்ட பொதிகளுக்கு 1Kg க்கான மிகக் குறைந்த கட்டணம்

- லண்டன் - 650/=
- பிரான்ஸ் - 750/=
- கனடா - 900/=
- டென்மார்க் - 800/=
- அவுஸ்திரேலியா - 750/=
- சுவிஸ்- 850/=
- நெதர்லான்ட் - 850/=
- நோர்வே - 900/=
- இத்தாலி - 875/=
- ஜேர்மனி - 700/=

உங்கள் இல்லங்களில் இருந்தவாறே பொதிகளை அனுப்பிட தொடர்பு கொள்ளவும்
0770569642



**திருமுருகன் கொம் நெற்**
இல. 271A, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (ஆல் சிலோனிற்கு முன்பாக அமைந்துள்ளது.)
பிரதான வீதி, சங்கானை. 021 222 7835
இல.46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல.18, பிரதான வீதி, நெல்லியடி. (HNP வங்கிக்கு அருகாமையில்)
இல. 30, கனகபுரம் வீதி, கிளிநொச்சி
TCN EXPRESS இல. 28, நெல்சன் பிளேஸ், கொழும்பு- 6



3-5 வேலை நாட்களில் உரிய முகவரியில் ஒப்படைக்கப்படும்

(C-6739)


# கச்சதீவு உற்சவத்தில் 3500 இந்தியர்கள்

கச்சதீவில் அமைந்துள்ள புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழாவில் 3 ஆயிரத்து 500 இந்திய கத்தோலிக்கர்கள் கலந்து கொள்ள உள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த உற்சவம் எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் கலந்து கொள்ள 3 ஆயிரம் 500 இந்தியர்கள் விண்ணப்பித்துள்ளதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தனர்.

வெளிவிவகார அமைச்சின் ஊடாக இந்த விண்ணப்பங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவை சேர்ந்த கத்தோலிக்க பக்தர்களுடன் இலங்கையை சேர்ந்த கத்தோலிக்க பக்தர்களும் பெருமளவில் தேவாலய உற்சவத்தில் கலந்து கொள்ள உள்ளனர்.

கச்சதீவில் நடைபெறும் வருடந்த உற்சவத்திற்கு தேவையான சகல வசதிகளையும் கடற்படையினர் வழங்க உள்ளனர். (எ-11)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**எமது கிராம பாடசாலையாகிய மு/விசுவமடு ம.வி யானது புதுக்குடியிருப்பு கோட்டமட்ட மெய்வன்மைப் போட்டியில் முதலிடம் பெற்றுள்ளது என்பதில் பெருமிதம் அடைவதோடு, இவ் வெற்றிக்கு வித்திட்ட பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர், வீரர்கள் மற்றும் பாடசாலை சமூகத்தினரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.**



மத்திய நூலகம்,
மத்திய சனசமூக நிலையம்,
விசுவமடு.

(சி- 6741)

## TCT Multi Trade Center இல் விற்பனையாகும்


**Double Energy Saving Para Lights LED Bulbs** மூலம் ஏனைய மின் விளக்குகளுக்கு பயன்படுத்தும் மின்சார்த்தில் 75% - 90% சேமிக்க!!! (**LED** என்பது சுருள் பல்புகளோ **U** - பல்புகளோ இல்லை)

| | 3w=25w | 5w=35w | 5w=50w |
|---|---|---|---|
| வாட்ஸ் சேமிப்பு | 22w | 30w | 45w |
| வழக்கமான விலை | ~~700/=~~ | ~~950/=~~ | ~~1200/=~~ |
| யாழ்ப்பாணத்திற்கான அறிமுக விலை | 400/= | 500/= | 700/= |



மோதங்களுக்கு உத்தரவாதம் Serew வகை bulbs தற்போது விற்பனையில் இல்லை

Para Light இன் ஏனைய தயாரிப்புகள்



01 02 03 04 05 06

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | நுளம்பு ராக்கெட் (Musquito Swatters) | 500/= | 02 | நுளம்பு கொல்லி (Musquito Killer) | 990/= |
| 03 | ஈ/பூச்சிக் கொல்லி (Pest Killer) | 2190/= | 04 | 300M சேச் லைட் (Search Light) | 990/= |
| 05 | அவசர மேசை விளக்கு (Emergency Table Lamp) | 790/= | 06 | LED லாம்பு மற்றும் பேட்டரி சார்ஜர் (Solar Lantern with 7 Led bulbs) | 990/= |

TCT Multi Trade Center இல் (527,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்) இத் தயாரிப்புகளை நீங்கள் பெற்றுக் கொள்ளலாம்.
மொத்த கொள்வனவிற்கு 0789130813/ 0788745253 அழையுங்கள். (5810)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

### நாடகத்தில் நடித்த காமராஜர்

பெருந்தலைவர் காமராஜர் நாட்டுக்குச்செய்த பணிகளையெல்லாம் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும்.

அவருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு சுவையான செய்தி என்னவென்றால், அவர் நாடகத்திலேயும் நடித்து இருக்கிறார் என்பதுதான். அவர் நிஜ வாழ்க்கையில் என்றுமே நடித்தது இல்லை; ஆனால் நாடகத்தில் நடித்து இருக்கிறார்.

நாடகத்திலே அவர் நடிக்கும்போது ஒரு சுவையான சம்பவம் நடந்தது. அது மிகவும் வேடிக்கையானதும் கூட. அவர் நடித்த நாடகத்தின் பெயர் 'மார்க்கண்டேயன்'.

மார்க்கண்டேயன் கதை உங்களுக்கெல்லாம் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். 16 வயது வரை தான் அவனுக்கு ஆயுள் என்பது விதி. அதன் பின், அவனை எமதர்மராஜா பிடித்துக் கொண்டு போய்விடுவார். நாடகத்திலே பெருந்தலைவர் காமராஜருக்கு சிவபெருமான் வேடம். மார்க்கண்டேயனாக நடிக்கும் ஒரு பையன், எமனாக நடிக்கும் ஒரு ஆள், சிவபெருமானாக நடிக்கும் காமராஜர் ஆகிய மூன்று பேரும் ஒரு காட்சியில் வருகிறார்கள்.

நாடகக் கதையின்படி மார்க்கண்டேயனுக்கு 16 வயது முடிந்து விட்டது. எம தர்மராஜா மார்க்கண்டேயனை பிடித்துக் கொண்டு போக பாசக் கயிறோடு வரும் பொழுது இந்த மார்க்கண்டேயன் சிவபெருமான் காலில் விழுந்து, ''என்னைக் காப்பாற்றுங்கள்'' என்று சொல்லி கெஞ்சுவான். சிவபெருமான் அந்த எமனை விரட்டி அடித்து அந்தப் பையனை காப்பாற்றுவார். இதுதான் கதை.

அந்தக் கதைப்படி போயிருந்தால் பிரச்சனை எதுவும் ஏற்பட்டிருக்க வாய்ப்பில்லை. ஆனால் ஏற்கனவே மிகவும் மனித நேயம் உள்ளவர் அல்லவா பெருந்தலைவர் காமராஜர்!

எம தர்மராஜா பாசக்கயிறைப் பிடித்தபடி வருகிறார். சிவபெருமானின் காலை மார்க்கண்டேயன் பிடித்துக் கொள்கிறான். கொஞ்சம் வசனம் பேசி முடிந்தவுடனே சிவபெருமான் எமதர்மராஜாவிடம் சொல்கிறார், நீ அந்தப் பையனைத் தொடக்கூடாது. என்னை நம்பி வந்திருக்கிறான் அவன். அவனை விட்டுவிடு என்று.

எமதர்மராஜாவாக நடித்தவர் ஏற்கனவே ஒரு மூர்க்கமான ஆள். வசனத்தின்படி பார்த்தால் உடனே அவர் மார்க்கண்டேயனை விட்டு விட்டுப் போயிருக்க வேண்டும். ஆனால் என்னவோ தெரியவில்லை. ரொம்ப மூர்க்கமாக அந்தப் பையனை அடிக்கிறதுக்கு போனார். பிடித்து இழுக்கப் போனார். உடனே சிவபெருமானாக வேடமணிந்திருந்த காமராஜருக்கு இதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அது நாடகம் என்பதையும் அவர் மறந்து விட்டார், அது நடிப்பு என்பதையும் மறந்து விட்டார். ஒரு சின்னப் பையனை ஒரு முரட்டு ஆள் அடிக்க வருகிறானே என்ற எண்ணம் தான் அவர் மனதிலே அப்போது இருந்தது. ஏனென்றால், தீமையைக் கண்டு பொங்கி எழுகிற மனோபாவம் எப்போதுமே அவரிடம் இருந்தது. உடனே அது நாடகம் என்பதையும் மறந்துவிட்டு, அந்த எமனாக நடித்தவரை ஓங்கி ஒரே தள்ளாகக் கீழே தள்ளி விட்டார்.

''நான் சொல்லிக் கொண்டே இருக்கிறேன், அந்தப் பையனை ஒன்றும் செய்யாதே என்று. திரும்பவும் அந்த பையனை தொந்தரவு செய்து கொண்டிருக்கிறீயே. உனக்கு மனிதாபிமானம் இல்லையா?'' என்று எமனைத் திட்டி இருக்கிறார்.

இந்த நிகழ்ச்சி நாடகம் என்பதையும் தாண்டி காமராஜருக்கிருந்த மனநிலையைக் காட்டுகிறது. இந்த மனித நேயம்தான் இப்போது மனிதர்களுக்கு தேவைப்படுகிறது. அதாவது வலியவர்கள் எளியவர்களை துன்பப்படுத்தக்கூடாது என்ற மனோபாவம். இந்த மாதிரி நாடகத்திலே சுவையான சில காட்சிகள் எல்லாம் நடந்து விடும். எதிர்பாராத திருப்பங்கள் எல்லாம்கூட வரும்.

ஒரு வேடிக்கையான சம்பவம்! இப்போது நீங்கள் வானொலி நாடகம் கேட்கிறீர்கள். இப்போது வானொலியில் ஒலிபரப்புகிற நாடகங்களுக்கும் முன்பு வானொலியில் ஒலிபரப்பான நாடகங்களுக்கும் மிகவும் வித்தியாசம் உண்டு. இப்போது நாடகத்தை ஒலிநாடாவில் ஒலிப்பதிவு செய்து உங்களுக்கு நாடகத்தை கசட்டிலிருந்தோ, சி.டி.யிலிருந்தோ ஒலிபரப்புகிறார்கள். ஆனால், முன்பு அப்படி இல்லை. அரங்கிற்குள்ளே நேரடியாக நாடகத்தில் நடிப்பார்கள். அது உடனடியாக நேயர்களுக்கு வந்து சேரும். நேரடி ஒலிபரப்பு.

இந்த மாதிரி நேரத்தில் நடந்த சுவையான செய்தி:

ஒலிப்பதிவு கூடத்தில் எல்லா ஒலிக்குறிப்புகளும் அடங்கிய கசட்டை டேப் ரிக்கார்டரில் போட்டு தயாராக வைத்திருப்பார்கள். தேவையான பட்டனை அழுத்தி தேவையான ஒலியைக் கொண்டு வருவார்கள்.

அப்படித்தான், ஒரு நாள் ஸ்டூடியோவுக்குள் நேரடியாக ஒரு நாடகம் நடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு பெண்ணுக்கு பிரசவம் ஆவதுபோல காட்சி.

குழந்தை பிறந்துவிட்டது என்ற வசனம் வந்தவுடன் குழந்தை அழுகிற ஒலியை உண்டாக்க அதற்கான பொத்தானை அங்கிருக்கும் ஒலிக்குறிப்பாளர் அழுத்த வேண்டும். அவர் தவறுதலாக வேறு ஒரு பொத்தானை அமுக்கி விட்டார். அது நாய்க்குட்டி கத்துகிற ஒலி.

இப்போது நாய்க்குட்டி கத்துகிற ஒலி வானொலியில் கேட்டுக் கொண்டிருக்கிறது. நேயர்களுக்கு ஒரே குழப்பம்.

அப்போது உள்ளே நடித்துக் கொண்டிருந்த பெரியவர் எப்படித் திறமையாகச் சமாளித்தார் தெரியுமா?

குழந்தை பிறந்த வீட்டில் யார் நாய்குட்டியை விட்டது என்று ஒரு போடு போட்டார் அவர்.

ஒலிக்குறிப்பாளர் உடனே சுதாரித்துக் கொண்டு, குழந்தை அழும் ஒலியை உடனே ஒலிபரப்பினார். நாடகம் தப்பித்தது.

இளசை சுந்தரம்

# பண வெகுமதிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

நிதி திட்டமிடல் அமைச்சின் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையினால் 2013 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களுடைய பிள்ளைகளுக்கு பண வெகுமதிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப் பண வெகுமதிகள் பாடசாலைப்பரீட்சார்த்திகளுக்குமட்டும்பொருந்தும். இதற்கமைய 2013 ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் அதி கூடிய புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்த ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதிய அங்கத்தவர்களின் பிள்ளைகள் 5 ஆயிரம் பேருக்கு தலா ஒவ்வொருவருக்கும் 12 ஆயிரம் ரூபா பெறுமதியான வெகுமதிகள் அவர்களின் உயர் கல்விக்காக ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையினால் வழங்கப்படவுள்ளது.

முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியைக் கொண்ட 9"×4" அளவுடைய தபால் உறையில் தலைமை அலுவலகம் புலமைப் பரிசில்கள் பிரிவு இல.92, கிருள வீதி, நாரஹென்பிட்டி. கொழும்பு-05 எனும் முகவரிக்கு எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமைக்கு முன் னர் அனுப்பி வைப்பதன் மூலம் தபால் விண்ணப்பங்களைப்பெற்றுக்கொள்ள முடியும்.

இதேவேளை விண்ணப்பத்தினை இல.70, மார்டின் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அலு வலக நேரத்தில் நேரடியாக வருகை தருவதன் மூலமும் www. etfb.lk எனும் எமது இணையத்தளத்திலும் பெற்றுக்கொள்ள முடியும்.

பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் விண்ணப்ப முடிவுத்திகதிக்கு பின்னர்கிடைக்கப்பெறும்விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

பூரணப்படுத்தப்பட்டவிண்ணப்பங்கள் எதிர்வரும் 30 ஆம்திகதிஞாயிற்றுக்கிழமை அல்லது அதற்கு முன்னரோ புலமைப்பரிசில் அலுவலர், புலமைப் பரிசில்கள் பிரிவு, ஊழியர்நம்பிக்கைப் பொறுப்பு நிதி யச்சபை, இல.92, கிருள வீதி, நார ஹென்பிட்டிகொழும்பு -05 எனும் முகவரிக்க பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும் அல்லது நேரில் கையளித்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களு க்கு தொடர்பு கொள்ள புலமைப்பரிசில் அலுவலரின் தொலைபேசி இலக்கங்களான 011-2369685, 011-2368162 ஆகியவற்றுடன் தொடர்பினை ஏற்படுத்தி தகவல்களைப் பெற முடியும். (2)

## சமூகம் தருமாறு உறவினருக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் கடந்த 8 ஆம் திகதி சனிக்கிழமை இரவு 9.30 மணியளவில் வீதியோரத்தில் காணப்பட்ட நடராஜா (வயது 68) என்பவர் பொலிஸ் அதிகாரிகளால் யாழ். போதனா வைத்தியசாலை க்கு கொண்டு வரப்பட்டு விடுதி இலக்கம் 08 இல் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை இவரது உறவினர்கள் எவரும் சமூகம் தரவில்லை. கரணவாய் வடக்கு, கரவெட்டி என்பது இவரது முகவரியென தெரிய வந்துள்ளது. எனவே இவருடைய உறவினர்கள்இருந்தால் வைத்தியசாலைக்கு உடன் சமுகமளிக்குமாறு யாழ்.போதனா வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் ச.ஸ்ரீபவானந்தராஜா அறிவித்துள்ளார். (2)

## கவிதை நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வள்ளுவர்புரம் யோ.புரட்சி எழுதிய எதிர் வீட்டு நாயும் என் ஏழை நாயும் எனும் கவிதை நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு முல்லைத்தீவு கடற்கரையில் அறிவிப்பாளர் ரி.எஸ்.முகுந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

கடற்கரையில் முதன்முதலில் கவிதை நூல் வெளியிடப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-9)

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 30 | 20 |
| உருளைக்கிழங்கு | 90 | 50 | 90 |
| பச்சைமிளகாய் | 70 | 60 | 80 |
| தக்காளி | 35 | 30 | 60 |
| மரவள்ளிக் கிழங்கு | 35 | 30 | 40 |
| கோவா | 30 | 40 | 40 |
| கரட் | 90 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 50 |
| வாழைக்காய் | 30 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 40-60 | 70-100 |
| பெரிய வெங்காயம் | 55-70 | 50-60 | 70 |
| பாகற்காய் | 90 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 20 | 20 | 50 |
| பயற்றங்காய் | 70 | 70-80 | 80 |
| லீக்ஸ் | 50 | 40 | 80 |
| பீற்றூட் | 20 | 20 | 40 |
| கறிமிளகாய் | 70 | 50 | 100 |
| முருங்கைக்காய் | 200-350 | 300 | 320 |
| போஞ்சி | 60 | 150 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | - | — |
| கீரை - 1 பிடி | 5-15 | 10 | 25 |
| [illegible] | 40-70 | 60-70 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50-60 | 40-45 |
| இராசவள்ளி | 80-120 | 90 | 100 |

## இராசி பலன்

14.03.2014
(மாசி 30, வெள்ளிக்கிழமை )
சூரிய உதயம் காலை 6.20 மணிக்கு
திரயோதசி முன்னிரவு 8.49 மணிவரை
ஆயிலியம் முற்பகல் 9.06 மணிவரை
இராகுகாலம் 10.51- 12.21 மணி வரை
சுபநேரம் 6.21-7.51 மணிவரை
காரடையா நோன்பு
பிரதோச விரதம்

**மேடம்** பிள்ளைகளின் தேவைகளை நிறைவு செய்வதில் அக்கறை காட்டுவீர்கள், சந்திப்பவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**இடபம்** வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும், விருந்தினர் வருகையுண்டு, கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு, உறவினர்களின் சுபசெலவுகள் ஏற்படலாம்.

**மிதுனம்** உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், பொதுத் தொண்டுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** உங்களின் மணியான யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும் , புதிய பொருட் சேர்க்கையுண்டு, போட்ட திட்டங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**சிங்கம்** குடும்பச் சுமை கூடும், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.

**கன்னி** வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் ஏற்படலாம், தொழிலில் சில மாற்றங்களை உருவாக்க முற்படுவீர்கள், சிலர் மீது காரணமில்லாமல் கோபப்படுவீர்கள்.

**துலாம்** எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவி செய்ய முன்வரலாம், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், விரதம் , வழிபாடுகளில் நம்பிக்கை கூடும்.

**விருச்சிகம்** சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், பணத்தேவைகள் பூர்த்தியாகும், செய்தொழில் மேன்மையுண்டு, அந்நியர் உதவியுண்டு, ஆரோக்கியமான நாள்.

**தனுசு** உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், ஆலய வழிபாடு ஆனந்தம் தரும், பெரிய மனிதர்களின் ஒத்தாசைகள் கிடைக்கலாம், பயந்த சுபாவமுண்டு.

**மகரம்** கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள் , சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், போசன சுகமுண்டு, முயற்சிகளில் அதிக கவனம் எடுக்க வேண்டிய நாள்.


**கும்பம்** இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள்.

**மீனம்** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், தேக நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் விலகும், சுவாரஸ்யமான நாள் , கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும் ,தொழில் விருத்தியுண்டு.


வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கின் மாபெரும் போர்



## துடுப்பாட்டத்தை தடுமாற்றியது



### சுழற்பந்து வீச்சு



(மைதானத்திலிருந்து க.மதீசன்)

சுழல்பந்து வீச்சாளர்களின் துல்லியமான சுழலில் தட்டுத் தடுமாறினார்கள் துடுப்பாட்ட வீரர்கள்.


யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியின் லோகதீஸ்வர் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மதூசன், நிருபனின் சுழலில் தடுமாற்றினார்கள் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரி, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் துடுப்பாட்டவீரர்கள்.

வடக்கின் மாபெரும் போர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான மாபெரும் கிரிக்கெட் போட்டி நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இரு கல்லூரி கிரிக்கெட் ரசிகர்கள் மத்தியில் கோலகலமாக பான்ட், மேளதாள ஆட்டத்துடன் ஆரம்பமாகியது.

இப் போட்டியினை பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா இரு கல்லூரி வீரர்களுக்கும் கைலாகு கொடுத்து போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணித் தலைவர் கே.ஜுனியஸ்கனிஸ்ரன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி நிதானமாக தனது துடுப்பாட்டத்தை ஆரம்



பித்தது. மத்திய கல்லூரியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களாக கே.சன் சயன், எப்.ஜெயந்திரன் ஆகியோர் 19.2 ஓவர்களில் 37 ஓட்டத்தினை இணைப்பாட்டமாக பெற்றபோது மத்திய கல்லூரியின் முதலாவது விக்கெட் வீழ்த்தப்பட்டது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி மதிய போசன இடைவேளைவரை 51 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டினை இழந்தது. இதில் போசன இடைவேளைக்கு பிறகு துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி அணி, சென்.ஜோன்ஸ் கல்லூரியின் லோகதீஸ்வரனின் சுழலில் சிக்கியது அவ்வணி 63 ஓவர்களில் அனைத்து விக்கெட்டினையும் இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக பி.நிரோஜன் 40 ஓட்டத்தினையும் மத்திய கல்லூரி அணித்தலைவர் கே.ஜுனியஸ்கனிஸ்ரன் 36 ஓட்டத்தினையும் கே.சன்சயன் 26 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர்.

பந்து வீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி சார்பாக ஆர்.லோகதீஸ்வரன் 20.2 ஓவர்கள் பந்துவீசி 7 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 53 ஓட்டத்தினை விட்டுக்கொடுத்து 6 விக்கெட்டினை கைப்பற்றினார். மற்றும் எ.கானாமிர்தன், கஜிபன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டினை கைப்பற்றினர்.

பின்னர் தனது முதலாவது இன்னிங்ஸிக்காக துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி – மத்திய கல்லூரி அணியின் மதூசன், நிருபனின் சுழலில் தடுமாறியது அவ் அணி நேற்றைய முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் 50 ஓட்டங்களுக்குள் 6 விக்கெட்டினை இழந்துள்ளது. போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும். (23)










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலியல் துஷ்பிரயோகம்

# இரு சந்தேக நபர்கள் பொலிஸாரால் கைது

## இருவருக்கு வலைவிரிப்பு

வடமராட்சி வல்லிபுர ஆலயத்திற்கு வழிபாடாற்றி விட்டு முள்ளியாக்கரு வெளிப் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த யுவதியைக் கடத்தி பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் ஒருவரை நெல்லியடிப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கடந்த 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை குறித்த யுவதி வல்லிபுர ஆலயத்திற்குச் சென்று விட்டு வடமராட்சி முள்ளியாக்கரு வெளிப்பகுதியால் பயணித்துக் கொண்டிருந்த போது முச்சக்கர வண்டியில் வந்த மூன்று இளைஞர்கள் குறித்த யுவதியைக் கடத்திச் சென்று பாலியல் துஷ்பிரயோகம் செய்துள்ளனர். இச்சம்பவத்துடன் தொடர்புடைய மூவரையும் நெல்லியடி பொலிஸார் தேடி வந்தனர்.

இந்நிலையில் தலைமறைவாகி இருந்த சந்தேக நபர்களில் ஒருவர் நேற்று கொடிகாமம் பிரதேசத்தில் வைத்து நெல்லியடி பொலிஸார் கைது செய்துள்ளனர்.ஏனைய இரு சந்தேக நபர்களையும் பொலிஸார் தேடி வருகின்றனர். (2-9-60)

# வலி.வடக்கு மக்கள் பதிவினை உறுதிப்படுத்துங்கள்-சஜீவன்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து தற்போது யாழ்.மாவட்டத்திற்குள் வசிக்கின்ற வலி.வடக்கு மக்களை ஏற்கனவே பிரதேச செயலகங்கள் ஊடாக பதிவு செய்த மீள்குடியேற்ற பதிவினை இரண்டு நாட்களுக்குள் உறுதிப்படுத்துமாறு வலி.வடக்கு இடம்பெயர்ந்தோர் மற்றும் புனர்வாழ்வுக் குழு தலைவர் எஸ்.சஜீவன் வலியுறுத்தியுள்ளார்.

தற்போது பிரதேச செயலகங்களில் மீள்குடியேற்ற பதிவுகள் உறுதிப்படுத்தும் வேலைகள் இடம் பெற்று வருகின்றன.

இந்நிலையில் வலி.வடக்கில் மீள்குடியேற்றப்படுகின்றவர்களின் எண்ணிக்கையை குறைத்துக் காட்டுவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதனால் மக்கள் விழிப்புடன் செயற்பட்டு தங்களுடைய பதிவுகளை உறுதிப்படுத்துவது அவசியமென குழுத் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-4)

## சிறப்பு இசையரங்கு

இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் சிறப்பு இசையரங்கு இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இணுவில் மஞ்சத்தடி அருணகிரிநாதர் கலையரங்கத்தில் நடைபெறும்.

கலை வளர்ச்சி மையத்தின் தலைவர் வி.கே.குகானந்தன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வட.மாகாண சபை அவைத்தலைவர் சீ.வி. கே. சிவஞானம், சிறப்பு விருந்தினராக வட.மாகாண திரைப்பட சங்கத்தலைவர் என். கேசவராஜா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்களின் குரலிசையில், வயலின் பி.சியாமகிருஷ்ணா, மிருதங்கம் கே.நந்தகுமார், கடம் கே.ரவிசங்கர்ஆகியோரும்பாட்டினை இசைக் கலைமணி வர்ண ராமேஸ்வரனும் அதற்கான வயலின்ஏ.ஜெராமன், மிருதங்கம் கே.பிரணவகரன், கெஞ்சிரா என்.சிவசுந்தர சர்மா ஆகியோர் இசைக்கவுள்ளனர். (2-9)


## கிளிநொச்சி அருள்மிகு கந்தசாமி தேவஸ்தான வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 27.03.2014 வியாழக்கிழமை காலை பத்து மணிக்கு தேவஸ்தான மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது. இந்த ஆலயத்தின் வளர்ச்சிக்கும் அதன் தேவைகளை நிறைவேற்றும் முகமாக ஆலய உபயகாரர்கள், பொதுமக்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை.

(சி-6737)



## நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி

### அறிவித்தல்

கைதடியில் 58 வருடங்களாக இயங்கி வரும் யாழ். நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலையானது காது கேளாத, கண்பார்வை இழந்தவர்களுக்காக தரம் 01 இலிருந்து தரம்11 வரை அரசாங்க பாடத்திட்டப்படி கல்வி புகட்டலையும் பாடசாலை வேளையின் பின்னர் தொழிற் பயிற்சிகளையும் வழங்கி வருகின்றது. உடல், உள , ஆரோக்கியமான காது கேளாத, கண்பார்வை இழந்த புதிய மாணவர்களை இணைத்துக் கொண்டிருக்கின்றோம்.

எனவே, பெற்றோர்களே, பாதுகாவலர்களே உடல், உள ஆரோக்கியமான காது கேளாத, கண்பார்வை இழந்த உங்கள் பிள்ளைகளை வீட்டுக்குள் முடக்கி வைத்து அவர்களின் எதிர்காலத்தை பாழாக்காது எமது பாடசாலையுடன் இணைத்து அவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஊக்கப்படுத்தவும். தூர இடங்களில் உள்ள மாணவர்களுக்கும் விடுதியில் தங்க விரும்புபவர்களுக்கும் இலவச விடுதி வசதிகள் உண்டு.

தொடர்புகளுக்கு:
அதிபர்
யாழ். நவீல்ட் செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி, யாழ்ப்பாணம்.
தொ.பே. இல:0213213512

இ



## பதவி வெற்றிடம்

- உதவி ஆசிரியர்
- அலுவலகச் செய்தியாளர் (உள்ளகம், வெளியகம்)

### உதவி ஆசிரியர்

தகைமை :- 35 தொடக்கம் 55 வயது வரையான இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்

கல்வி :-க.பொ.த. உயர் தரத்தில் சித்தி

ஊடகத்துறை அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன் கல்வித் தகைமை கவனத்தில் கொள்ளப் படமாட்டாது.

### அலுவலகச் செய்தியாளர்

தகைமை :- 28 தொடக்கம் 50 வயது வரையான இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

கல்வி :- க.பொ.த.உயர்தரத்தில் சித்தி

குறிப்பு

i. யாழ்.நகரை அண்மித்த தூரங்களில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ii. எட்டிய தூரத்தில் இருப்பவர்களுக்கு தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மேற்குறித்த தகைமைகளும் ஆர்வமும் உடையவர்கள் தமது சுய விபரங்கள் அடங்கிய விண்ணப்பத்துடன் 15.03.2014 (சனிக்கிழமை) காலை 10 மணிக்கு வலம்புரி அலுவலகத்திற்கு நேரில் வரவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இ



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 கிறிஸ்தவம்<br>நட்சத்திரம்: மகம் 2<br>கி.பா: 58 செவ் 1 இல்<br>உயரம்: 6'4"<br>தகைமை/தொழில்: BSc / அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>தொ.இ: B/2918 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 26.75 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: பல் வைத்தியர்<br>எதிர்பார்ப்பு: MBBS வைத்தியர் மட்டும்<br>தொ.இ: G/2917 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: சதயம் 2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L / முகாமையாளர்<br>தொ.இ: B/2919 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 2<br>கி.பா: 23 செவ் 12 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L, BBA (Final Year)<br>தொ.இ: G/2920 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: பரணி 4<br>கி.பா: 11 செவ் 4 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: A/L, High Tech / Phone Show Room (பிரான்ஸ் PR)<br>தொ.இ: B/2922 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா: 24.75 சூரி செவ் 2 இல்<br>உயரம்: 5' தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2921 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 2<br>கி.பா: 49.25<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L / வியாபாரம்<br>தொ.இ: B/2924 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: கேட்டை 2<br>கி.பா: 21<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc / Demo<br>தொ.இ: G/2923 |

### கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழா

துர்க்காபுரம் மகளிர் இல்லத்தின் 32 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் ஆறு.திருமுருகன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.




பல்கலைக்கழக பேராசிரியர் கலாநிதி கார்த்திகேசு குகபாலன் தம்பதியர், சிறப்பு விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர் செல்வி கௌரி செல்வரட்ணம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.


கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட செயலக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை கு.கௌதமன் கலந்து கொள்வார்.

வரவேற்புரையை நிர்வாக சபை உறுப்பினர் திருமதி கலாதேவி பொன்னம்பலம் நிகழ்த்துவார். இதன்போது சிறப்பு மலர் வெளியீடு இடம்பெறும்.

இதன் முதற் பிரதியை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான உப தலைவர் தேச கீர்த்தி லயன் ச.ஆறுமுகநாதன் பெறவுள்ளார்.

தொடர்ந்து, பரிசில் வழங்கல், கலை நிகழ்வுகள் நடைபெறும். (2)

நன்றி:- அததெரண





# மாணவர்களின் உணவு விநியோகத் திட்டத்தை இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்துத் தாருங்கள்

## கனடா உயர்ஸ்தானிகரிடம் குருகுலராஜா வேண்டுகோள்









**வடக்கிலுள்ள பாடசாலை மாணவர்களுக்கான உணவு விநியோகத்திட்டத்தை இவ்வருடத்தோடு நிறுத்தப் போவதாக உலக உணவுத்திட்டம் அறிவித்திருந்தது. இதனை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கு மாறு கனடா நாட்டின் உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்க ளுக்கு தொடர்ச்சியாக 10 வருடங்கள் உதவிகள் வழங்குவதன் மூலமே அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெ ழுப்ப முடியும் என வடமாகாண கல்வி, பண்பாட்டு, விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா தெரிவித்துள்ளார்.**

உலக உணவுத்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கும் திட்டத்திற்கு நிதியுதவி வழங்கும் கனடா நாட்டின் உயர்த்தானிகர் நேற்று யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளுக்கு நேரடியாக சென்று ஆய்வுகளை மேற்கொண்டார்.

இதன்தொடர்ச்சியாக யாழ்.நகுலேஸ்வரா மகாவித்தியாலயத்திற்கு நேற்று முற்பகல் 11 மணியளவில் வருகைதந்த கனடா நாட்டின் உயர்ஸ்தானிகர் ஷெல்லி வைற்றின் வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா மற்றும் பாடசாலை சமூகத்தினருடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டார்.

இதனையடுத்து பாடசாலை மாணவர்களுக்கு கைலாகுகொடுத்து அவர்களுடன் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.

கனடா உயர்ஸ்தானிகருடனான சந்திப்பினையடுத்து கருத்து தெரிவித்த அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் வருகை தந்த இலங்கைக்கான கனேடியத்தூதுவர் உலக உணவுத் திட்டத்தினால் முன்னெடுக்கப்பட்டு வந்த உணவு விநியோகத்தைப் பார்வையிட்டு இங்குள்ள உணவுத் தேவைகள் தொடர்பில் புரிந்து கொண்டுள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கான உணவு விநியோகத்திட்டத்தை இவ்வருடத்தோடு நிறுத்தப்போவதாக உலக உணவுத்திட்டம் அறிவித்திருந்தது. இதனை இன்னும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்குமாறு கோரியிருக்கின்றேன்.

யுத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உலக உணவுத்திட்டம் எவ்வளவு முக்கியம் என்பது தொடர்பில் அவருடன் பேசியுள்ளோம். எங்கள் மாகாணத்தில் போருக்குப்பின்னர் மக்கள் படுகின்ற துன்ப, துயரங்கள் நீங்கள் யாவரும் அறிந்த மிக முக்கியமான விடயமாகும. மூன்று வேளை உணவை வழங்குவதென்பது ஒரு சவாலான ஒன்றாக மாறிவிட்டது.

குறிப்பாக வறுமைக்கோட்டுக்குட்பட்ட குடும்பங்கள் தொழில் வாய்ப்புக்கள் இல்லாத சந்தப்பங்களில் 10இற்குட்பட்ட பாடசாலைப் பிள்ளைகளுக்கு உணவு வழங்குவதில் தாய்மார்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்பதை நாங்கள் அறிந்திருககின்றோம்.

தற்போது அரிசியின் விலை அதிகரித்துள்ளது. இது இன்னும் சில நாட்களில் அதிகரிக்கலாம் என்று எண்ணுகின்றோம். இதனால் நாங்கள் பெரும் சவால்களை எதிர்நோக்க நேரிடலாம். இதனால் தான் இங்கு வருகை தந்துள்ள கனடா நாட்டின் தூதுவரிடம இந்த உணவுத்திட்டத்தை 2016 ஆம் ஆண்டு வரை நீடிக்குமாறு கோரியிருக்கின்றோம். அதனை அவர் சாதகமாகப் பரிசீலிப்தாக நம்பிக்கை தெரிவித்திருக்கின்றார்.

போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தொடர்ச்சியாக 10 வருடங்கள் உதவிகள் வழங்குவதன் மூலமே அவர்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்பதை உலகில உள்ள பல நாடுகளிலும் நாங்கள் பார்த்திருக்கின்றோம்.

நாங்கள் போரினால் பாதிக்கப்பட்டு திரும்பவும் எங்கள் இடங்களுக்கு வந்த பின்னர் இன்னும் சரியான முறையில் அரசு எல்லா முறைகளிலும் எல்லா விடயங்களிலும் சரியான திட்டங்களை நடைமுறைப்படுத்தவில்லை. இந்த நிலையில் எங்கள் தேவைகள் குறித்து பல நாடுகளிடம் கோர வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளோம் .

இதேவேளை, 2020 ஆம் ஆண்டு வரை மக்களுக்கு போதியளவு உதவிகளைப் புரிவதனால் மாத்திரமே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தங்கள் வாழ்வாதாரத்தைக் கட்டி எழுப்ப முடியும் . அத்தோடு இன்று நாங்கள் கலந்துகொண்ட நகுலேஸ்வரா வித்தியாலயத்தில் முன்னர் 600 இற்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்ற நிலையில் தற்போது 250 இற்கு மேற்பட்ட மாணவர்களே கல்வி கற்று வருகின்றனர். இங்கு கல்வி கற்று வரும் மாணவர்கள் இன்று ஒரு சிறந்த கலை நிகழ்வை வழங்கியிருக்கின்றார்கள். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட நலிவடைந்துள்ள மாணவர்களை விளையாட்டு மற்றும் கலை நிகழ்வுகள் மூலம் தான் ஆற்றுப்படுத்த முடியும என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் டி.தயானந்தன் , தெல்லிப்பழை பிரதேசசெயலாளர் ஸ்ரீமோகன், உலக உணவுத்திட்டத்தின யாழ்.மாவட்ட இணைப்பாளர், வடமாகாண கல்வி திணைக்கள அதிகாரிகள் மற்றும் பலர் பங்கு கொண்டிருந்தனர். (2-6)

## சிறப்பு சொற்பொழிவு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினரால் நடத்தும் வருடாந்த சிறப்புச் சொற்பொழிவு எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு உடுவில் மல்வம் பிரதேசத்தில் இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.தர்ப்பணா சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது.

"மஹோற்சவ தத்துவம்" எனும் தலைப்பில் க.ஜெசிதன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார். தொடர்ந்து நிகழ்வுகளும் இடம்பெறும். (2)

## வடமாகாண பாடசாலைகளுக்கு இடையில் விஞ்ஞானப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் விஞ்ஞானப்போட்டிகள் இவ் வருடம் நடைபெறவுள்ளன.

இதன்படி வினாவிடைப்போட்டிக்கான வாய்மூலப் பரீட்சை, கண்காட்சி என்பன நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு முறையே யாழ்.பல்கலைக்கழகத்திலும் இந்து மகளிர் கல்லூரியிலும் இடம்பெறும்.

அத்தோடு பேச்சுப்போட்டி எதிர்வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் இடம்பெறும். இப் போட்டிகளில் பங்கு கொள்வதற்கான அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அந்தந்த பாடசாலை அதிபருடாக விஞ்ஞான பீடத்தின் உதவி பொதுச் செயலாளருடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (2-9)

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் "ESOFT METRO CAMPUS" இனால் நடத்தும் சான்றிதழ் வழங்கும் விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவுக்கு பிரதம விருந்தினராக E-SOFT நிர்வனத்தின் தலைவர் டாக்டர் தயான் றஜபக்ஸ்சே, சிறப்பு விருந்தினராக E-SOFT நிர்வாக அதிகாரி எஸ்.நிஷான் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுடன் ஆறாண்டுகள்...

பிறப்பு
23
12
1964



இறப்பு
14
03
2008

## அமரர் செல்லமுத்து - சுகுமாரி

அன்று எம் கைபிடித்து ஆசையாய் நடை பழக்கி
தவறி விழும் போதினிலே தடுமாறி தாங்கி நின்று
விழி நீரை துடைத்து இதமாக வருடிவிடும்-உன்
இனிய நினைவு இன்னும் பசுமையாய் எம் உள்ளத்தில்
அன்று எம் அழுகைக்கு அர்த்தங் கூறிய அகராதியே...!
இன்று எம்மை விட்டு சென்றதேனோ?
எங்கள் வாழ்வில் எத்தனை கோடி இன்பங்கள்
இருந்தாலும் அது அத்தனையும் நீங்களாகுமா? அம்மா...!
ஆறு ஆண்டுகள் என்ன ஆறாயிரம் ஆண்டுகள் சென்றாலும்
உங்கள் நினைவுகள் பசுமையாக எம் மனதில் எப்போதும்
தெய்வமாக சுமந்து நிற்போம் அம்மா!

கள்ளப்பாடு,
முல்லைத்தீவு.

தகவல்: குடும்பத்தினர்
சுகுமாரி நகைமாடம், முல்லைத்தீவு.

(5801)

# 10 ஆவது ஆண்டு நினைவு தினம்



பிறப்பு
17.04.1918

இறப்பு
04..03.2004

## அமரர் சி. அரியகுட்டி

எமது குடும்பத் தலைவரும் புத்தூர் கிராம சபையின் முன்னாள் உப தலைவரும் சிறந்த சமூக சேவையாளரும் ஆவரங்கால் கிழக்கில் பல நிறுவனங்களை தலைமையேற்று ஆரம்பித்து வழி நடத்திய வருமான அமரர் சி.அரியகுட்டி அவர்களின் 10 ஆவது சிரார்த்த திதி இன்று (14.03.2014) வெள்ளிக்கிழமை உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்படுகின்றது. இதன் நிமித்தம் ஆவரங்கால் கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் சிறப்பு பூசையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசையும் (அன்னதானம்) நடைபெறும். அன்பர்கள் இந்நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மசாந்தி வேண்டிப் பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

அன்னாரின் புகழ் விளங்க இன்றும் சாட்சிகளாக அவரின் தலைமையில் உருவாகிய நிறுவனங்கள்:- ஸ்ரீவிஸ்ணு வித்தியாலயம், ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயம், கலையகம் ச.ச.நிலையம், புத்தகலட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், வீனஸ் விளையாட்டுக்கழகம்.

ஆவரங்கால் கிழக்கு,
மணற்பகுதி,
புத்தூர்.

இங்ஙனம்
பிள்ளைகள்,மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளை சார்பில், மகன் திரு. அ.பரஞ்சோதி
(வடக்கு மாகாண சபை உறுப்பினர்)

(5811)



உ
சிவமயம்

இதயக் கோவினில் வசித்திடும் எம் அன்பு தெய்வத்தின்

# 2 ஆம் ஆண்டு நிறைவு நாள்

## திருமதி லலிதா சண்முகலிங்கம்

(ஓய்வு பெற்ற உப அதிபர்)

அம்மாவாக
15.05.1950



தெய்வமாக
14.03.2012

இமைப் பொழுதும் எம் நெஞ்சில் நீங்காத தெய்வமே!
அம்மாவே லலியே!
தினம் தினம் எம் கண்ணீரால் அபிஷேகம் செய்து உனை
இதயக்கமல மலர் கொண்டு பூசிக்கின்றோம்!
என்றும் எமது அன்பான உறவு தொடரும் அப்பம்மா!
நீங்கள் என்றும் எம்முடன்!
அம்மாவே! லலியே! மாமியே!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்பின் கணவர் V.K.சண்முகலிங்கம் (முன்னாள் யா// மாவட்ட கிரிக்கெட் பயிற்றுநர்)
பிள்ளைகள்: அகிலன், விமலன், மருமகள்: நிரோஜனா, பேரன்: விமலன் பிறனீஸ் (அவுஸ்திரேலியா)

(5792)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# அறிவுப் பானை

..."நிச்சயமாக இதை வெற்றி கொள்ள முடியுமா?" என்று அக்பர் கேட்டார்.

"நான் எப்போதாவது சொல்லிவிட்டு செய்யாமல் இருந்திருக்கிறேனா?" என்று பீர்பால் திருப்பிக் கேட்டதும்,

"நல்லவேளை! என்னுடைய தர்பாரில் நீ ஒருத்தனாவது அறிவாளியாக இருக்கிறாயே!" என்று பீர்பாலைப் புகழ்ந்துவிட்டு மற்றவர்களை ஏளனத்துடன் பார்த்தார்.

அன்று மாலை வீடு திரும்பிய பீர்பால், தன் தோட்டத்தை நன்றாகப் பார்வையிட்டார். மற்ற காய்கறிச் செடிகளுடன், ஒரு பரங்கிக் கொடியையும் பார்த்தார். அதில் பல பூக்கள், பிஞ்சுகள், காய்கள் இருந்தன. உடனே வீட்டிற்குள் சென்ற அவர் ஒரு காலிப் பானையை எடுத்து வந்தார். அதைத் தரையில் வைத்துவிட்டு, பரங்கிக் கொடியில் பிஞ்சுடன் கூடிய ஒரு பகுதியை அந்தப் பானையினுள் நுழைத்து பரங்கிப் பிஞ்சு பானைக்குள் இருக்குமாறு செய்துவிட்டு, கொடியின் நுனியை வெளிப்புறம் நோக்கி இழுத்துவிட்டார். பார்ப்பதற்கு, பறங்கிக் கொடி பானையினுள் புகுந்து, பிறகு வெளியே வந்தது போல் இருந்தது.



"சரியாக இருக்கிறது!" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்ட பீர்பால், தன் மனைவியிடமும், தோட்டக்காரனிடமும் அந்தப் பானையையும், பரங்கிக் கொடியையும் மிகவும் பத்திரமாகப் பாதுகாக்கச் சொன்னார். தினமும் அவர் தோட்டத்திற்கு வந்து பானையினுள் இருந்த பரங்கிப் பிஞ்சைப் பார்வையிட்டு வந்தார். பத்து நாட்களில் பிஞ்சு காயாகிப் பெருத்தது. அப்படியே விட்டு வைத்தால் காய் இன்னும் பெரிதாக வளர்ந்து பானையை உடைத்து விடும் என்ற நிலை வந்த போது, பீர்பால் பானைக்குள் சென்று, வெளியே வந்த கொடியின் பாகங்களைக் கத்தியால் அறுத்துவிட்டார். இப்போது பானைக்குள் நன்கு வளர்ந்த பறங்கிக்காய் மட்டுமே இருந்தது. பானையின் வாயினை துணியினால் இறுக மூடி அடைத்த பீர்பால் பின்னர், அதை தர்பாருக்கு எடுத்துச் சென்றார்.

அக்பரிடம் பானையை அளித்த பீர்பால், "பிரபு... இதுதான் மன்னர் வீரசிம்மன் விரும்பிய அறிவுப்பானை! இதை அவரிடம் அனுப்பி வையுங்கள்" என்றார். அதைக் கண்ட அக்பர், "என்ன, பீர்பால்! விளையாடுகிறாயா? பானையில் எப்படி அறிவை நிரப்ப முடியும்? இதற்குள் உண்மையில் என்ன இருக்கிறது?" என்று ஆர்வத்துடன் அக்பர் கேட்டார்.

"பிரபு, அறிவுப்பானைக்குள் அறிவுதான் இருக்கும். வீரசிம்மன் பானைக்குள் இருக்கும் அறிவை எடுத்துக் கொண்டு, பானையை திருப்பி நமக்கு அனுப்பிவிட வேண்டும். அதை வெளியில் எடுக்கும்போது அது நசுங்கக் கூடாது. பானையும் உடையக் கூடாது. ஒருக்கால் பானை உடைந்து போனால், வீரசிம்மன் பத்தாயிரம் பொற்காசு அபராதம் செலுத்த வேண்டும். இவை அனைத்தையும் அவருக்குத் தெரிவித்து விடுங்கள்" என்றார் பீர்பால்.

"என்ன? அபராதம் பத்தாயிரம் பொற்காசுகளா?" என்று அக்பர் கேட்டார்.

"அறிவின் விலை மிகவும் அதிகம் பிரபு" என்றார் பீர்பால்.

அவ்வாறே பானையை தூதன் மூலம் கொடுத்தனுப்பியபின், ஆர்வத்தை அடக்க முடியாத அக்பர், "பீர்பால்! பானைக்குள் என்னதான் வைத்திருக்கிறாய் என்று எனக்கு கூறு" என அவசரப்படுத்தினார்.




உடனே பீர்பால் தான் செய்ததைச் சொன்னார். "பிரபு, வீரசிம்மன் தனது குறும்புத்தனமான கேள்விக்கு சரியாக மூக்குடைபடுவார். பானைக்குள் இருக்கும் பரங்கிக்காயை அவரால் பானையை உடைக்காமல் முழுதாக வெளியே எடுக்க முடியாது. பரங்கிக்காயை அறுத்து வெளியே எடுப்பதும் கூடாது. அதனால் அவர் நம்மிடம் வசமாக சிக்கிக் கொணடார்.

"அடப்போக்கிரி!" என்று பீர்பால் முதுகில் செல்லமாகத் தட்டினார் அக்பர். பானையைப் பெற்ற வீரசிம்மன் பானையினுள் ஒரு பெரிய பரங்கிக்காய் இருப்பதைப் பார்த்தார். கூடவே அந்த இரண்டு நிபந்தனைகளையும் கேட்டார். பரங்கிக் காயை அறுக்கவும் கூடாது. அதேசமயம்முழுதாக வெளியே எடுக்க முயன்றால் பானை உடையும். உடனே அந்த அதிகப் பிரசங்கி இளைஞர்களை அழைத்த மன்னர், அறிவுப்பானையை அவர்களிடம் காட்டி விளக்க, அவர்கள் முகத்தில் அசடு வழிந்தது

"உங்கள் பேச்சைக் கேட்டு நானும் முட்டாள் ஆனேன். முன்னமே சொன்னேன், அக்பரின் சபையில் அறிஞர்களுக்குப் பஞ்சமில்லை என்று. என் பேச்சை நீங்கள் கேட்கவில்லை. அபராதத் தொகையை ஈடுகட்ட, நீங்கள் காலம் முழுவதும் என்னிடம் சம்பளமின்றி உழைக்க வேண்டும்" என்றார்.

பிறகு தலைவிதியை நொந்து கொண்டு, அபராதத் தொகையை அக்பருக்கு அனுப்ப, அவர் அதில் பாதியை பீர்பாலுக்கு வழங்கினார். (முற்றும்)

## அல்பர்ட் ஐன்ஸ்டைன்



அல்பர்ட் ஐன்ஸ்டைன் ஜேர்மனியில், வுர்ட்டெம்பர்க் இலுள்ள உல்ம் என்னுமிடத்தில், 1879 ஆம் ஆண்டு பிறந்தார். இவர் குறிப்பிடத்தக்க பயன்பாடுக் கணிதத் திறமைகள்கொண்ட, ஒரு கோட்பாட்டு இயற்பியல் அறிஞர் ஆவார். இருபதாம் நூற்றாண்டின் மிக முக்கியமான அறிவியலாளராகப் பொதுவாகக் கருதப்படுகிறார். இவர் புகழ் பெற்ற சார்புக் கோடபாட்டை முன்வைத்ததுடன், குவாண்டம் எந்திரவியல், புள்ளியியற் எந்திரவியல் (statistical mechanics) மற்றும அண்டவியல் ஆகிய துறைகளிலும் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார். ஒளி மின் விளைவைக் கண்டுபிடித்து விளக்கியமைக் காகவும், கோட்பாட்டு இயற்பியலில் (Theoretical physics) அவர் செய்த சேவைக்காகவும், 1921இல் இவருக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

தற்காலத்தில் பொதுப் பயன்பாட்டில் ஐன்ஸ்டைன் என்ற சொல், அதிக புத்திக்கூர்மையுள்ள ஒருவரைக் குறிக்கும் சொல்லாக மாறிவிட்டது. 1999ல், புதிய ஆயிரவாண்டைக் குறித்து வெளியிடப்பட்ட டைம் (இதழ்), "இந்த நூற்றாண்டின் சிறந்த மனிதர்" என்ற பெயரை ஐன்ஸ்டைனுக்கு வழங்கியது.

ஐன்ஸ்டைன் தந்தையார், ஹேர்மன் ஐன்ஸ்டீன், பிற்காலத்தில் ஒரு மின்வேதியியல் சார்ந்த தொழில் நிலையமொன்றை நடத்திவந்தார். தாயார் போலின் கோச். இவர் ஒரு கத்தோலிக்க ஆரம்பப் பாடசாலையில் சேர்க்கப்பட்டார்.

அத்துடன் தாயாரின் வற்புறுத்தல் காரணமாக இளமையில் வயலினும் கற்றுவந்தார். இவர் ஐந்து வயதாக இருந்தபோது, இவரது தந்தையார் இவருக்கு ஒரு சட்டைப்பையில் வைக்கக்கூடிய திசையறி கருவியொன்றைக் காட்டினார். அந்த வயதிலேயே அவர் ஒன்றுமற்ற வெளியில் ஏதோ ஒன்று காந்த ஊசியில் தாக்கம் ஏற்படுத்துவதைப் புரிந்து கொண்டார்.

அவர் மாதிரியுருக்களையும், இயந்திரக் கருவிகளையும், பொழுது போக்காகச் செய்துவந்தார். எனினும், சிறுவனாக இருந்தபோது இவருக்கு மிக மெதுவாகவே கற்கமுடிந்தது எனச் சிலர் கூறுகிறார்கள். இவர் தனது 12 ஆவது அகவையிலேயே கணிதம் படிக்க ஆரம்பித்தார்.

இவருடைய உறவினரிருவர் அறிவியல், கணிதம் தொடர்பான நூல்களையும், ஆலோசனைகளையும் கொடுத்து, அவரை ஊக்குவித்தார்களாம்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

03.2014
14

- 1489 - சைப்பிரஸ் மகாராணி கத்தரீன் கோர்னாரோ தனது இராச்சியத்தை வெனிஸ் நகருக்கு விற்றார்.
- 1794 - எலி விட்னி பஞ்சைத் தூய்மைப்படுத்தி அதன் விதையில் இருந்து பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் என்ற இயந்திரத்துக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1898 - டாக்டர் வில்லியம் கப்ரியேல் றொக்வூட், இலங்கையின் அரசியல் நிர்ணய சபைக்கு தமிழ்ப் பிரதிநிதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.
- 1939 - செக்கோசிலோவாக்கியாவின் பொஹேமியா மற்றும் மொராவியா மாகாணங்களை ஜேர்மனியப் படைகள் ஆக்கிரமித்தனர்.
- 1951 - கொரியப் போர்: இரண்டாவது முறையாக ஐ.நா படைகள் சியோல் நகரைக் கைப்பற்றியது.
- 1978 - இஸ்ரேலியப் படைகள் தெற்கு லெபனானை ஆக்கிரமித்துக் கைப்பற்றியது.
- 1984 - சின் ஃபெயின் தலைவர் ஜெரி ஆடம்ஸ் பெல்ஃபாஸ்ட் நகரில் கொலை முயற்சி ஒன்றில் படுகாயமடைந்தார்.
- 1994 - லினக்ஸ் கரு (kernel) 1.0.0 வெளியிடப்பட்டது.
- 1995 - ரஷ்ய விண்கப்பல் ஒன்றில் அமெரிக்கர் ஒருவர் முதன் முதலாகப் பயணித்தார்.
- 1998 - தெற்கு ஈரானில் 6.9 ரிக்டர் அளவு நில நடுக்கம் தாக்கியது.

### பிறப்புக்கள

- 1879 - அல்பர்ட் ஐன்ஸடைன், இயற்பியலாளர் (இ. 1955)
- 1965 - அமீர் கான், நடிகர்

### இறப்புக்கள்

- 1883 - கார்ல் மார்க்ஸ், ஜேர்மனிய மெய்யியலாளர் (பி. 1818)
- 1932 - ஜோர்ஜ் ஈஸ்றமன் அமெரிக்க கண்டுபிடிப்பாளர் (பி. 1854)
- 1993 - [illegible] (பி. 1911)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்


...எங்கு தேடியும் மாட்டைக் காண வில்லை. பூசைக்கோ நேரம் நெருங் கிக் கொண்டிருந்தது. சொன்ன சொல்லைக் காப்பாற்ற வேண்டுமல்லவா. உரிய நேரத்தில் பாலைக் கொடுக்கவில்லையானால் சித்தரின் கோபத்துக்குமல்லவா ஆளாக வேண் டியிருக்கும்? என்று யோசித்த பச்சை மால், சரி ஆபத்துக்குப் பாவமில்லை, இன்று ஒருநாள் வேறு பசுவிடமிருந்து பாலைக் கறந்து கொடுத்து நிலைமையைச் சமாளிப்போம். பிறகு மாட்டைத் தேடிப்பிடித்து நாளையிலிருந்து பழையபடியே அதனுடைய பாலைத் தருவோம் என்று எண்ணியவராய், மாட்டைத் தேடும் தன் முயற்சியை விட்டுத் திரும்பியபோது தூரத்தே ஒரு மரத்தடியில் அந்தக் காராம் பசு நிற்பதைக் கண்டார்.

மகிழ்ச்சியுடன் அதனிடம் பால் கறக்க அணுகிய போதுதான் அந்த அதிர்ச்சி தரும் காட்சியைக் கண்டார்.

அபிஷேகத்திற்குக் கறக்க வேண்டிய பாலை பசுவின் மடியில் வாய்வைத்து பருகிக் கொண்டிருந்தார் வேடுவன் வடிவில் வந்த அந்தப் புதிய சித்தர். அவரின் உதடுகள் எங்கும் பாலின் நுரை அப்பியிருந்தது.

இந்தக் காட்சியைக் கண்ட பச்சை மாலுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. பசி என்று என்னிடம் வந்து கேட்டிருந்தால் பால் தந்திருக்கமாட்டேனா? அதற்காக இறை பணிக்காக நேர்ந்து விடப்பட்ட மாட்டின் பாலையா இப்படிக் குடித்து எச்சில்படுத்துவது?

பச்சைமாலுக்கு ஆத்திரத்தை அடக்க முடியவில்லை. துறவியாயிருந்தால் மட்டும் என்ன? புலனடக்கம் வேண் டாம்? சட்டென்று கொஞ்சமும் யோசிக்காமல் கையிலிருந்த தடியால் புதிய சித்தரின் தலையில் ஓங்கி அடித்தான். ஆத்திரம் இன்னும் தீரவில்லை. சிறிது



ஸ்ரீ சுந்தரமகாலிங்கர்

இடைவெளிக்குப் பின் மீண்டும் மீண் டும் தடியால் அவரை அடிக்க ஆரம் பித்தான்.

அபிஷேகத்திற்குப் பால் இன்னும் வரவில்லையே என்று பச்சைமாலைத் தேடி வந்த சுந்தரானந்தரும், சட்டை நாதரும் மரத்தடியில் புதிய சித்தரை பச்சைமால் அடித்துக் கொண்டிருப் பதைக் கண்டு துடிதுடித்துப் போய் விட்டனர்.

ஈவு இரக்கமற்று துறவியையே அடிக்கும் இந்தக் கொடிய பாவியிடமா இத்தனை நாள் அபிஷேகத்திற்குப் பாலைப் பெற்றோம்? என்று வருந்திய இருவரும் துறவியை அடிக்கும் பச்சை மாலின் மீது கோபமாகப் பாய்ந்தனர்.

அடிபட்ட புதிய சித்தர் தடுக்க வந்தவர்களைத் தடுத்தார். தனது உண்மை உருவை அவர்களுக்குக் காட்டியருளினார்.

சிவபெருமானின் திருக்காட்சி தரிசனத்தைக் கண்ட பச்சைமால் அவரே

## ஆன்மீகம் 61

வேடராகவும் சித்தராகவும் 'வந்து தம்மால் அடிபட்டவர்' என்பதையறிந்து அவன் கண்களில் இருந்து நீர் ஆறாகப் பெருகியது. தன் மனைவியான சடைமங்கையைச் சோதித்த சித்தரே மறுபடியும் தன்னை சோதிக்க நினைத்ததைக் கண்டு மனம் நடுங்கி, இறைவா, வந்திருப்பது நீ என்று அறியாமலே தடி கொண்டு அடித்து உன்னைக் காயப்படுத்திவிட்டேன். என்னை மன்னியுங்கள் என்று அவரது கால்களில் வீழ்ந்து கதறினான்.

நீ எந்தத் தவறும் செய்யவில்லை. வருந்தாதே என்று தேற்றிய சிவ பெருமான், நீ தினமும் எமது அபிஷேகத்த்துக்குப் பசும்பால் கொடுத்ததோடு சுந்தரானந்தரின் பசியையும் போக்கியிருப்பதால் நாம் மிக மகிழ்ந்தோம். உனக்கு என்ன வரம் வேண்டும், தயங்காமல் கேள் என்று கேட்டார்.

ஐயா, உம்மை அடித்த என்னையும் மன்னித்து இந்தச் சதுரகிரியில் தரிசனமும் தந்தீர். இதைவிட வேறு பேறு என்ன வேண்டும் எனக்கு? என் மனைவியையும், மைதுனர்களையும் ஆட்கொண்டது போலவே என்னையும் ஆட் கொண்டால் அதுவே போதும். வெறெதும் தேவையில்லை என்று வேண்டினான். (தொடரும்)




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



73

...சொல் பலிப்பது என்பது செம்மல் வாழ்வில் கண் கூடாக காண்பதாகும். செம்மலின் இந்த நிலைக்கு ஓராண்டுக்கு முன் ஜப்பான் நாட்டிலிருந்து கானு என்ற நரம்பியல் டாக்டர் வந்திருந்தார். செம்மல் அவருக்கு வர வேற்பு கொடுத்து பேசினார். செம்மல் சில வேளைகளில் உணர்ச்சிவசமாவார். அப்படி அன்று பேசும்போது இவரது இனிய சுபாவத்தை பார்க்கும்போது எனக்கே ஆசை வருகிறது இவரிடம் சிகிச்சை பெற என்றார். அதுவும் பலித்தது. அந்த டாக்டர் கானு வரவழைக்கப்பட்டார். இருபத்திரெண்டு டாக்டர்களுடன் அவரும் சேர்ந்தும் தனித்தும் சோதனை செய்தார். அவர்தான், செம்மலை அமெரிக்காவிற்கு கொண்டுபோகும் படி சொன்னார். புரூக்லின் மருத்துவ மனைக்கும் தொலைபேசி மூலம் சொன்னார்....

### தர்மமே காக்கும்

நட்புக்கு ஒரு உதாரணம் சொல்லுவார்கள்- நெல்லுக்குள்தான் அரிசி. அது பிரிந்துவிட்டால் ஒட்டாது. அப்படித்தான் நட்பும் என்று. அதையும் முறியடித்தார் செம்மல். இரண்டாவது முறை மக்களால் அரியணையில் அமர்ந்த பிறகு அன்னை இந்திரா, செம்மல் மீது மக்கள் வைத்திருந்த மதிப்பை உணர்ந்தார். தமிழகம் தன் நட்பில் இல்லை யென்றால் தென்னகமே தன்னாட்சிக் குள் இருக்கத் தகுதியில்லையென நினைத்து, செம்மலுக்கு ஒரு தாயானார். தாய் தோழியானார். செம்மல் சொல்லையும் கேட்டார்.

செம்மலின் உடல் நிலையறிந்து



இந்திரா காந்தியுடன் எம்.ஜி.ஆர்

பறந்து வந்தார். ஒரு நாட்டுப் பிரதமர், தான் மரு[illegible] பெருமை[illegible] எதிர்பாராத வருகை. செம்மலின் அருகே செல்ல மருத்துவர் தடை விதித்து நிலையைச் சொல்லி, அவர் இருக்கும் கறுப்புக் கண்ணாடி அறையில் சிறு வெள்ளைக் கண்ணாடி வழியே பார்க்கச் செய்தனர். பார்த்துவிட்டு அன்னை இந்திரா கேட்ட முதல் கேள்வி இவர் எம்.ஜி.ஆரா? என்பதுதான்.

திருமதி ஜானகியம்மா வந்தார். [illegible] இந்திரா ஆறுதல் சொன் [illegible] அமெரிக்கா போகலாம். அந்நிய செலாவணிக்கு எந்த பயமும் வேண் டாம். ரிசர்வ் பாங்கின் சட்டம் உங்கள் கணவருக்காகத் தளர்த்தப் படும். எவ்வளவு செலவானாலும் இந்த உன்னத உயிர் பிழைக்கட்டும். அவரது தர்மமே அவரை காக்கும். உங்கள் பிரார்த்தனை, என் பிரார்த் தனை, வெளியே நிற்கும் லட்சோப லட்ச மக்கள் பிரார்த்தனைகளில் ஒன்றாவது பலிக்காமலா போகப் போகிறது என்று ஜானகியம்மாவை கட்டிப் பிடித்து கண்ணைத் துடைத் தார் அன்னை இந்திரா. அதன்பின் செம்மலை அமெரிக்கா கொண்டு செல்லும் வேலைகளைத் துரிதப் படுத்தினார்.

### திரிசங்கு சுவர்க்கம்

புராணத்தில் விஸ்வாமித்திரருக் காக அமைக்கப்பட்டது திரிசங்கு சுவர்க்கம். கிரேக்க நாட்டின் தொங் கும் தோட்டத்தைப் போல், இதுவும் ஆகாயத்தில் தொங்குவதாக ஐதீகம்.

ஆகாயத்தில் செம்மலுக்காக ஒரு மருத்துவமனை உருவாக்கப்பட்டது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அரசு அமைதியின் விதைகளை தூவ தவறிவிட்டது

## மனிதவுரிமை செயற்பாட்டாளர் நிமல்கா பெர்னாண்டோ தெரிவிப்பு

**(கொழும்பு)**
**போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலை மோசமாக உள்ளது. வன்னி போன்ற பகுதிகளில் வாழும் பெண்கள் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர் என மனிதவுரிமை செயற்பாட்டாளரான நிமல்கா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.**

தமிழ்நாடு ஊடகமொன்றிற்கு அவர் வழங்கிய நேர்காணலிலே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் கூறியவை வருமாறு,

உட்கட்டமைப்பு வசதிகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் இஸ்லாமியர், கிறிஸ்தவர் மீதான தாக்குதல், புத்பாலசேனாவின் எழுச்சி இவையெல்லாம் இலங்கை அரசு அமைதியின் விதைகளை தூவ தவறிவிட்டது.

அரசு மக்களின் தினசரி வாழ்க்கையை மேம்படுத்த முயற்சி எடுக்கவில்லை. இதனால் அரசுக்கு நெருக்கமான ஒரு சிலரைத் தவிர ஒவ்வொரு இலங்கையரும் துன்பத்தில் வாடுகின்றனர்.

சிங்களவரின் போராட்டத்தையும் தமிழர்களின் போராட்டத்தையும் ஒப்பிட முடியாது. ஆனால் ஒரு சாதாரண சிங்களவரின் வாழ்க்கை செலவு உயர்ந்துள்ளது. தற்போது இலங்கையில் மின்சாரம், தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகள் விலை உயர்ந்துள்ளன. உண்மையான பொருளாதார வளர்ச்சி நடைபெறவே இல்லை.

போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிலை படுமோசமாக உள்ளது. அதிலும் வன்னி போன்ற பகுதிகளில் வாழும் பெண்கள் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர். பல கிராமங்களில் 80% பெண்களே உள்ளனர். அவர்கள் தங்களது கணவர்களுடன் விவசாயத்திலோ, மீன்பிடி தொழிலிலோ உதவி செய்து வாழ்ந்து வந்தவர்கள்.

தற்போது அவர்களுக்கான வாழ்வாதாரம் குறித்து அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. விவசாய நிலங்கள் இராணுவத்தின் கையில் உள்ளது. அவர்களால் புதிதாக ஏதும் தொழில் தொடங்கி வாழ வழியில்லை. தெற்கில் வாழும் சிங்கள பெண்ணின் வாழ்வை விட இவர்களது வாழ்க்கை மோசமானது.

வீட்டில் உள்ள பெண் குழந்தைகளை தனியாக வட்டு வேலைக்கு செல்வது இயலாது. தங்கள் நகைகளை அடைமானம் வைத்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வருகின்றனர்.

2012 , 2013 இல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திலிருந்து இது அடுத்த கட்டமாகும். இதுவரை போர்க்குற்றங்கள், மனிதவுரிமை மீறல்கள் குறித்த எந்தவொரு தீர்மானமும் இயற்றப்படவில்லை. ஐ.நா.வில் உறுப்பினராக இருக்கும் இலங்கை ஐ.நா.வின் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும்.


இது இலங்கையின் உள்நாட்டு பிரச்சினை மட்டுமில்லை. உலக அளவில் இந்த நூற்றாண்டின் மனிதவுரிமை மீறல்கள் குறித்த விவகாரம். தற்போது ஆதாரங்கள் வெளி வருகின்றன, அனைவரும் கேள்வி கேட்கிறார்கள். ஐ.நா.வாக இருந்தாலும் தவறு செய்தால் பதில் கூற வேண்டும்.





மனிதவுரிமை சபைக்கு வந்திருக்க வேண்டிய ஐ.நா.வின் வல்லுநர்கள் அறிக்கையை ஐ.நா. செயலாளர் சமர்ப்பிக்கவே இல்லை. ஐ.நா. இப்படி செய்ய நாம் அனுமதிக்கக் கூடாது.

உலக அளவில் மனிதவுரிமை விவகாரங்களை பேச ஐ.நா.வின் மனிதவுரிமை சபை மட்டுமே இருக்கிறது என்ற நிலையில் அது செயலூக்கம் உள்ளதாக இருக்க வேண்டும்.

அரசுகள் கையில் மனித உரிமை சபையின் செயறபாடுகளை முடக்கி விடக் கூடாது. இந்த மாதம் சர்வதேச விசாரணை நடத்த தீர்மானம் இயற்றப்படும் என்று நம்புகிறோம் என்று கூறியுள்ளார். (2)








கணேசமூர்த்தி விசியந்தனின் மருதாபுலத்தரசி எனும் இறுவெட்டு வெளியீட்டு விழா அண்மையில் இடம்பெற்றபோது.... (படங்கள் :- எஸ்.செல்வதீபன்)

# பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே அரசாங்கத்தின் விருப்பம்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(காலி)

தமிழ் மக்களுக்கு எதிராக யத்தம் முன்னெடுக்கப்படவில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

காலிசமனல மைதானத்தில் நடைபெற்ற தேரதல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

தமிழ் மக்களுக்கு எதிராக அரசாங்கம் யுத்தம் செய்யவில்லை எனவும், தமிழழ விடுதலைப் புலி பயங்கரவாதிகளுக்கு எதிராகவே யுத்தம் நடத்தப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் என்ற ரீதியில் மக்களின் இதயங்களை வென்றெடுப்பதே பிரதான இலக்காக அமைந்துள்ளது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிலர் ஜெனீவாவில் இருந்து கொண்டு நாட்டில் மத நல்லிணக்கம் கிடையாது என குற்றம் சுமத்தி வருவதாகவும், மத நல்லிணக்கம் உண்டா இல்லையா என்பதனை நேரில் வந்து பார்த்து தெரிந்துகொள்ள முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பிரச்சினைகள் இன்றி ஆட்சி நடத்துவதே அரசாங்கத்தின் நோக்கம் என்ற போதிலும், சில தூதுவராலயங்கள் மறறும் தன்னார்வத் தொண்டு நிறுவனாங்கள் நாட்டில் குழப்பம் விளைவிப்பதில் ஆர்வம் காட்டி வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நல்ல ஜனநாயக ரீதியான தலைவர் என்ற வகையில் அரசாங்கத்தில் இணைந்து கொள்ளவும் விலகவும் எவ்வித தடையும் யாருக்கும் கிடையாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

யாரையும் விரட்டியடிக்க வேண்டிய அவசியம் கிடையாது.தேவையென்றால் ஆளும் கட்சியிலிருந்து விலகிக்கொள்ள சாத்தியம் உண்டு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அபிவிருத்தியை தொடர்ச்சியாக முன்னெடுபதற்கு வெற்றிச் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு ஜனாதிபதி மக்களிடம் கோரியுள்ளார். (2)

# பொருத்தமில்லாத உரைகளை ஆற்றி இன முரண்பாடுகளை உருவாக்க வேண்டாம்

## ஹக்கீமுக்கு மேர்வின் எச்சரிக்கை

(களனி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு நேர்ந்ததே, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீமிற்கும் நேரும் என பொதுமக்கள் தொடர்பு அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரிக்கை விடுத்துள்ளார்.

களனியில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டமொன்றில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

நாட்டுக்கு எதிராக துரோகம் இழைப்பவர்களுக்கு பிரபாகரனின் தலைவிதியே காத்திருககின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொருத்தமில்லாத உரைகளை ஆற்றி மக்களிடையே இன முரண்பாடுகளை உருவாக்க வேண்டாம் என கோரிக்கை விடுப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

வாயை மூடிக்கொண்டு அமைச்சுப் பதவியை காப்பாற்றிக்கொள்வதே ஹக்கீம் செய்ய வேண்டிய புத்திசாதுரியமான காரியம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சந்திரிகா அரசாங்கத்தை கவிழ்ததனைப் போன்று இந்த ஆட்சியையும் கவிழ்க்க முடியும் என அமைச்சர் ஹக்கீம் அண்மையில் குறிப்பிட்டிருந்ததாகவும், அவ் வாறான சாத்தியங்கள் எதுவும் கிடையாது எனவும் மேர்வின் சில்வா



தெரிவித்துள்ளார்.

ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள 113 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவே தேவை என்ற போதிலும், ஜனாதிபதிக்கு 160 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகள் மற்றும இனத்தவர்களையும் ஜனாதிபதி ஒரே விதமாக நடத்தி வருகின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் எவரேனும் ஆதரவினை விலக்கிக் கொண்டால் அது அரசாங்கத்தை பாதிக்காது. நாட்டுக்கு எதிராக செயற்பட்டால் பிரபாகரனுக்கு நேர்ந்த கதியே நேரும் என்பதனை நினைவில் நிறுத்திக்கொள்ள வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறக்குமதி செய்யப்படும் மருந்து வகைகளுக்கு விலைக்கட்டுப்பாடு நிர்ணயம்

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவிப்பு

*(கொழும்பு)*

***நாட்டிற்குள் இறக்குமதி செய்யப்படும் அனைத்து மருந்து வகைகளுக்கும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதென வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.***

வர்த்தக மற்றும் கூட்டுறவு அமைச்சில் இது தொடர்பில் விளக்கமளிக்கும் விசேட செய்தியாளர் மாநாடு நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கடந்த 4 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் இறக்குமதி செய்யப்படும் மருந்துப் பொருட்களுக்கான கட்டுப்பாட்டு விலையினை நுகர்வோர் அதிகார சபை தீர்மானித்திருப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இதற்கிணங்க கட்டுப்பாட்டு விலையையும் மீறி மருந்துப் பொருட்களை விற்பனை செய்யும் தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவமனைகளுக்கெதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தனியார் மருந்தகங்களிலும் மருத்துவமனைகளிலும் இறக்குமதி செய்யப்படும் மருந்துகளுக்கான விலைகளை தன்னிச்சையாக அதிகரித்து விற்பனை செய்வதனால் நாட்டு மக்கள் எதிர்நோக்கி வந்த பிரச்சினை குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நீண்டகாலமாக அவதானம் செலுத்தி வந்தார்.

இப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணும் பொருட்டு நிர்ணய விலையினை நடைமுறைப்படுத்துவதனை துரிதப்படுத்துமாறு கேட்டுக் கொண்டதற்கமையவே நாம் இதனை அமுலுக்கு கொண்டு வந்துள்ளோமெனவும் அமைச்சர் தெரிவிததுள்ளார்.

மருந்தகங்களுக்கு மருந்தகம் மருந்துகளின் விலைகள் வேறுபடுகின்றன. சிலர் 800 சதவீதம் வரை இதனால் இலாபமடைகின்றனர். இனிமேலும் நோயாளிகளை ஏமாற்றி பணம் பறிக்கும் முறையினை நீடிப்பதற்கு இந்த அரசாங்கம் இடமளிக்காதெனவும் அமைச்சர் கூறினார்.

நுகர்வோர் அதிகார சபையின் சட்ட விதிமுறைகளுக்கமையவே இதற்குரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி கட்டுப்பாட்டு விலையிலும் 10 சதத்தினால் அதிகரித்து மருந்துகளை விற்பனை செய்தாலும் அது தண்டனைக்குரிய குற்றமாகுமெனவும் அவர் குறிப்பிட்டார்.

மருந்துகளுக்கு கட்டுப்பாட்டு விலையினை நிர்ணயிக்கும் முறைமை ஏற்கனவே அமுலில் இருந்த போதும் ரவிகருணாநாயக்க எம்.பி.யினால் கடந்த 2002 ஆம் ஆண்டு இந் நடைமுறை இரத்துச் செய்யப்பட்டது.

இதற்குரிய வர்த்தமானியை இரத்துச் செய்ததன் மூலம் ஐ.தே.க. அரசியல்வாதிகள் நாட்டு மக்களுக்கு துரோகம் இழைத்துள்ளனர்.

கடந்த 11 வருடகாலமாக ரவி கருணாநாயக்க எம்.பியின் தயவினால் தனியார் மருந்தகங்களும் மருத்துவமனைகளும் இலாபம் சம்பாதித்தது போதும். இனிமேல் இவ்விடயம் தொடர்பில் அரசாங்கம் கண்டிப்புடன் நடந்து கொள்ளுமெனவும்அமைச்சர்கூறியுள்ளார். (2)

# மீனவர்கள் பேச்சுவார்த்தை அடுத்தவாரம் நடத்தப்படலாம்

## இந்திய ஊடகங்கள் தகவல்

இலங்கை-இந்திய மீனவர்களுக்கு இடையில் எதிர்வரும் 18 அல்லது 19ஆம் திகதியில் பேச்சுவார்த்தை நடத்தப்படலாம் என இந்திய ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இரு நாடுகளினதும் மீனவர்களுக்கு இடையில் நேற்றைய தினம் கொழும்பு கிங்ஸி வீதியில் பேச்சுவார்த்தை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.எனினும் தவிர்க்க முடியாத காரணங்களினால் இந்தப் பேச்சுவார்த்தை இறுதி நேரத்தில் இரத்து செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சகல இந்திய மீனவர்களையும் விடுதலை செய்யும் வரையில் பேச்சுவார்த்தை மேசையில் அமர முடியாது என இந்தியாவின் தமிழக மாநில அரசாங்கம் அறிவித்துள்ளது.

மாநில அரசின் அனுமதியின்றி பேச்சுவார்த்தைகளில் பங்கேற்க முடியாது என தமிழக மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இறுதி நேரத்தில் பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டமை வருத்தமும் ஏமாற்றமும் அளிப்பதாக தமிழக மீனவர் சங்கத் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். (2)


# ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திடம் சமர்ப்பிப்பு

காணாமற்போனோர் தொடர்பிலான ஜனாதிபதி ஆணைக்குழு கிளிநொச்சி முல்லைத்தீவு, யாழ்ப்பாண மாவட்டங்களில் மேற்கொண்ட சாட்சி பதிவுகளின் அறிக்கையை நிறைவு செய்திருக்கிறது.

இந்த அறிக்கை தற்போது இலங்கை சட்டமா அதிபரின் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

சட்டமா அதிபர் திணைக்களம் இந்த அறிக்கையை ஆராய்வு செய்து அதன் பரிந்துரைகளை மீண்டும் காணாமல் போனோர் தொடர்பான ஜனாதிபதியின் ஆணைக்குழுவிடம் வழங்கும்.

இதனை அடுத்து இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டு ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (2)



வட மாகாண திட்டமிடல் அமைச்சினால் ஒழுங்கு படுத்தப்பட்ட மாகாண திட்டமிடல் குழு தொடர்பான கூட்டம் வடமாகாண சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதன் போது வடமாகாண பிரதம செயலாளர் ஆர்.விஜயலட்சுமி தலைமையில் கூட்டம் இடம் பெறுவதையும் அருகில் பிரதம திட்டமிடல் செயலாளர் ஆர்.உமாகாந்தன் உட்பட அமைச்சின் செயலாளர்கள் இருப்பதையும் கலந்து கொண்ட திணைக்கள தலைவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# மலேசிய விமானத்தின் உடைந்த பாகங்கள் தென்சீனக் கடலில் மிதப்பு

## படங்களை ஆதாரம் காட்டி சீனா தகவல்

மலேசியாவிலிருந்து சீனா நோக்கிப் புறப்பட்டு காணாமற் போன எம்.எச்.370 விமானத்தின் உடைந்த பாகங்கள் தென் சீனக் கடலில் மிதந்து கொண்டிருப்பதாக சீன இராணுவம் செயற்கைக்கோள் படங்களை ஆதாரம் காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

காணாமற் போன குறித்த விமானம் சென்ற பாதையில் இந்த உடைந்த பாகங்கள் கிடந்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படங்கள் விமானம் காணாமல் போன ஒரு நாள் கடந்த நிலையில் எடுக்கப்பட்டவை எனபது தெரிய வந்துள்ளது. ஏன் இந்த படங்கள் இவ்வளவு தாமதமாக வெளியிடப்படுகின்றன, ஏன் உடனடியாக இந்த தகவல்கள் மலேசியாவுக்குத் தெரிவிக்கப்படவில்லை என்று கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன.

அயல் நாடுகளின் தகராறுக்கு உட்பட்ட தென் சீனக் கடல் பகுதியில். தான் கொண்டுள்ள இராணுவ துணைக் கோள சக்தியை வெளியுலகுக்கும் அமெரிக்காவுக்கும் தெரியப்படுத்திவிடக் கூடாது என்ற கோணத்தில் சீனா இந்தப் படங்களை வெளியிடுவதற்கு தயங்கியிருக்கலாம் அல்லது தாமதப்படுத்தியிருக்கலாம் என சி.என்.என் தொலைக்காட்சி கருத்து தெரிவித்துள்ளது.

இந்த உடைந்த பாகங்கள் 70 அடிக்கும் மேலான நீளமும் அகலமும் உடையவை என்றும் விமானம் விழுந்து நொருங்கியிருக்கலாம் என்று கருதப்படும் கடல் பகுதியில் இவை மிதந்து கொண்டிருப்பது துணைக்கோள படங்களின் வழி அறியப்பட்டுள்ளதாகவும் சீன இராணுவ இலாகா அறிவித்துள்ளது.

மலேசியாவுக்கும் வியட்நாமுக்கும் இடையில் உள்ள தென் சீனக் கடல் பகுதியில் இந்த உடைந்த பாகங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இவை குறித்த விமானதின் உடைந்த பாகங்கள் தானா என்பதை உறுதிப்படுத்த மேலும் சில நாட்கள் பிடிக்கலாம் என்றும் கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற் போன விமானத்தைத் தேடும் பணியில் சீனா, 10 துணைக்கோளங்களை பணியில் ஈடுபடுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (2)

# சர்வதேச மாநாடு

சமகால மேலாண்மை பற்றிய சர்வதேச மாநாடு இன்றும் நாளையும் காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி உள்ளக அரங்கில் யாழ்.பல்கலைக்கழகதுணைவேந்தரும் பேராசிரியருமான வசந்தி அரசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவுக்கு சிறப்பு விருந்தினராக வவுனியா டாக்டர் கே.கே. அருள்வேல், தலைமை உரையை இந்திய அண்ணாமலை பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர் என். பஞ்சநாதம், இலங்கை ஜெயவர்தனபுர பல்கலைக்கழக வணிக முதல்வர் சம்பத் அமரதுங்க தலைமையில் நடைபெறவுள்ளது. (2)

# அமெரிக்க பிரேரணை தோற்றுவிடக்கூடாது

தமது பிரேரணை தோல்வி அடைந்துவிட கூடாது என்பதில் அமெரிக்கா தீவிரமாக இருப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பொது செயலாளருமான மாவை சேனாதிராஜா இதனை ஊடகம் ஒன்று க்கு தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்றுக்கு வலியுறுத்தப்பட்ட பிரேரணையை ஆதரிக்க மனித உரிமைகள் மாநாட்டின் பெரும்பாலான நாடுகள் தயாராக இல்லை.

இந்த நிலையில் யுத்தக் குற்ற விசாரணைககான பிரேரணையை சமர்ப்பித்து அதில் தோல்வி கண்டு விடக் கூடாது என்பதில் அமெரிக்காவும் பிரித்தானியாவும் இருக்கின்றமையை அந்த நாட்டு பிரதிநிதிகளை சந்தித்த போது புரிந்துக் கொள்ள கூடியதாக இருந்ததாக மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.

இதன் விளைவாகவே அமெரிக்கா இந்த முறை பிரேரணையிலும் சர்வதேச விசாரணையை வலியுறுத்தவில்லை என்று அவர் விளக்கமளித்துள்ளார். (2)

# தானியங்கி கைவிரல் அடையாளம்; 899 குற்றவாளிகள் கண்டுபிடிப்பு

தானியங்கி கைவிரல் அடையாள முறை கொண்டுவரப்பட்டது தொடக்கம் இதுவரை 899 குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தானியங்கி கைவிரல் அடையாள முறை அறிமுகப்படுத்தி 12 நாட்களுக்குள் 4ஆயிரத்து35 கைவிரல் அடையாளங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தபட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன குறிப்பிட்டுள்ளார்.

அதில் நூற்றுக்கு 22 வீதமானோர் குற்றவாளிகள் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

தானியங்கி கைவிரல் அடையாள முறை கடந்த மாதம் 27ஆம் திகதி அறிமுகப்படுத்தப்பட்டது.

இதற்கு முன்னர் கைவிரல் அடையாள அறிக்கை பெற 14 நாட்கள் சென்ற நிலையில் தற்போது 3 நிமிடங்களில் அறிக்கை பெற்றுக் கொள்ள முடியும். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவிற்கு சவால்விடும் ரஷ்யா!


பதவி நீக்கப்பட்ட விக்டர் யனுகோவிச்

மேற்கத்திய ஏகாதிபத்தியங்களுக்கும், ரஷ்ய முதலாளிகளுக்கும் இடையில் சிக்கி சரழிந்து கொண்டிருக்கிறது உக்ரைன். இருப்பினும் இதன் முதன்மைக் குற்றவாளிகள் அமெரிக்க தலைமையிலான மேற்குலகம் தான்.

கிழக்கு ஐரோப்பாவில் உள்ள, முன்னாள சோவியத் சோசலிச குடியரசாக இருந்து இப்போது ஐரோப்பாவின் இரண்டாவது பெரிய நாடாக விளங்கும் உக்ரைன் யாருடைய கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்? பக்கத்து நாடான ரஷ்யாவின் பொருளாதார மற்றும் இராணுவ செல்வாக்கின் கீழ் இருக்க வேண்டுமா அல்லது ஐரோப்பிய ஒன்றிய பொருளாதாரத்துடன் பிணைக்கபட்டு அமெரிக்கா தலைமையிலான நேட்டோ இராணுவ கூட்டமைப்பில் இணைய வேண்டுமா? என்பதுதான் இன்றைய உலகளாவிய மேலாதிக்கத்திற்கு சண்டைபோடும் அரசியலின் இலட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான கேள்வி.


கிரீமியாவில் ஆர்ப்பாட்டம்

கடந்த பெப்ரவரி மாதம் ஆட்சிக் கவிழ்ப்பு மூலம் உக்ரைனில் பதவி இழந்த ரஷ்ய சார்பு ஜனாதிபதி விக்டர் யனுகோவிசசிடமிருந்து 'மக்கள் எழுச்சி' மூலம் பதவி பறிக்கப்படுவது இது முதல் முறை அல்ல. 2004 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்ட யனுகோவிச் வீதிப் போராட்டங்கள் மூலம் பதவி இறக்கப்பட்டு மறு வாக்கெடுப்பில் எதிர்த்துப் போட்டியிட்ட "நமது உக்ரைன்" கட்சியைச் சேர்ந்த ஐரோப்பிய சார்பு விக்டர் யுஷென்கோ ஆட்சியில் அமர்த்தப்பட்டார்.


அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா

ஆனால், 2010 ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதி தேர்தலில் 48% வாக்குகளை அளித்து அதே விக்டர் யனுகோவிச்சை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்தனர் உக்ரைனிய வாக்காளர்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட பதவிக் காலம் 2015 வரை இருந்தாலும், அவரது ஆட்சிக்கு எதிராக கடந்த 4 மாதங்களாக கலவரங்களை நடத்திய "தந்தையர் நாடு கட்சி"யின் தலைமையிலான வலது சாரி மற்றும் நியோ நாஜிக் கட்சிகளின் கூட்டணி அதிகாரத்தைக் கைப்பற்றிவிட அவர் உயிரைப் பிடித்துக் கொண்டு தெற்கு ரஷ்யாவில் தஞ்சம் புகுந்திருக்கிறார்.

இந்த ஆட்சிக் கவிழ்ப்புக்கான தயாரிப்புகள் சென்ற ஆண்டு (2013) நவம்பர் மாதம் தொடங்கின. உக்ரைனை ஐரோப்பிய பொருளாதார ஒன்றியத்துடன் சேர்க்கும் முயற்சியில் குறிப்பாக ஜேர்மனியும் மற்றொரு பக்கம் அமெரிக்காவும் ஈடுபட்டு வந்தன.

ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த ஒப்பந்தம் உக்ரைன் நலன்களுக்கு எதிரானதாக இருப்பதாகச் சொல்லி 2011 ஆம் ஆண்டு பேசசு வார்த்தைகளை ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் முறித்துக் கொண்டார். ஐரோப்பிய ஒன்றியத்தில் சேர்ந்தால் உக்ரைனுக்கு ஆண்டுக்கு 20 பில்லியன் யூரோ (சுமார் ரூ 1.69 இலட்சம் கோடி) இழப்பு ஏற்படும் நிலை இருந்தது. உலகின் தானியக் களஞ்சியம் என்று அழைக்கப்படும் உக்ரைன் ஆண்டுக்கு 1 முதல் 1.5 கோடி தொன் தானிய ஏற்றுமதி செய்கிறது. ஆனால், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இணைவதற்கான ஒப்பந்தத்தின்படி 20,000 தொன் தானியம் மட்டுமே ஏற்றுமதி செய்ய அனுமதி என்று வரம்பு விதிக்கப்பட்டது, பின்னர் பேச்சுவார்த்தைகளுக்குப் பிறகு அது 20 இலட்சம் தொன் என்று அதிகரிக்கப்பட்டாலும், அதன்படி உக்ரைன் தனது தானிய ஏற்றுமதிகளை 80 சதவீதம் குறைத்துக் கொண்டு மற்ற மேற்கத்திய நாடுகளின் ஏற்றுமதிகளுக்கு இடம் கொடுக்க வேண்டும்.

மேலும், உக்ரைனின் ஏற்றுமதிகளில் 80% ஐரோப்பிய ஒன்றியத்துக்கு வெளியில் இருக்கும் ரஷ்யா உள்ளிட்ட முன்னாள் சோவியத் குடியரசு நாடுகளுடன் நடந்து வருகிறது. உக்ரைன் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைந்தால், ரஷ்ய தலைமையிலான சுங்க ஒன்றியத்திலிருந்து விலக வேண்டும். இரண்டு கூட்டமைப்புகளிலும் ஒரே நேரத்தில் இருப்பது சாத்தியமற்றது.

இந்த சூழலில் ரஷ்யாவுடனான உறவை ஆதரிக்கும் ஜனாதிபதி விக்டர் யனுகோவிச் கடந்த நவம்பரில் ஐரோப்பிய ஒன்றியததுடன்இணைவு ஒப்பந்தத்தில் கையொப்பமிட மீண்டும் மறுத்தார். அதைத் தொடர்ந்து மேற்கத்திய நாடுகள் தமது மாற்றுத் திட்டத்தை செயறபடுத்த முடிவு செய்ய, உக்ரைனின் தலைநகர் கீவ் நகரத்தில் வீதிப் போராட்டங்களை ஆரம்பித்தன.

ஐரோப்பிய ஆதரவு எதிர்க்கட்சிகள் தரப்பில் பாசிச கட்சிகளான ஸ்வோபோடா, டிரிசுப் போன்ற வலதுசாரி பயங்கரவாத குழுக்களும் போராட்டங்களில் சேர்க்கப்பட்டிருந்தன. இந்த அமைப்புகள் யூதர்களுக்கும் ரஷ்யர்களுக்கும் எதிரான இன வெறுப்பை உமிழ்பவை புதிய நாஜி கொள்கைகளை பரசாரம் செய்பவர்கள். இந்த அமைப்புகளின் தொண்டர்கள் தலைநகர் கீவ் நகரின் "சுதந்திர மைதானத்தை" ஆக்கிரமித்து ஆர்ப்பாட்டம் நடத்தினர், அரசு அலுவலகங்களை முற்றுகையிட்டனர், கலவர எதிர்ப்பு பொலிசை, பெற்றோல் வெடிகுண்டு, துப்பாக்கிகள் மற்றும் பிற ஆயுதங்களால் தாக்கினர்.


'ஊழல் நிறைந்த, மக்கள் விரோத யனுகோவிச் அரசை எதிர்க்கும் போராட்டத்தில் அராஜகவாதிகள், கம்யூனிஸ்டுகள், ரஷ்யர்கள், யூதர்கள் போன்றவர்களை அனுமதிக்க முடியாது' என்று அவர்களை கடுமையாக தாக்கி விரட்டியடித்தனர் [illegible] ஊழல் அரசை [illegible] ஐரோப்பிய, அமெரிக்க ஆதரவையும் நிராகரிக்கின்றனர்.

மேற்கத்திய ஊடகங்கள் இவற்றுக்கு யூரோ மைதான் போராட்டங்கள் என்று பெயர சூட்டி "ஊழல் நிறைந்த சர்வாதிகார யனுகோவிச் ஆட்சிக்கு எதிரான மக்களின் ஜனநாயகப் போராட்டம்" என்று தூக்கிப் பிடித்தன.


ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புப் பிரதிநிதி சீமாட்டி ஆஸ்டன்

டிசெம்பர் மாதம் உக்ரைன் பொருளாதாரத்துக்கு ரஷ்யா $25 பில்லியன் நிதி உதவி அறிவித்தது. மேலும் $5 பில்லியன் மதிப்பிலான இயற்கை எரிவாயுவை சலுகை விலையில் வழங்கவும் முன் வந்தது. ஆனால், ஜனாதிபதி யனுகோவிச்சுக்கு எதிரான போராட்டங்கள் தொடர்ந்து தீவிரமாக்கப்பட்டன.

போராட்டக்காரர்களுக்கு மேற்கத்திய பணமும் ஆயுதங்களும் தடையின்றி வழங்கப்பட்டுக்கொண்டிருந்தன. போராட்டக்காரர்கள் கட்டவிழ்த்து விட்ட வன்முறை கலவரங்களில் 88 பேர் கொல்லப்பட்டனர். ஐரோப்பிய ஒன்றியத்தின் சிறப்புப் பிரதிநிதி **சீமாட்டி ஆஸ்டன**, முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளர் ஜான் மெக்கெய்ன், ஐரோப்பிய விவகாரங்களுக்கான அமெரிக்க துணைச் செயலர் **விக்டோரியா நியூலாண்ட** ஆகியோர் போராடும் கும்பல்களை சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். "இருதரப்பிலும் கொல்லப்பட்டவர்களில் பலர் அரசு படையினரால் கொல்லப்படவில்லை, மாறாக எதிர்க்கட்சியினர் ஏற்பாடு செய்த தொலைதூர துப்பாக்கி குறியர்களால் (ஸ்னைப்பர்கள்) இறந்தார்கள்" என்ற தகவல், ஐரோப்பிய ஆதரவு எஸ்டோனிய வெளியுறவுத் துறை அமைச்சர் உர்மாஸ் பேட், சீமாட்டி ஆஸ்டனிடம் பேசும் தொலைபேசி உரையாடல்மூலம அம்பலமானது. மேலும், அந்த உரையாடல் அரசுக்கு எதிரான போராட்டங்கள் மேற்கத்திய நாடுகளால் திட்டமிட்டு இயக்கப்படுபவை என்பதையும் உறுதி செய்தது.


கீவ் நகரில் ஐரோப்பிய மற்றும் யூராசிய விவகாரங்களுக்கான அமெரிக்க வெளியுறவுத்துறை துணைச் செயலர் விக்டோரியா நியூலேண்ட்

பெப்ரவரி 21 ஆம் திகதி ஐரோப்பிய ஒன்றியத்தின் மேற்பார்வையில் யனுகோவிச் அரசுக்கும் எதிர்க்கட்சி போராட்டக்காரர்களுக்கும் இடையே ஒப்பந்தம் போடப்பட்டது. இந்த ஆண்டு பிற்பகுதியில் செப்டெம்பருக்கும் டிசெம்பருக்கும் இடையே ஜனாதிபதி தேர்தல் நடைபெறும் என்றும் அதுவரை இடைக்கால அரசின் ஆட்சி நடைபெறும் என்றும் 2004 இல் செய்யப்பட்ட சட்ட திருத்தங்கள் மீண்டும் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் உடன்படிக்கை ஏற்பட்டது. அதாவது [illegible] பெற்று 4 ஆண்டுகளாக [illegible] வந்த ஜனாதிபதி பதவிக் காலம் முடிவதற்கு முன்பே இடைக்கால அரசு ஒன்றை அமைக்கவும், தேர்தலை சீக்கிரமாக நடத்தவும் முன் வந்திருக்கிறார்.

ஆனால், மேற்குலக ஆதரவு கலகக்காரர்களோ பெப்ரவரி 22 ஆம் திகதியே ஒப்பந்தத்தை கிழித்து எறிந்துவிட்டு அதிகாரத்தை கைப்பற்றிவிட்டனர்.

1990-களில் உக்ரைனின் யுனைட்டட் எனர்ஜி சிஸ்டம்ஸ் நிறுவனததின் தலைமை செயற்பாட்டு அலுவலராக இருந்து பின்னர் உக்ரைனிய பெரு முதலாளியாக உருவெடுத்து, நாட்டின் பிரதமராக பதவி ஏற்று, தற்போது ஊழல் குற்றங்களுக்காக சிறையிடப் பட்டிருந்த யூலியா டைமஷென்கோவின் "தந்தை நாடு கட்சி" சார்பில் 10 அமைச்சர்களும், புதிய நாஜி, ரஷ்ய வெறுப்பு ஸ்வோ போடா கட்சி சார்பில் பாதுகாப்பு, இராணுவம், வெளியுறவு, வர்த்தகம், கலாசாரம் போன்ற துறை அமைச்சர்களும் இந்த அமெரிக்க ஆதரவு ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தப்பட்டனர்.

வலது தீவிரவாத அமைப்புகளின் உறுப்பினர்கள் ஊர்பாதுகாப்பு படைகளில் சேர்க்கப் பட்டிருக்கின்றனர்.


மார்ச் 9 ஆம் திகதி செவஸ்ட போலில் நடந்த பேரணி ஒன்றில் ரஷ்ய ஆதரவு -உக்ரைனிய ஆதரவு குழுக்களிடையே வாக்குவாதம்

வெள்ளை இனவாத குழுக்கள் ஸ்வஸ்திகாவுக்கு பதிலாக பயனபடுத்தும் செல்டிக் சிலுவை, நாஜி ரகசிய பொலிஸ் சின்னம் மற்றும் பிற ஹிட்லர் காலதிய அடையாளங்களை அவரகள் அணிந்து ரஷ்யர்களையும், யூதர்களையும் அழிப்பதற்கும், நாட்டை விட்டு துரத்துவதற்கும் பயங்கரவாத அடக்குமுறை பிரசாரத்தை கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.


உக்ரைனின் தேசிய பாதுகாப்பு படைகளின் கட்டுப்பாடு இந்த பயங்கரவாத அமைப்புகள் கையில் ஒப்படைக்கப் பட்டுள்ளது..... (தொடரும்)

-இணையம்-

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பங்குனி மாத இராசி பலன்கள்

## 15.03.2014-13.04.2014



## மிதுனம்

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள்,
திருவாதிரை, புனர்பூசம்
1,2,3 ஆம் பாதங்கள்**

**விடாப்பிடியாகச் செயற்பட்டு வெற்றி வாய்ப்புக்களை வரவழைத்துக் கொள்ளும் மிதுன இராசி நேயர்களே!**

## பக்குவமாகப் பேசியே இக்காலத்தில் காரியத்தைச் சாதித்துக் கொள்ளுங்கள்

**குடும்பச் சுமை கூடும்!**

பங்குனி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் புதன் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கும் குருவால் பார்க்கப்படுகிறார். 7, 10-க்கு அதிபதியின் பார்வை பதியும் பொழுது, வாழும் வாழ்வில் உள்ள இடையூறுகள் அகலும். என்றாலும், ஜென்ம குரு என்பதால் குடும்பச் சுமை கூடும். கொடுக்கல்-வாங்கல்களில் கொஞ்சம் திணறல்கள் ஏற்படும்.

கொடுத்த வாக்கை ஒரு சில சமயங்களில் காப்பாற்ற இயலாமல் போகலாம். ஆனால் எதற்கும் கவலைப்படாதவர்கள் நீங்கள். நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று நினைப்பீர்கள். நாடு மாற்றச் சிந்தனைகள் ஒரு சிலருக்கு மேலோங்கும். அதற்கான வாய்ப்பும் கைகூடி வரும். உங்கள் சுய ஜாதகத்தின் தெசாபுத்தி பலம் பெற்றிருந்தால் வரும் வாய்ப்புகளை ஏற்றுக் கொள்ளலாம். இல்லையேல் குருப்பெயர்ச்சி வரை பொறுத்துக் கொள்வது நல்லது.

புத்திர ஸ்தானத்தில் சனி, ராகு சேர்க்கை அடைந்திருப்பது அவ்வளவு நல்லதல்ல. அவரகளை அடிக்கடி கண்காணித்துக் கொள்வதன் மூலம் பிரச்சினைகளிலிருந்து விடுபட இயலும். 4இல் செவ்வாய் வக்ரம் பெற்றிருப்பது நன்மைதான். 6-க்கு அதிபதி வக்ரம் பெறுவதால் எதிரிகளின் பலம் குறையும். லாப நோக்கத்தோடு பழகியவர்கள் உங்களை விட்டு விலகுவர். ஆபத்துக் காலத்தில் கைகொடுதீது உதவும் நண்பர்கள் யார் என்பதைக் கண்டுகொள்வீர்கள்.

வாங்கிய சொத்துக்களை விற்பதற்காக எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். பல நாட்களுக்கு முன்பு வாங்கிப் போட்ட இடம் எதிர்பார்த்த அளவிற்கு விலை போகவில்லையே என்று கவலைப்பட்டவர்கள் இப்போது பலமடங்கு லாபத்திற்கு விற்பர். அது மட்டுமல்ல, அதன்மூலம் வரும் தொகையை மூலதனமாக்கி தொழில் வளம் பெருக புதிய கூட்டாளிகளையும் தேர்ந்தெடுக்கும் சூழ்நிலை கூட ஒரு சிலருக்கு உருவாகும்.

மாதத் தொடக்கத்தில் விரயாதிபதி சுக்ரன் 8இல் மறைவது நன்மைதான். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதற்காக விரயம் செய்ய முன்வருவீர்கள். குடும்பச் சுமை கூடும். கொள்கைப் பிடிப்பை ஒரு சில சமயங்களில் தளர்த்திக் கொள்ள வேண்டியிருக்கும்.

**மீன புதனின் சஞ்சாரம்!**

உங்கள் ராசிநாதனாகவும், நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் இருக்கும் புதன், மீனத்தில் நீச்சம் பெறப்போகிறார். எனவே மார்ச் 28 ஆம் திகதி முதல் உங்கள் ராசிநாதன் வலமை இழக்கிறார். கேந்திராதிபத்ய தோஷம் பெற்ற கிரகம் வலிமை இழப்பது யோகம் தான். என்றாலும், ராசிநாதனாகவும் இருப்பதால் உடல் ஆரோக்கியத்தில் தொல்லைகள் ஏற்படும். விலகிச் சென்ற எதிரிகள் மீண்டும் தொல்லை தரத் தொடங்குவர். பணப்பற்றாக்குறை அதிகரிக்கும். பக்குவமாகப் பேசி இக்காலத்தில் காரியங்களைச் சாதித்துக் கொள்வது நல்லது.


**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 31 ஆம் திகதி கும்ப ராசிக்கு சுக்ரன் செல்ல இருக்கிறார். இதன் விளைவாக சில நல்ல மாற்றங்களும் உங்களுக்கு வந்து சேரும். சுக்ரன் 5ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குவதால் 9இல் சஞ்சரிக்கும் பொழுது பொன், பொருள் சேர்க்கை ஏற்படும். புதிய முயற்சிகளில் லாபம் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். அன்றாட வாழ்க்கை நன்றாக அமைய எடுத்த முயற்சிகளுக்கு உறவினர்கள் ஆதரவுக் கரம் நீட்டுவர். பெண்வழிப் பிரச்சினைகள் நல்ல முடிவிற்குவரும். பெண் குழந்தைகளின் எதிர்கால நலன்கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும். கல்யாணக் கனவுகள் நனவாகும். இம்மாதம் வியாழன் தோறும் விரதமிருந்து குருவை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் உங்கள் ராசிநாதன் நீச்சம் பெறுவதால் உடல் நலத்தில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். விரயங்கள் அதிகரிக்கும். வேலைப்பளு கூடும். விருந்தினர்களின் தொல்லை உண்டு. வீடு விற்பனையால் கிடைத்த லாபத்தைக் கொண்டு மாதத்தின் பிற்பகுதியில் உங்கள் பெயரிலேயே புதுச் சொத்துக்கள் வாங்கலாமென்று குடும்ப உறுப்பினர்கள் முடிவெடுப்பர். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். ஒரு சிலருக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும் அமைபு ஏற்படலாம். சர்ப்ப பரிகாரம் செய்வதன மூலம் சந்தோஷங்கள் அதிகரிக்கும்.

## சிவல்புரி சிங்காரம்



## கடகம்

**புனர்பூசம் 4 ஆம் பாதம்,
பூசம், ஆயிலியம்**

**பொதுநலத்தில் ஈடுபட்டுப் புகழ் மிக்கவர்களாக விளங்கும் கடக இராசிநேயர்களே!
நல்ல தகவல்கள் இல்லம் வந்து சேரும்!**

## உறவினர்களும் நண்பர்களும் பகை பாராட்டாமல் உதவிக்கரம் நீட்டுவர்

பங்குனி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, மாதத் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரை விரயாதிபதி புதன் பார்க்கிறார். எனவே, தன விரயங்கள் அதிகரிக்குமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். உங்கள் ராசி அடிப்படையில் சகாய ஸ்தானாதிபதியாகவும் புதன் விளங்குகிறார். எனவே, விரயங்கள் நன்மை ஏற்படும் விதத்திலேயே அமையும்.

குறிப்பாக இல்லம் கட்டிக் குடியேற வேண்டும் என்று நினைத்திருந்தால் அதற்காக எடுத்த முயற்சிகளில் இதுவரை தடை இருந்திருக்கலாம். அந்த தடை இனி அகலும. கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். அல்லது பழைய சொத்துக்களை விற்றுவிட்டு அதன் மூலம் வரும் லாபத்தைக் கொண்டு அதில் ஒரு பகுதியை புதிய இல்லம் கட்டிக் குடியேறுவதற்காக செலவிடுவீர்கள். குழந்தைகளின் வளர்ச்சிப் பாதையில் அக்கறை காட்டுவீர்கள்.

பெண்களின் எதிர்கால நலன்கருதி ஆபரணங்கள் மற்றும் சீர்வரிசைப் பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். குறிப்பாக இதுவரை அர்த்தாஷ்டம சனியாக விளங்கிய சனி பகவான் இப்பொழுது வக்ர இயக்கத்தில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டார். இது மிகுந்த நன்மையை கொடுக்கும்.

சுக ஸ்தானாதிபதி சஞ்சரித்து சுகக் கேடுகளையும், சொல்லைச் செயலாக்கி காட்ட முடியாத சூழ்நிலையையும் உருவாக்கிய சனி பகவான் இனி நல்ல வளர்ச்சியை இல்லத்தில் கொண்டு வந்து சேர்க்க ஆயத்தம் செய்வார். சுய ஜாதகத்தில் சனி வக்ர இயக்கத்தில் இருககுமேயானால் மிகப்பொருத்தமான பலன்கள் வந்து சேரும்.

அதே நேரத்தில் செவ்வாயும் வக்ர இயக்கத்தில் இருக்கிறார். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியான செவ்வாயும் வக்ரம் பெறுவது அவ்வளவு நல்லதல்ல. பிள்ளைகளை அதன் போக்கில் விடுவதன் மூலம் ஒருசிலர் பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். எனவே, பெற்றோர்களின் மேற்பார்வையில் பிள்ளைகளை வைத்துக் கொள்வது நல்லது. அதிக தூரத்தில் வசிக்கும் பிள்ளைகளாக இருந்தால் அதன் போக்கில் மாறுபாடுகள் ஏற்படுவது போல் தெரியும் பொழுதே சீர் செய்து கொள்வது நல்லது. உடன்பிறப்புகளையும் அனுசரித்துச் செல்வது நல்லது. வியாழன் வக்ர நிவர்த்தியாகி விட்டதால் தந்தை வழி உறவில் இருந்த விரிசல்கள் அகலும். பங்காளிப் பகை மாறும். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவரகளுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரலாம்.

**மீன புதனின் சஞ்சாரம்!**

மார்ச் 28ஆம் திகதி மீன ராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். 3, 12க்கு அதிபதி நீச்சம் பெறுவது நன்மைதான். 'கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம்' என்பதற்கு ஏற்ப சில நல்ல மாற்றங்களும், திடீர் திருப்பங்களும் நிகழும். உறவினர்களும், நண்பர்களும் பகை பாராட்டாமல் உதவிக்கரம் நீட்டுவர். ஒரு சிலர் முக்கிய பொறுப்புகளை உங்களிடம் ஒப்படைக்க அதன் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

**கும்ப சுக்ரனின் சஞ்சாரம்!**

மார்ச் 31 ஆம் திகதி முதல் கும்ப ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப் போகிறார். இது மேலும் உங்களுக்கு நன்மையை வழங்குவார். அசுர குரு 8 இல் மறையும் பொழுது, அபரிமிதமான வளர்ச்சியை உங்களுக்கு கொடுக்கும். பெண்வழிப்பிரச்சினைகள் நல்ல முடிவிற்கு வரும். பெரிய பொறுப்புகளிலிருந்து சாதாரண நிலையில் மாற்றப்பட்டவர்கள் மீண்டும் பழைய நிலையை அடைவர். வாகன யோகம் உண்டு. பழைய வாகனங்கள் பழுதாகிக் கொண்டிருக்கிறதே என்று கவலைப்பட்டவர்கள் இப்பொழுது அதைக் கொடுத்துவிட்டுப் புதிய வாகனங்களை வாங்குவது பற்றிச் சிந்திக்கத் தொடங்குவர். இம்மாதம் செவ்வாய் தோறும் விரதமிருந்து முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள**

இம்மாதம் பண வரவு திருப்திகரமாக இருக்கும். பக்கத்து வீட்டாரின் பகை மாறும். கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். உங்கள் குணமறிந்து குடும்ப உறுப்பினர்கள் நடந்து கொள்வர். பிள்ளைகளின் முன்னேற்றம் கருதி மாதத்தின் மையப் பகுதியில் ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உண்டு. கல்யாணப் பேச்சு வார்த்தைகள் சாதகமாக முடியும். ஒரு சிலர் திடீர் இடமாற்றம், இலாகா மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். அர்த்தாஷ்டம ராகுவிற்கு பரிகாரமாக சர்ப்ப சாந்திகளை மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்ட செயலக புள்ளி விபரத்தில் பிழை கூறுவது தவறு

## சஜீவனின் குற்றச்சாட்டிற்கு சுந்தரம் அருமைநாயகம் பதிலுரை

(யாழ்ப்பாணம்)

காணி அற்றவர்களையும் உடனடி யாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று நினைத்தால் மக்களின் மீள்குடியேற்றம் தடைப் பட்டு விடும் எனவும் வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தினை தடுத்து நிறுத்துவதற்கான முயற்சி களை சிலர் மேற்கொள்கின்றனர். ஆனால், மீள்குடியேற்றத்திலுள்ள சிக்கல்களை ஆராய்வதற்கு யாரும் முன்வருவதில்லை என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் பதிலுக்கு குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் மீள்குடி யேற்ற வேண்டிய மக்களின் புள்ளி விபரத்தினை மாவட்ட அரசாங்க அதிபர் தவறாக வெளியிடுவதாக வலி.வடக்கு பிரதேசசபையின் உத வித்தவிசாளர் சண்முகலிங்கம் சஜீவன் குற்றஞ்சாட்டியிருந்தார்.

இவ்விடயம் தொடர்பாக அரசா ங்க அதிபரிடம் கேட்டபோது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கில் மீள்குடியேற்ற வேண்டிய மக்களின் புள்ளிவிபர ங்களை பிரதேச செயலர்கள் வழ ங்குவதன் அடிப்படையில், யாழ். மாவட்ட செயலகம் அவற்றினை திரட்டி, அப்புள்ளி விபரங்களை வெளி யிட்டுள்ளது. இந்த புள்ளி விபரம் யாழ். மாவட்ட செயலரின் தனிப் பட்ட புள்ளி விபரம் அல்ல.

கடந்த 4ஆம் திகதி வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் தொட ர்பான கலந்துரையாடல் மீள்குடி யேற்ற அமைச்சின் ஏற்பாட்டில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடை பெற்றது.

இதன்போது, மீள்குடியேற்ற அமைச்சின் பிரதிச் செயலாளர் யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலாளர்களுடனும் கலந்துரை யாடி புள்ளி விபரங்களை பெற்றுக் கொண்டார்.

இதன்போது, யாழ்.மாவட்டத் தில் 5 ஆயிரத்து 878 குடும்பங்கள் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ள னர் என தெரிவித்திருந்தேன். அத்துடன், மீள்குடியேற்றத்திற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப ட்டு வரும் நிலையில், மீள்குடியேற் றத்திற்கு பதிவுகளை மேற்கொள்ளா தவர்கள் மீள்குடியேற்றத்தின் போது வருகை தந்தால், அவர்களையும் அந்த மீள்குடியேற்றத்தில் பதிவுகளை மேற் கொள்ள வேண்டுமென்றும் மீள குடியேற்ற அமைச்சின் பிரதி செயலாள ரிடம் கோரிக்கை விடுத்திருந் தேன்.


மீள்குடியேற்றத்தில் அக்கறை யுள்ளவர்கள், என்னுடன் சந்திப் பினை மேற்கொண்டு மீள்குடியேற்றத திற்கான கருத்துக்களை தெரிவித்தி ருக்க வேண்டும். அவ்வாறு மீள் குடியேற்றம தொடர்பான கருத்து க்களை யாரும் தெரிவிக்காது, யாழ். மாவட்ட செயலர் வெளியிட்டுள்ள புள்ளி விபரத்தில் பிழை எனக் கூறுவது நாகரீகமற்ற செயல் ஆகும்.

இதன்மூலம், மக்களின் பிரச் சினைகளை தீர்ப்பதற்கு முன்வராது, மக்களின் பிரச்சினைகளை அதிகரி ப்பதற்கு சிலர் முயல்கின்றமை தெரியவருகின்றது.

இவ்வாறு செய்பவர்கள், வலி. வடக்கு மக்களின் மீள்குடியேற் றத்தினை குழப்புவதற்கான் முயற்சி களை மேற்கொண்டு வருகின்ற னரா என்று நான் சந்தேகப்படு கின்றேன்.

தற்போது புள்ளி விபரத்திலுள்ள மக்களை மீள்குடியேற்றம் செய்வ தற்கான நடவடிக்கைகளை மேற் கொள்ளாது, காணி அற்றவர்களை யும் உடனடியாக மீள்குடியேற்றம் செய்ய வேண்டும் என்று நினைத் தால் எமது மக்களின் மீள்குடி யேற்றம் தடைப்பட்டு விடும்.

அதற்கு இடமளிக்காது, வலி. வடக்கு மக்களின் மீள்குடி யேற்றத் தினை மேற்கொள்வதற்கு விரும்புவ ர்கள் தமது கருத்துக்களை என்னி டம் தெரிவித்தால், மீள்குடியேற் றத்திலுள்ள பிரச்சினைகளை தீர்ப் பதற்கு ஏதுவாக இருக்கும் என்று அரசாங்க அதிபர் மேலும் தெரி வித்தார். (2-6)



தென்மராட்சி கல்வி வலய சைவ சமயப் பிரிவினரால் ஆசிரியர்களுக்கிடையே நடத்தப்பட்ட வில்லுப் பாட்டு போட்டியின் ஒரு பகுதியை படத்தில் காணலாம். (படம்: சாவகச்சேரி செய்தியாளர்)

# ராஜீவ் கொலை குற்றவாளிகளின் தீர்ப்பை மீளாய்வு செய்ய முடியாது

## பிரதம நீதியரசர் குழு நிராகரிப்பு

(புதுடில்லி)

ராஜீவ் காந்தியின் கொலைக் குற்றவாளிகளை விடுதலை செய் வதற்கு அடிப்படையாக அமைந்திரு ந்த இந்திய உயர் நீதிமன்றத்தின் உத்ரவு ஒன்றை மீளாய்வு செய்ய வலியுறுத்தி இந்திய மத்திய அர சாங்கம் தாக்கல் செய்திருந்த மனு நிராகரிக்கப்பட்டது.

மரண தண்டனை விதிக்கப்பட் டவர்களின் கருணை மனுவை பரிசீலிக்க காலதாமதம் ஏற்படும் பட்சத்தில் அவர்களின் தண்ட னையை ஆயுள் தண்டனையாக குறைக்க முடியும் என்று கடந்த ஜனவரி மாதம் 21 ஆம் திகதி இந்திய உயர் நீதிமன்றம் தீர்ப்ப ளித்திருந்தது.

இதனடிப்படையிலேயே ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு குற்ற வாளிகளின் மரண தண்டனையும் இரத்து செய்யப்பட்டு அது ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டி ருந்தது.

எனினும் இந்த உயர் நீதிமன் றத்தின் தீர்ப்பினை மீளாய்வு செய்து தீர்ப்பினை இரத்து செய்து விட்டால் ராஜீவ் காந்தியின் கொலை குற்றவாளிகளான முருகன், சாந் தன் , பேரறிவாளன் ஆகி யோருக்கு மீண்டும் மரண தண்டனையை வழங்க முடியும் என்று காங்கிரஸ் அரசாங்கம் கணக்கிட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த தீர்ப்பை மீளாய்வு செய்வதற்காக வலியுறு த்தி தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்று தெரிவித்து இந்திய பிரதம நீதியரசர் பி.சதாசிவம் தலை மையிலான நீதியரசர்கள் குழு அதனை நிராகரித்துள்ளது. (2)

# கர்ப்பூரத் திருவிழா

(பருத்தித்துறை)

அல்வாய் வேவிலந்தை ஸ்ரீமுத் துமாரி அம்மன் ஆலயத்தில் எதிர் வரும் 17 ஆம் திகதி திங்கட்கிழமை பங்குனி உத்தர நாளில் கர்ப்பூரத் திருவிழா நடைபெறவுள்ளது.

இத்தினத்தில் கர்ப்பூர தீபம் எடுக்க விரும்புபவர்கள் முன்கூட் டியே தமது பெயர்களைப் பதிவு செய்து கர்ப்பூர தீபம் எடுக்கலாம் என ஆலய நிர்வாகம் தெரிவித் துள்ளது. (2)

# அலுகோசு பதவிக்கு மீண்டும் விண்ணப்பம் கோரல்

தூக்குத் தண்டனை நிறைவேற் றும் 'அலுகோசு' பதவிக்கு மீண்டும் விண்ணப்பம் கோரி புதிதாக அலு கோசு ஒருவரை நியமிக்க துரித நடவடிக்கை எடுப்பதாக சிறைச் சாலை ஆணையாளர் நாயகம் சந்ரரத்ன பல்லேகம தெரிவித்தார்.

கடந்த வாரம் அலுகோசு பத விக்கு ஒருவர் நியமிக்கப்பட்டிருந் தார். ஆனால், இவருக்கு வழங்கப் பட்ட பயிற்சியின் போது வெலிக் கடை சிறையல் உள்ள தூக்கு மேடையைக் கண்டு அதிர்ச்சியடைந்த விதத்தை இலங்கைவரவேற்பதாகவும்அந்தஅறிக் கையில் சுட்டிக் காடடப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட தரப்பினர் நிலை மையை மேலும் மோசமடையச் செய்யாமல், ஜனநாயக ரீதியில் செயற்பட்டு சுமுகமான தீர்வொன்று க்கு வருவார்கள் என இலங்கை எதிர்பார்ப்பதாகவும், உக்ரைன் மக்கள் மத்தியில் விட்டுக்கொடுப்பு ஏற்படுமென்று நம்புவதாகவும் வெளிவிவகார அமைச்சின் அறிக் கையில் மேலும் தெரிவிக்கப்பட்டு ள்ளது. (2)

# கொலைகளுக்கான பொறுப்பை அரசின் மீது சுமத்த அமெ.முயற்சி

## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் கொலைகளை செய்து அதற்கான பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்த, அமெ ரிக்கா முயற்சித்து வருவதாக அமை ச்சர் விமல் வீரவன்ச குற்றம் சுமத் தியுள்ளார்.

கொழும்பு கிராண்ட்பாஸ் பிரதே சத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்குள் மக்கள் ஆர்ப்பா ட்டங்களை ஏற்பாடு செய்து அதில் தமது ஆட்களை புகுத்தி கண்டு பிடிக்க முடியாதபடி கொலைகளை செய்து அந்த கொலைகளுக்கான பொறுப்பை அரசாங்கத்தின் மீது சுமத்த அமெரிக்க முயற்சித்து வருகிறது.

பணம் கொடுத்து விலைக்கு வாங்கிய அதிகாரிகளை பயன்ப டுத்தி அமெரிக்கா, இலங்கைக்குள் இந்த மக்கள் ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளவுள்ளது.

மாகாண சபைத் தேர்தலை கண்காணிக்க கொழும்பில் உள்ள அமெரிக்க தூதரகம் புலனாய்வு துறைகளுக்கு பயன்படுத்தும் கமரா கட்டமைப்பையும், புதிய உபகர ணங்களையும் கொண்டு வந்துள் ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன.

வெனிசூலாவை ஸ்திரமற்ற நிலைமைக்கு அமெரிக்கா பயன் படுத்திய வேலைத்திட்டத்தை இல ங்கையிலும் அந்நாடு அரங்கேற்றி வருகிறது.

அதேவேளை மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப், வடக்கு மாகாண த்திற்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்குமாறு ஜெனீவா மனித வுரிமை பேரவைக்கு யோசனை முன்வைத்துள்ளார்.

பெரும்பான்மை சிங்கள ஆட்சி யாளர்களிடம் தாம் துன்பப்படுவ தாக ஆயர் கூறியுள்ளார்.

ஆயர் வெறுமனே இந்த யோச னைய்ய முன்வைக்கவில்லை.



அதுதான் தற்போது மேற்கொள்ள ப்பட்டு வரும் நடவடிக்கை.

போர் குற்றங்கள் நடந்தன என்று ஜெனீவா மனிதவுரிமை பேரவை கூறுகிறது.

வடக்கில் இராணுவம் இருக்கி ன்றது இதனால் தமிழ் மக்களுக்கு தொந்தரவு கொடுக்கப்படுகிறது என்ற நிலைப்பாட்டை அவர்கள் தொடர்ந்தும் முன்னெடுத்து வருகி ன்றனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இல்லாதவற்றை இருப்பதாக காட்டி வருகிறது என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# ரணில் விக்ரமசிங்க ஒரு அப்பாவி

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை சிறந்த முறையில் பாதுகாத்து கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில்நடை பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில,

எதிர்க்கட்சித் தலைவர் ஒரு அப்பாவி, அந்த அப்பாவி மீது எப்போது தாக்குதல் நடத்துவார்கள் என்பது தெரியாது. இதனால் நாடா ளுமன் றத்திலும் அவருக்கு வழங் கப்படும் பாதுகாப்பை அதிகரிக்கும் யோச னையை முன்வைக்கின்றேன்.

இலங்கையில் தினமும் குண்டு வெடிக்க இடமளித்து அழிவுகளுக்கு இடம் கொடுத்திருந்தால், அமெரிக்கா வும் பிரித்தானியாவும் இலங் கைக்கு எதிராக செயற்படாது.நாட்டை அபிவிரு த்தி செய்யாது, இருந்தவற்றை இருந் தது மாதிரி வைத்தி ருந்தால் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ இந்த நாடு களுக்கு சிறந்த தலைவராக இருந் திருப்பார்.

அதனை விடுத்து நாட்டை அபி விருத்தி செய்ததே ஜனாதிபதி செய்த தவறாக கருதி அவரை சர்வ தேச போர்க்குற்ற நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல முயற்சித்து வரு கின்றனர் என்றார் அவர். (செ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மன்னார் மனித எச்சங்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு

(கொழும்பு)

மன்னார்- திருக்கேதீஸ்வரம் - மாந்தை மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட மனித எச்சங்கள் இரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இந்த மனித எச்சங்கள் தொடர்பான வழக்கு மன்னார் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளையில் நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்திருப்பதாக அவர் கூறியுள்ளார்.

இதன்படி இந்த வாரத்தில் குறித்த எச்சங்களை அரசாங்க இரசாயன பகுப்பாய்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

32 தடவையாக தோண்டப்பட்ட இந்த மனித புதைகுழியில் இரு ந்து 84 மனித எச்சங்கள் மீட்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# இலங்கை தொடர்பில் விசாரணை நடத்த நவநீதம்பிள்ளைக்கு அதிகாரமில்லை

**ரஷ்யா, சீனா தெரிவிப்பு**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளைக்கு, இலங்கை தொடர்பில் விசாரணை நடத்த அதிகாரம் கிடையாது என ரஷ்யாவும், சீனாவும் தெரிவித்துள்ளன.

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை குழுவொன்றை நியமிக்க நவநீதம்பிள்ளைக்கு அதிகாரம் கிடையாது.

இவ்வாறான விசாரணை நடத்த அதிகாரம் இருந்தால் அது தறித்து அந்த அதிகாரங்களை சுட்டிக்காட்ட வேண்டும்.

மனிதவுரிமை பேரவையில், இலங்கைக்கு, சீனா, ரஷ்யா, கியூபா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் ஆதரவளித்து வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை தொடர்பில் விசாரணை நடத்த ஆணைக்குழு அமைக்கும் அதிகாரம் நவநீதம்பிள்ளைக்கு காணப்படுவதாக ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் தீர்மானத்திற்கு அமைய சர்வதேச விசாரணை நடத்த வேண்டுமென அரச சார்பற்ற நிறுவன செயற்பாட்டாளர் நிமால்கா பெர்னாண்டோ மற்றும் வட மாகாணசபை உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கோரியுள்ளனர். (2)

# இலங்கை விடயத்தில் தலையிடுவது தேவையற்ற செயல்- மகிந்த சமரசிங்க

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக சர்வதேச விசாரணையொன்றைக் கொண்டு வரும் முயற்சியானது இலங்கை விடயத்தில் அநாவசியமாக மூக்கை நுழைக்கும் தேவையற்ற செயல் என பெருந்தோட்டத்துறை அமைச்சரும், ஜனாதிபதியின் மனித உரிமைகள் தொடர்பான விசேட பிரதிநிதியுமான மஹிந்த சமரசிங்க ஜெனீவாவில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையின் மாநாட்டில் அங்கம் வகிக்கும் இலத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் பார்வையாளர் நாடுகளின் பிரதிநிதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

இலங்கை அடைந்திருக்கும் இலக்குகள் குறித்தும் அமைச்சர் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தார்.

இச்சந்திப்பில் ஐக்கிய நாடுகள் சபைக்கான இலங்கையின் நிரந்தர வதிவிடப்பிரதிநிதி ரவிநாத ஆரிய சிங்கவும் கலந்து கொண்டிருந்தார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



## ஸ்ரிபன் ஸ்ரனிஸ்லாஸ்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரிபன் ஸ்ரனிஸ்லாஸ் (ஓய்வு பெற்ற இரசாயன பரிசோதகர்) 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் திருப்பலி நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு Saint Martin de porres Church , 4179 Lawrence Ave , Scarborough , ON M1E 2S3 , Canada என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்பட்டு பின் னர் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.



## திருமதி சிவஞானசுந்தரம் சக்குபாய்

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் பிரித்தானியாவை வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானசுந்தரம் சக்குபாய் கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு Goldsmiths Community Centre , Castillon Road , London SE6 1QD , UK என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுல் தகனம் செய்யப்படும்.



## திருமதி கந்தையா நாகேஸ்வரி

தனங்கிளப்பைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா நாகேஸ்வரி கடந்த 10 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Saint John's Dixie Cemetery Chapel , 737, Dundas Street E , Mississauga , ON , L4Y 2B5 , Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## செல்லப்பா அமிர்தலிங்கம்

எழுவைதீவைப் பிறப்பிடமாகவும் நயினாதீவு 7 ஆம் வட்டாரம், கனடா ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா அமிர்தலிங்கம் கடந்த11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுக்கிரியைகள் 17 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு Saint James Cemetery , 635 Parliament St , Toronto , ON M4X 1R1 , Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



## திருமதி காசிப்பிள்ளை தவமணி

பத்தமேனி ,வைரவர்கோயிலடி, அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட காசிப்பிள்ளை தவமணி நேற்று முன்தினம் புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தீர்த்தாங்குள இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



## சின்னத்தம்பி நடராஜா

அளவெட்டி பெத்தாவளையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மாரியிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி நடராஜா 11ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கேணிப்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு:
021 321 0815,
021 567 1532

# நினைவுச் சின்ன யானைக்குட்டியை கொரியாவுக்கு அனுப்பிவைக்கத் தடை

(கொழும்பு)

போர் வெற்றி நாளில் பிறந்த யானைக் குட்டியை, வடகொரியாவிற்கு அனுப்பி வைக்க கூடாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தடை விதித்துள்ளார்.

இந்த யானைக் குட்டிக்கு தினுதா (வெற்றிநாள்) எனப் பெயரிடப்பட்டுள்ளது.

குறித்த யானைக் குட்டியை வடகொரியாவின் மிருகக்காட்சிச்சாலையொன்றிற்கு அனுப்பி வைக்க, மிருகக்காட்சிச்சாலை அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

கடந்த 2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி பின்னவல யானைகள் சரணாலயத்தில் இந்த யானைக்குட்டி பிறந்தது. 30 ஆண்டு கால போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட தினத்தில் இந்த யானைக் குட்டி பிறந்தது.

தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த ஓர் நினைவுச் சின்னமாக இந்த யானைக் குட்டியை கருத வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.எனவே இந்த யானைக் குட்டியை வெளிநாடு ஒன்றுக்கு அனுப்பி வைப்பதனை அனுமதிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த யானைக் குட்டி நேற்று முன்தினமிரவு விமானம் மூலம் வடகொரியாவுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த நிலையிலேயே, ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. (2)

# ஜெயா பிரதமராக வேண்டும்; நாஞ்சில் சம்பத் தெரிவிப்பு



இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவுக்கு தண்டனை கிடைக்க ஜெயலலிதா பிரதமராக வேண்டும் என நாஞ்சில் சம்பத் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி பாராளுமன்ற தொகுதி அ.தி.மு.க. வேட்பாளர் ஜாண்தங்கத்தை ஆதரித்து கொள்கை பரப்பு துணை செயலாளர் நாஞ்சில் சம்பத் மாவட்டம் முழுவ தும் தீவிர பிரசாரம் செய்தார்.

அ.தி.மு.க. வேட்பாளர் ஜாண் தங்கத்தை ஆதரித்து நாஞ்சில் சம்பத் பேசும்போதே கூறியதாவது,

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். தனது கட்சிக்கு அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் என்று பெயர் சூட்டினார். அவர் இன்று அல்ல, நாளை இந்த இயக்கம் இந்தியாவை ஆளும் என்று நம்பினார். அந்த நம்பிக்கைக்கு உரமிடும் வகையில் அ.தி.மு.க.வுக்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும்.

இந்திய அளவில் மாற்றத்தை ஜெயலலிதாவால் மட்டுமே தர முடியும். இலங்கை ஜனாதிபதி மகிந்தவை போர் குற்றவாளியாக்க வேண்டும் என்று சட்டசபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. மகிந்தவுக்கு தண்டனை கிடைக்க ஜெயலலிதா பிரதமர் ஆக வேண்டும் என்றார். (2)

# புனரமைப்பு பணிக்கு ஜப்பான் நிதியுதவி

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தப்பாதிப்புக்கு உள்ளான பகுதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக ஜப்பான் அரசாங்கம் 3.7 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி யுள்ளது.


இந்த நிதியைக்கொண்டு சமூக மறுசீரமைப்பு வேலைத்திட்டம், வாழ்வாதார மேம்பாடு பெண்கள் அபிவிருத்தி போன்ற வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

ஐக்கிய நாடுகளின் மனித குடியேற்றம் மற்றும் நிலையான அபிவிருத்தி நிலையத்தின் ஊடாக இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது . (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முள்ளியவளை பொதுச் சந்தைக் கட்டடம் வேலைகள் பூர்த்தியடைந்ததும் திறக்கப்படும்

## கரைதுறைப்பற்று பிர.செயலாளர் சுட்டிக்காட்டு



(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் கீழ் ஏ-34 வீதியிலுள்ள முள்ளியவளைப் பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதியின் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியடைந்தவுடன் மக்களின் பாவனைக்கு விடப்படுமென பிரதேச சபையின் செயலாளர் சு.ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

குறித்த பொதுச்சந்தைக் கட்டடத்தின் வேலைத்திட்டங்கள் தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

முள்ளியவளைப் பொதுச்சந்தை யுத்தத்தினால் சேதமடைந்திருந்தது.

இந்நிலையில் 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றம் செய்யப்பட்ட பின்னர் கடந்த 2013ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி ஒப்பந்தகாரரிடம் 3 மாத கால ஒப்பந்த அடிப்படையில் சந்தைக் கட்டடம் புனரமைப்புக்காக கையளிக்கப்பட்டது.

ஆயினும் கடந்த 3 ஆம் திகதி திங்கட்கிழமையுடன் ஒப்பந்தகாலம் முடிவடைந்தபோதும் ஒப்பந்தகாரர்கள் சந்தைப் புனரமைப்பு வேலையை பூர்த்தி செய்யாமையினால் அதற்கான காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தைக் கட்டடப் புனரமைப்பிற்காக பிரதேச சபையினால் ஈட்டப்பட்ட வருமானத்தில் 60 இலட்சம் ரூபாநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தற்போது சந்தையின் பிரதான கட்டட வேலைகளும் சுற்றுவேலிகள் அமைக்கும் பணிகளும் நிறைவடைந்துள்ளன.

சந்தையின் உள் வளாகப் பகுதியில் சமதரை ஆக்குதல், சந்தையின் கடைத்தொகுதிகள் அமைத்தல், மின்னிணைப்பு ஆகிய வேலைகள் முடிவடையாமலுள்ளன.

எனவே, பூர்த்தி செய்யப்படாமலுள்ள வேலைகள் நிறைவு செய்யப்பட்ட பின்னர் ஒப்பந்தகாரர்களால் பிரதேச சபையிடம் சந்தை கையளிக்கப்பட்ட பின்னர் பிரதேச சபையினர் முல்லைத்தீவு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளருக்கு தகவல் கொடுத்து அவர் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் தகவலைப் பெற்று வழங்கிய பின்னரே சந்தையை திறக்கமுடியும்.

இச்சந்தைக் கட்டடம் திறக்கப்பட்டால் ஆறு கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 6 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயனடைவார்கள்.

எனவே, வேலைகள் பூர்த்தியடைந்தவுடன் வெகுவிரைவில் சந்தைக் கட்டடம் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படும் என்றார். (2-9-267)

# மக்களுக்கு சமுர்த்தி போஷாக்கு முத்திரை கிடைப்பதில்லை

## உரியவர்கள் செயற்பாடுகள் குறித்து வேதனை


நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட பொது மக்களுக்கு சமுர்த்தி போஷாக்கு முத்திரை கிடைப்பதில்லை என பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


சமுர்த்தி அதிகார சபையால் கர்ப்பிணிகள் மற்றும் குழந்தை கிடைத்தவர்களுக்காக வழங்கப்படும் போஷாக்கு முத்திரை இதுவரையும உரியவர்களுக்கு வழங்கப்படவில்லை.

இம் முத்திரைகள் குறிப்பிட்ட காலப்பகுதியிலேயே பயனாளிகளுக்கு வழங்க முடியுமாக இருந்த போதிலும் குறித்த காலத்தில் அவற்றை வழங்காமையால் பலரும் இத் திட்டத்தில் பயனை அடைய தவறி வருகின்றனர்.

இதேவேளை நெடுங்கேணி பிரதேசத்தில் சமுர்த்தி திட்டத்திற்கான விபரங்களை சமுர்த்தி உத்தியோகத்தர்கள் சரியான முறையில் மக்களிடமிருந்து திரட்டாத காரணத்தால் சமுர்த்தி திட்டங்கள் மக்களிடம் சரியாக சென்றடையாத நிலை காணப்படுகின்றது.

மீள்குடியேறிய மக்களுக்கு சமுர்த்தியினூடாக பல்வேறு திட்டங்கள் அறிமுகம் செய்துள்ள போதிலும் அதிகாரிகள அதனை மக்களுக்கு கிடைக்காமல் செய்கின்ற செயற்பாடுகள் வேதனைக் குரியது எனவும் இது தொடர்பில் சமபந்தப்பட்டோர் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனா. (2-9-250)





யுத்தத்தின் தாக்கமும் அதன்பின்னரான காலமும் என்னும் தொனிப்பொருளில் சி.ஆர்.சி.நிறுவனத்தின் ஏற்பாட்டில் புகைப்படக் கண்காட்சி அண்மையில் வவுனியாவில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்கள் கண்காட்சியை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர், என்.குமார்)




# பாலைதீவு அந்தோனியார் ஆலய உற்சவகால ஏற்பாடுகள் பூர்த்தி

## கிளி.மாவட்ட அரச அதிபர் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவம் இம் மாதம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ள நிலையில் அதற்குரிய ஏற்பாடுகள் தகுந்த முறையில் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இவ் வருடமும் ஏராளமான பக்தர்கள் குறித்த உற்சவத்திற்கு வருகை தருவார்களென எதிர்பார்த்து விரிவான ஏற்பாடுகளை அரசாங்க அதிபரின் ஏற்பாட்டில், பூநகரி பிரதேச செயலர் சி.சத்தியசீலன் செய்துள்ளார்.

பக்கத்தர்களின் நன்மை கருதி பூநகரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்று பாலைதீவில் திறக்கப்படவுள்ளது.

கடற்போக்குவரத்துக்குரிய பாதுகாப்பு நடைமுறைகளை பக்தர்கள் பின்பற்றுவதோடு, தங்களுக்குரிய போதுமான குடிநீரையும் கொண்டு வரல், பெறுமதியான ஆபரணங்களை அணிவதை தவிர்த்துக் கொள்ளல், உற்சவ காலத்தில் அமைக்கப்படும் வணிக நிலையங்கள் யாவும் பூநகரி பிரதேச சபையின் நடைமுறைகளைப் பின்பற்றுதல், பக்தர்கள், வணிகர்கள் பொது சுகாதார பரிசோதகர்களினால் அறிவுறுத்தப்படும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றல். ஆலயத்தின் புனிதத் தன்மையைப் பேணும் வகையில் பக்தர்களின் நடவடிக்கைகள் அமைய வேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அத்தோடு இந்த நடைமுறைகளை சரிவர பின்பற்றி பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்தின் இவ் வருட உற்சவத்தை சிறப்பாக அனுஷ்டிக்க உதவுமாறு அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-9-254)

# முத்தையன்கட்டு குளத்தில் பிடிக்கும் மீன்களை விற்பனையயடுத்து ஏற்றுமதி செய்யுங்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள முத்தையன்கட்டுக் குளத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்களை உள்ளூர் விற்பனையின் பின்னர் ஏற்றுமதி செய்யுமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முத்தையன்கட்டு குளத்தில் சுமார் 100 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் முத்து விநாயகபுரம், பேராறு, பண்டார வன்னி, கற்சிலைமடு, கனகரத்தினபுரம், ஒட்டுசுட்டான், தட்டையமலை, கணேசபுரம், வித்தியாபுரம், முத்தையன்கட்டுகுளம் ஆகிய 10 கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்களுக்கு நன்னீர் மீன்வகைகள் சென்றடைவதில்லையென அவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

முத்தையன்கட்டு குளத்தில் பிடிக் கப்படுகின்ற மீனினங்களை போருக்கு முந்திய காலப் பகுதியில் கிராமத்தினருக்கு விற்பனை செய்த பின்னரே வேறு மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது.

ஆயினும் தற்போது தென் பகுதியைச் சேர்ந்த வியாபாரிகள் இக்குளத்தில் பிடிக்கப்படுகின்ற மீன்களை உடனே கொள்வனவு செய்வதனால் கிராம மக்கள் மீன்வகைகளைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலைக்குட்பட்டுள்ளனர்.

அத்தோடு முத்தையன்கட்டு குளப்பகுதியிலுள்ள மக்கள் மீனினங்களைப் பெற்றுக் கொள்வதாயின் 35 கிலோமீற்றர் தொலைவிலுள்ள முல்லைத்தீவுப் பகுதிக்கே செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இச்சூழ்நிலையில் தென்பகுதிக்கு இக்கிராமத்திலுள்ள மீனினங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமென்று மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இக்குளத்தில் பிடிக்கப்படுகின்ற நன்னீர் மீனினங்களை கிராம மக்களுக்கு முதலில் விற்பனை செய்து விட்டு மேலதிகமாகவுள்ளவற்றை ஏற்றுமதி செய்ய சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-9-267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரார்த்தனையின் கதவுகள் மூடிக் கிடந்த போதிலும் கண்ணீர்க் கதவுகள் திறந்துதான் இருக்கின்றன.

– ஹீப்ரு பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk



## இது ஆபத்தைக் குறிக்கும் அடையாளம் அல்ல; இதுதான் எம்மை அடையாளம் காட்டும் அடையாளம்

மண்டையோடும் அதன் கீழ் குறுக்கு வடிவிலான இரண்டு எலும்புகளும் கொண்ட குறியீடு அபாயத்தை உணர்த்துவதாகும். குறித்த இடத்தில் ஏற்படக்கூடிய அபாயத்தை காட்டுவதற்கு இந்த மண்டை ஓட்டுச் சின்னமே உலகம் முழுவதும் பயன்படுத்தப்படுகின்றது.

ஆனால், நம் தமிழ் மண்ணில் இந்த மண்டையோடும் எலும்புக் கூடும்தான் எங்கள் இனத்தில் உயிரிழந்தவர் யார் என்பதை அடையாளம் காட்டுவதற்கான ஒரே அடையாளம்.

யாழ்ப்பாணத்தின் செம்மணி முதல் மன்னார் மாதோட்ட நன்னகர் உள்ளிட்ட வடக்கின் அனைத்துப் பகுதியிலும் மனித எலும்புக்கூடுகளே விதைபடுபொருளாகிவிட்டன.

தமிழர் தாயகத்தில் ஒரு சிறு கிடங்கை வெட்டினாலும் அதில் மனித எலும்புக்கூடு வந்து விடும் என்று பயம் கொள்ளும் அளவிற்கு நிலைமை உள்ளது.

வடக்கில் நாளாந்தம் மீட்கப்படும் மனித எலும்புக்கூடுகள் பற்றி தென்பகுதி சிங்கள மக்கள் எந்தளவு தூரம் அறிந்து கொண்டுள்ளார்கள்?

அது குறித்து அவர்களின் மனநிலை என்ன? என்பது பற்றி நமக்குத் தெரியவில்லை.

அதேநேரம் எங்கள் மண்ணில் இருக்கக் கூடிய மனிதப் புதைகுழிகள் பற்றி எங்கள் அரசியல் தலைமைகள் தென்பகுதிகளுக்கு எடுத்துச் சொல்ல ஏதேனும் உபாயம் வகுத்ததாகவும் தெரியவில்லை.

எதுவாயினும் எங்கள் மண்ணில் இருந்து மீட்கப்படும் எலும்புக் கூடுகள் அனைத்தும் எங்கள் உறவுகள்; இந்த மண்ணில் வாழவேண்டிய இளம் பிள்ளைகள்.

என்ன செய்வது? இனவக்கிரத்தின் கோரப் பசி போக்க வந்த தசைதின்னிக் கூட்டங்கள் பசி ஆறிய பின் எறிந்த எச்சங்களே இந்த எலும்புக் கூடுகள்.

இப்போது அந்த எலும்புக் கூடுகள் யாருடையது என்ற தேடலில் மண்டையோட்டை அடையாளம் காட்டுவது மட்டுமே எங்கள் தலைவிதியாகத் தொடர்கின்றது.

நேற்று முன்தினம் கூட, மாங்குளத்துப் பற்றைக் காட்டில் ஓர் இளம் ஆண் ஆசிரியரின் எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களுக்கு முன்னர் காணவில்லை என்ற பதிவுக்கு இப்போது கிடைத்த பதில், மாங்குளத்துப் பற்றைக் காட்டில் அவர் எலும்புக் கூடாக மீட்பு என்பதுதான்.

காணவில்லை என்ற பதிவுகள் தெளிவாக இருந்தாலும் புதைகுழிக்குள் கலந்து போய்க் கிடக்கின்ற எலும்புக் கூடுகளில் எது எவருடையது என்ற தேடலுக்கு சோதனை நடத்துவது யார்?

சுட்டவன்தான் சோதனை நடத்த வேண்டும் என்ற துன்பம் சுட்டுக் கொன்றதைவிட பன்மடங்கு பாரமானது.

ஓ! உலகமே, தமிழினத்துக்கு மட்டும் ஏன் இந்தத் தலைவிதி? வடக்கில் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் குவேனியை கட்டிய விஜயனோடு கூட வந்த எழுநூறு தோழர்களுடையது என்று உங்களுக்குக் கூறினால் நீங்கள் அதற்கும் தலையாட்டும் அற்புத மனிதர்கள் அல்லவா?

இருந்தும் ஒரு நல்ல காலம். மன்னார் மாதோட்டத்தில் மீட்கப்பட்ட மண்டை ஓடுகள் திருக்கேதீச்சரத்தான் அணிந்த மாலையில் இருந்த மண்டையோட்டு மலர்கள் என்று சொல்லாமல் விட்டார்களே அந்தளவில் ஆறுதல். மற்றப்படி மண்டையோடு எங்கள் இனத்தை அடையாளம் காட்டும் அடையாளமே.

## விளையாட்டு விழா

கரவெட்டி பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய தினங்களில் நெல்லியடி மத்திய கல்லூரி மைதானத்தில் பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.00 மணிக்கு நடைபெறவுள்ள இறுதி நிகழ்வுக்கு மன்னார் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் கு.ஸ்ரீபாஸ்கரன் பிரதம விருந்தினராகவும், வட மாகாண விளையாட்டு திணைக்களப் பணிப்பாளர் ராஜாரணசிங்க சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

எனவே பங்குபற்றும் அனைத்து விளையாட்டுக்கழக உறுப்பினர்களையும் விளையாட்டு ஆர்வலர்களையும் அன்றைய தினம் குறித்த நேரத்திற்கு பிந்தாமல் வருகைதந்து பிரதேச விளையாட்டு விழா சிறப்புற அமைய ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (எ)

# மின்சாரம் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

புதிய உயர் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக 15.03.2014 சனிக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணி வரை கம்பஸ் லேன், வைமன் வீதி, அரசடி வீதி, கோவில் வீதி, நல்லூர், இராசாவின்தோட்டம், றக்கா வீதி, ஆஸ்பத்திரி வீதி, பழைய பூங்கா, கச்சேரியடி, சுண்டுக்குளி, குருசோ வீதி, பாசையூர், ஈச்சமோட்டை, கொழும்புத்துறை, நெடுங்குளம், ஆனந்தன் வடலி வீதி, எழிலூர், மகேந்திரபுரம், உதயபுரம், மணியந்தோட்டம், புங்கங்குளம் வீதி, பருத்தித்துறை வீதி, நாவலர் வீதி, கைலாசபிள்ளையார் கோவில் சந்தி வரை, கொக்குவில் தொழில்நுட்ப கல்லூரி, நொதேன் கொம்பனி, இராமநாதன் வீதி, பிறவுண் வீதி, அரசடி வீதி, தட்டார்தெரு , நாச்சிமார் கோவில் வரை, ஐயனார் கோவில் வீதி, கே.கே.எஸ் வீதியில் நாச்சிமார் கோவில் - சிவன் கோவில், கஸ்தூரியார் வீதி, நாவலர் வீதி, மானிப்பாய் வீதியில் ஓட்டுமடம் சந்தி, பிள்ளையார் ஹொட்டல், சிவன் வடக்கு வீதி, சிவன்பண்ணை வீதி, சிவப்பிரகாசம் வீதி, வைத்தீஸ்வரா சந்தி, சீனிவாசகம் வீதி, காதி அபூபக்கர் வீதி, B.A தம்பி வீதி, ஓடை லேன், மணிக்கூட்டு வீதி , கன்னா திட்டி சந்தி, கன்னாதிட்டி வீதி, சட்ட நாதர் வீதி, பருத்தித்துறை வீதி, நல்லூர் கோவில், கச்சேரிநல்லூர் வீதி, செம்மணி வீதி, சங்கிலியன் வீதி, கனகரத்தினம் வீதி, நாவலர் வீதி, ஆனந்தன் வடலி வீதி, புங்கன்குளம் வீதி, நாவலடி, பூம்புகார், அரியாலை கிழக்கு, நாயன்மார்கட்டு, நல்லூர் குறுக்கு வீதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (எ)

# பருவமழை இன்மையால் கிணறுகளில் நீர் வற்றும் நிலை

## பூநகரி பிரதேசத்தில் கால்நடைகள் நீருக்கு தவிப்பு

(பூநகரி)

கடந்த வருடம் பருவ மழை பெய்யாத காரணத்தினால் பூநகரிப் பிரதேசத்தில் நீரில்லாமையினால் கால்நடைகள் நீருக்காக அலைந்து திரியும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது இப் பிரதேசத்தில் கிணறுகளிலும் குளங்களிலும் நீர் வற்றிப் போய் கொண்டிருப்பதனால் மக்கள் குடிநீருக்கும் வேறு தேவைகளுக்கும் நீருக்கு அலைய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

எந்தவொரு ஆண்டிலும் இல்லாத வகையில் தற்போது நீருக்குத் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

எனவே, பிரதேசத்தின் கால்நடைகளுக்கும் மக்களின் தேவைகளுக்கும் நீரினை பெற்றுக் கொடுக்க சம்பந்தப்பட்டோர் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (2-9-84)

# கற்கை நெறிகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிப்பு

வடமாகாண மும்மொழித் திட்டத்தினூடாக ஆளுநர் செயலகத்தினால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப் படவுள்ள சிங்கள மற்றும் ஆங்கில கற்கை நெறிகளுக்கான விண்ணப்பத் திகதி நீடிக்கப்பட்டுள்ளது.

இக் கற்கை நெறியில் பயிலவுள்ளவர்களுக்கும் வளவாளர்களுக்குமான விண்ணப்ப முடிவுத்திகதி நாளை சனிக்கிழமை என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆயினும், தற்போது எதிர்வரும் 18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு www.np.gov.lk என்ற இணையத்தை பார்வை யிடுவதன் மூலம் தகவல்களைப் பெற முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (2-9)

# சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் ஏப்ரல் மாதத்தில்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தால் ஆண்டுதோறும் நடத்தப்படும் சைவப்புலவர் இளஞ்சைவப்புலவர் தேர்வுகள் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 18,19,20 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாக இச்சங்கத் தேர்வுச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இத்தேர்வுகள் மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, யாழ்ப்பாணம், லண்டன் ஆகிய இடங்களில் நடைபெறும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

சாத்திரம், இலக்கணம், இலக்கியம், வரலாறு, உரைநடை ஆகிய ஐந்து பாடங்களில் ஒவ்வொன்றும் 3 மணித்தியாலங்கள் கொண்டதாக தேர்வு நடைபெறும் என அவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பித்தவர்களுக்கு தனித்தனி அறிவித்தல்கள் அனுப்பப்பட்டுள்ளன. இதுவரை கிடைக்காதோர் தேர்வுச் செயலாளர் சைவப்புலவர் சு.செல்லத்துரையுடன் 0777497100 எனும் இலக்கத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு விபரங்களை அறியலாமென அவர் தெரிவித்துள்ளார். (2)

# நினைவாலய திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

கந்தையா கனகம்மா நினைவாலய திறப்பு விழா நாளை சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு சாவகச்சேரி பிரதேச சபை உப பணிமனை வளாகம் நாவற்குழி (துச்சன்தோப்பு) இந் நினைவு நிதியக் காப்பாளர் க.மயில்வாகனம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராசா, சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண உள்ளூர் அமைச்சின் ஓய்வுநிலை நிர்வாக அலுவலர் வே.சிவராஜலிங்கம், சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர் தர்சினி தியாகராசா, சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் அ.டயஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக நாவற்குழி பிரதேச சபை உப் பணிமனை நா.தங்கவேல், ஓய்வுநிலை செ.தங்கராசா, பிரதேச சபை பொறுப்பதிகாரி லயன் இ.குழந்தைவடிவேல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம் பெறும். (2)

# அருளுரையும் விளக்கமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணிமண்டபத்தில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 7 மணியிலிருந்து 7.30 மணி வரை கீதை காட்டும் பாதை என்ற கருப்பொருளிலான அருளுரையும் 15 நிமிடங்களிற்கு அது தொடர்பான சந்தேகங்ளுக்கு விளக்கமும் யாழ்ப்பாணம் சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா சுவாமியினால் நடத்தப்படவுள்ளது. (2)

# நூல் வெளியீட்டு விழா

புகழ்பூத்த நீர்வேலி நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நீர்வேலி றோ.க.த.க. பாடசாலை மண்டபத்தில் தீவக பிரதிக் கல்விப் பணிப்பாளர் இ. குணநாதன் தலைமையில் நடைபெறும்.

இந் நூலின் வெளியீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக வணிகபீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி தி.வேல்நம்பி ஆற்ற, மதிப்புரையினை கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன் வழங்கவுள்ளார்.

முதற்பிரதியினை நீர்வேலி இராச வீதி பவானி களஞ்சிய நிர்வாகி பெற்றுக் கொள்ளவுள்ளார். (2)




## விபசாரத்தின் பக்கம் நெருங்காதீர்கள்

விபசாரத்தின் அருகில் கூட நெருங்காதீர்கள்! திண்ணமாக அது மானக்கேடான செயலாகவும் மிகத் தீய வழியாகவும் இருக்கிறது.

(திருக்குர் ஆன் 17:32)

(திருமணம் முடிப்பதற்கு முன்பு) விபசாரம் செய்யும் ஆண்,பெண் ஒவ்வொருவருக்கும் நூறு கசையடிகள் கொடுக்கப்படவேண்டும்.

(திருக்குர் ஆன் 24:2)

திருமணம் முடிந்த பிறகும் விபசாரம் செய்தால் அவர்களுக்கு மரண தண்டனை அளிப்பதே தீர்வு என்கிறது இஸ்லாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த உயர்தர வகுப்புகளில் தொழில்நுட்பப் பாடத்துறை அறிமுகம், நடைமுறைகள், எதிர்பார்ப்புகள், சவால்கள்

### அறிமுகம்

கல்வி அமைச்சின் 2012 - 2016 வரையான நடுத்தர கால அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் பிரதான கல்வி அபிவிருத்தி செயற்பாடுகளில் முக்கியமானதாக விளங்குபவைகளில் ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகள் மற்றும் 5 ஆயிரம் ஆரம்ப பாடசாலைகளை மீள் கட்டமைக்கும் தேசிய வேலைத்திட்டமும் ஒன்றாகும். இந்த நோக்கங்களின் அடிப்பபடையில் இவ் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரதேச ரீதியில் கல்விக்கான சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் காணப்படும் முரண்பாடுகள், வளப்பகிர்வின் சமமின்மை, குறைந்த அடைவு மட்டம், மாணவர் சனத் தொகையில் நகர மயமாக்கல் மற்றும் மாணவர்களின் சுகாதாரம் உட்பட போஷாக்குப் பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு குறைபாடுகளுக்காகப் பிரத்தியேகமான தீர்வுகளை அடைவது என்ற அடிப்படையில் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கல்விக்கான வேலைத்திட்டங்கள் பாரிய அளவில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மஹிந்த சிந்தனையின் எதிர்கால நோக்கு என்ற செயற்றிட்டத்தின் மூலம் உயர்கல்விக்கான சந்தர்ப்பங்கள் விரிவாக்கப்படுகின்றன. பாடசாலைகளில் வகுப்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுவதோடு பரீட்சை முறைகளிலும் மாற்றங்கள் என்பன நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இன்னொரு முக்கியமான விடயம் தொழில்நுட்ப செயற்பாடுகளின் பயன்பாடுகள் தொடர்பாகப் பல புதிய துறைகளை உருவாக்குவதற்காகப் பாடசாலை மட்டத்தில் இருந்தே இதற்கான முயற்சிகள் உருவாக்கப்பட வேண்டும் என்பது மஹிந்த ராஜபக்ஷவின அபிவிருத்தி நோக்கிய சிந்தனையாகும். கல்வியையும் அறிவையும் நாட்டுக்குப் பொருத்தமானவாறு மீள்கட்டமைப்பதற்கு இத்தகைய தொழில்நுட்ப பாடத்துறைகளின் அவசியம் ஜனாதிபதியினால் உணரப்பட்டது.

இதன் அடிப்படையில் 2012 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்ட இலங்கையின் கல்வி வேலைத்திட்டங்களில் இன்று அமுல்படுத்தப்பட்ட தொழில்நுட்ப பாடத்துறையானது நாட்டின் சமூகத் தேவைகளுக்கேற்ப தொழிலநுட்பக் கல்வி பாடசாலை மட்டத்திலேயே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற உயர் குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றது. புதிய சிந்தனைகளின படி மாறிவரும் தேசிய உள்நாட்டு, வெளிநாட்டு தொழிற் சந்தைகளில் மனித வளத் தேவைகளுக்கு அமைவாகும் விதத்தில் சகல தொழில்களினதும் மதிப்பை உறுதிப்படுத்தும் வகையில் அந்தந்த தொழிலுக்குரிய சர்வதேச மட்டத்திலான அறிவையும் பயிற்சியையும் பெற்றுக்கொடுப்பது மூன்றாம் நிலைக் கல்வியின் நோக்கமாதலால் உயர் வகுப்பில் தொழில்நுட்பப் பாடங்கள் புகுத்தப்பட வேண்டும் என்பது மஹிந்த சிந்தனையின் நோக்கமாகும்.

### தொழில்நுட்ப பாடங்கள் புகுத்தப் பட்டதன் பின்னணி

நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி காணப்பட வேண்டும். அதனால் நவீன பொருளாதாரத்தில் உயர்தொழில்நுட்ப உபகரணங்களதும் திட்டங்களதும் உச்சக்கட்டப் பயன்பாடு மிகவும் அவசியமாகும். இதனால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுத் தொழிற்சந்தையின் தேவைக்கும் கேள்விக்கும் ஏற்றவாறு சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய பாடநெறிகள் மற்றும் சான்றிதழ்கள் அத்துடன் மூன்றாம் நிலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை அடையாளம் கண்டு அதற்கேற்ப தொழில்நுட்பப் பாடங்கள் உயர்வகுப்புக்களில் புகுத்தப்படும் தேவையுள்ளது.

இலங்கையை பொறுத்தவரை தற்போது ஒரு இலட்சத்து 80 ஆயிரம் மாணவர்கள் க.பொ.த. சாதாரண தர மற்றும் க.பொ.த. உயர்தரப் பரீட்சைகளை முடித்து பாடசாலையிலிருந்து வெளியேறுகின்றனர். ஏறத்தாழ வருடா வருடம் 17 சதவீதமான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறுகின்றனா. இங்கு இவர்களில் பெரும்பாலானோர் தேவையான தொழிற்றிறன்களை வளர்த்துக் கொள்ளாது தொழிற் படைகளாகத் தோற்றம் பெறுகின்றார்கள். இத்தகைய தொழில்நுட்ப பாடத்தினூடகப் பொருத்தமான பயிற்சி, ஏனைய திறன்கள் போன்வற்றைப் பெறும் வாய்ப்புக்கள் வழங்கப்படும் நோக்கில் இப்பாடத்துறைகள் இன்று அறிமுகப்படுத்தப்படுகின்றன.

அடுத்து இன்று பொருளாதார தொழில்நுட்ப அபிவிருத்தியானது, கட்டமைப்பு மாறி வருகின்றமையால்மேல்வரும்காலங்களில்திறமை வாய்ந்த தொழில்நுட்பவியலாளர்களின் தேவையை நாடு சந்திக்க நேரிடும். நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியைத் தருவதற்கும் ஊக்குவிப்பதற்கும் தொழில்நுட்ப நிறுவனங்களின் அவசியம் இன்று வெகுவாக உணரப்படும் நிலையில் இப்பாடநெறிகள் நாட்டின் கல்வியில் புகுத்தப்படும் தேவையுண்டு. தொழிற் கல்வி, தொழில்நுட்ப பயிற்சி போன்றவற்றுக்கான வாய்ப்புக்களை வழங்குவதற்கான அரசின் திட்டமானது புதிய தொழில்நுட்பத்திற்கும் தேவைகளுக்கும் ஏற்ற வகையில் உருவாகும் தொழிற்படைக்குத் தேவையான புதிய நுட்பங்களை வழங்குவதாகும்.

மனிதர்கள் மத்தியில் இன்று நாளாந்தம் பல்வேறு தேவைகள் பல்கிப் பெருகி வருகின்றன. ஒவ்வொரு துறைகளின் தேவைகள் அதிகமாகும். இத்தகைய அதிகரித்து வரும் தேவைகளுக்கு முகம்கொடுக்க வேண்டுமானால் புதிய தொழில்நுட்பப் பாடங்கள் அறிமுகப்படுத்தப்படும் அவசர நிலை உருவாகும். அத்துடன் அப்பாடங்களின் அறிமுகத்தை விட அவற்றின தரம் தொடர்ந்து அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அத்துடன் ஆரம்பக் கல்வியில் தொழில்நுட்பம் பற்றிய கற்கையை ஒன்றிணைக்கும் திட்டமும் நாட்டின் அபிவிருத்திக்கு மேலும் உரமூட்டுவதாக அமைந்துள்ளன. இதன் ஆரம்பகட்டமாக ஒவ்வொரு வகுப்பறைகளிலும் கணனி மிக முக்கியமாக இருக்க வேண்டும் என்பது எதிர்பார்க்கப்பட்டது. தொடர்ந்து ஏனைய தொழில்நுட்ப சாதனங்களைப் பாவிக்கும் திறனகளை வளர்த்தல் என்பது குறிக்கோளாகப் பெற்றுக் கொள்ள அனைத்து மாணவர்களின் அடிப்படைப் பாடத்திட்டங்களிலும் படிப்படியாகத் தொழில்நுட்பக் கல்வி புகுத்தப்பட்டது.

### தொழில்நுட்பவியல் பாடத்துறையின் அறிமுகம்

அரசினால் வெளியிடப்பட்ட 2009/16 எனும் சுற்றுநிருபம் தொழில்நுட்பப்பாடம் தொடர்பான விளக்கத்தை உள்ளடக்கியுள்ளது. குறிக்கப்பட்ட சில பாடத்துறைகளுக்கு மேலாகத் தொழில்நுட்பவியல் பாடம் முதற்கட்டமாக மஹிந்தோதய தொழில்நுட்ப ஆய்வு கூடங்களுடன் கூடிய தெரிவு செய்யப்பட்ட 200 பாடசாலைகளில் 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 12 ஆம் தரத்துக்கு அனுமதி பெறும் மாணவர்களுக்காக நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பாடத்துறையைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்காகச் சில பாடச் சேர்மானங்கள் முன்வைக்கப்பட்டன. இங்கு குறிப்பிடப்படும் பாடங்கள் கட்டாயமாகத் தெரிவு செய்யப்பட வேண்டும். பொறியியல், தொழில்நுட்பவியல் அல்லது உயிர்த்தொகுதி தொழில்நுட்பவியல், தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology) என்பனவைகளாகும்.

மூன்றாவது பாடமாக கீழ் குறிப்பிடப்படும் பாடங்களிலிருந்து ஏதாவது ஒரு பாடத்தைத் தெரிவு செய்ய வேண்டும்.

- பொருளியல்
- புவியியல்
- மனைப்பொருளியல் ஆங்கிலம் தொடர்பாடலும் ஊடகக் கற்கையும்
- தகவல் தொடர்பாடல் தொழிற்கல்வி
- சித்திரம்
- வணிகக்கல்வி
- விவசாய விஞ்ஞானம்
- கணக்கீடு

இத்தகைய தொழில்நுட்பத் துறையைப் பாடசாலையில் அறிமுகப்படுத்தும் திட்டங்களை முன்னெடுத்தல் திட்டங்களின் அடிப்படை ஆரம்பக் கல்வியில் தகவல் மற்றும் தொடர்பு சாதன தொழில்நுட்பப் பயன்பாட்டின் ஊடான கற்பித்தல் முறைமை ஆரம்பித்தலாகும். ஆயிரம் இடை நிலைப் பாடசாலைகளில் இக் கற்கை நெறிகளை ஆரம்பித்ததன் நோக்கமும் தொழில்நுட்பக் கல்வியின் பரவலாக்கம் என்ற உயரிய வினைத்திறனை விருத்தி செய்வதற்கான சிந்தனையில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டு அது நடைமுறைக்கும் பொருத்தமானதாக அமைந்தது. இதன் அடிப்படையில் 2012இல் வடமேல் மற்றும் தென்மாகாண தொழில்நுட்ப ஆசிரியர்களுக்கான தொழில்கள், அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டதோடு சப்ரகமுவ மற்றும் மேல் மாகாண சபைக்கான ஒழுங்கு செய்யப்பட்டது. இவ் வகையில் வளர்ச்சி பெற்று இன்று உயர்கல்வியில் பல்கலைக் கழகப் பட்டப்படிப்பு வரை தொழில்நுட்பக் கல்வியின் வளர்ச்சியைக் காண முடிந்தது. இன்று எல்லா மாகாணங்களிலும் பாடசாலைகளில் இது அமுல்படுத்தப்பட்டுள்ளது.

### தொழில்நுட்பப் பாடத்துறையின் அமுலாக்கத்தின் நோக்கம்

மஹிந்த சிந்தனையின் அடிப்படையிலேயே கப்பலதுறை, விமானத்துறை, வர்த்தகம், சக்தி வலு மற்றும் அறிவியல் துறையில் பிராந்தியத்தின் கேந்திர நிலையமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையை ஆசியாவின் ஆச்சரியமாக ஆக்குதல் என்பது முதன்மை நோக்கம். இந்நோக்கத்திற்கான மனிதவலுவைக் கட்டியெழுப்புதல் முக்கிய நோக்கமாகும்.

நாட்டின் பாரம்பரியக் கல்வி முறைகளுக்குள் கட்டுப்பட்ட நிலையை மாற்றி எதிர் காலத்தில் நாட்டின் முன்னேற்றத்துக்கான தொழில்நுட்பவியல் திறமைகளையும் அனுபவத்தைக் கொண்ட மனித வளத்தையும் நோக்கமாகக் கொள்ள வேண்டும் என்பது எதிர்பார்ப்பாகும். கோட்பாட்டு அடிப்படையிலான கல்வி நடைமுறைப் பயனுள்ளதாக மாற்றப்பட வேண்டும்.

ஆயிரம் இடைநிலைப் பாடசாலைகளின் க.பொ.த. உயர்தர விஞ்ஞான, கணித, தொழில்நுட்ப பாடத்துறைக்கான பெறுபேறும் 21 வீதத்திலிருந்து 40 வீதம் வரை அதிகரிப்பதற்கும் வர்த்தக பாடத்துறைக்கான 27 சதவீதத்தை 35 வீதமாக அதிகரிப்பதற்கும் கலைப்பாடத்துறையின் 51 வீதத்தை 25 வீதமாகக் குறைத்து ஏனைய பாடத்துறைகளில் பெறுவதற்கும் தகவல் தொழில்நுட்ப எழுத்தறிவு 35 வீதத்திலிருந்து 75 வீதமாக அதிகரிப்பது எதிர்காலக் கல்வியின் இலக்காகும். இதற்காக உயர்தொழில்நுட்ப நிறுவனங்களின் ஒத்துழைப்பும் தேவைப்படும்.

இன்றைய நிலையில் கலைப்பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகமாகும். ஏறக்குறைய 35 வீத மாணவர்கள் கலைப்பட்டதாரிகள். இவர்களுக்குப் போதியளவு தொழில் வாய்ப்புக்கள் இருப்பதில்லை. இதனால் இத்தகைய தொழில்நுட்பத்துறையைத் தெரிவு செய்து கொள்ளும் போது தொழில் வாய்ப்புக்கள் அதிகமாகும் சந்தர்ப்பங்கள் உண்டு.

### தொழில்நுட்பப் பாடத்துறை அமுலாக்கத்தின் தேவை

இருபத்தொராம் நூற்றாண்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் கல்வியை மாற்றியமைக்கும் செயல்களில் தொழில் நுட்பப் பாடத்துறையின் அவசியம் உணரப்படுகின்றது. இலங்கை மாறி வரும் புதிய ஆண்டுகளின் சவால்களை எதிர்கொள்ள அதன் கல்வி முறையை மீள் திசைப்படுத்தல் அவசியமாகும். மரபு வழிக் கல்வியையும் பயனற்ற கல்வி முறைகளையும் தொழில்நுட்பத்தோடு கூடிய கல்வி முறையாக மாற்றும் யோசனை இன்று அதிகம் உண்டு. இதனமூலம் மக்களிடையே வேலை வாய்ப்புக்கள் அதிகமாகும்.



கலாநிதி
**திருமதி ஜெ.இராசநாயகம்**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற்றுறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

வருடா வருடம் பல்கலைக்கழகக் கலவியை முடித்து வெளியேறும் பட்டதாரிகள் தொடா கல்வி வாய்ப்புக்கள் இன்றி பாடசாலைகளைக் கல்வி முறைமையில் இருந்து விலக்கப்படுகின்றார்கள். இத்தகையோருக்கு வேலை வாய்ப்புக்களை வழங்குதல் தொழில்நுட்பப் பாடத்துறையின் அவசியம் உணரப்பட்டது. இவ் வகையில் இப் பாடத்துறையின் தேவைகள் என்று குறிப்பாகத் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது,

- அறிவுசார் பொருளாதாரத்துக்காக மானிட மூலதனத்தை அடிப்படையாகக் கொண்டதாகப் பாடசாலை முறைமையை மாற்றியமைத்தல்.
- ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்விககான சம நியாய கல்வி பிரவேசம் மற்றும் ஒத்துழைப்புக்கான சந்தர்ப்பத்தை மேம்படுத்தல்.
- பாதிப்பு மிக்க பிரதேசங்களில் வாழும மாணவர்களை மீளப் பாடசாலைக்கு அனுப்பும் வேலைத்திட்டங்கள் கைநழுவிய கற்கைச் சந்தர்ப்பங்களை மீளப் பெறுவதற்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.
- விஞ்ஞானக் கல்விக்கான சம நியாய இடைநிலைக் கல்வி வசதிகளை ஏற்படுத்தல்.
- எதிர்கால அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்துக்கு மற்றும் சமூகத்துக்குத் தேவையான மானிட மூலதனத்தின் அடிப்படையாக இலங்கைப் பாடசாலை முறைமையை தயார்ப்படுத்தல்.
- அதிகமான மாணவர்கள் கலைத் துறையில் கற்பதன் மூலம் நாட்டின் தேவைக்கும் உற்பத்திக்கும் இடையில் ஒரு இடைவெளி காணப்படுகின்றது. கலைத்துறைப் பட்டதாரிகள் அதிகம் வெளியேறுவதனால் நாட்டின் தொழில்நுட்பம் சார்ந்த அபிவிருத்திக்குப் பாரிய தடையுள்ளது. இதனால் தொழில்நுட்பப் பாடத்துறையின் மூலம் நாட்டின் தேவைகள் ஓரளவு பூர்த்தியாக்கப்படலாம்.
- இளைஞர்களின் வேலையின்மையைக் குறைத்து நாட்டின் அபிவிருத்தியை மேம்படுத்தல்.
- தொழிற் சந்தையில் அதிகரித்து வரும் கேள்விக்குப் பொருத்தமான தொழிற்றிறனுள்ள இளைஞர்கள் உருவாக்கும் தேவையுள்ளது.

இவ் வகையில் இன்றைய தொழில்நுட்ப உலகில் இப். பாடத்துறையின் அவசியம் உணரப்படுவதால் இதனை அமுலாக்கும் பாரிய தேவை ஒன்றுள்ளது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபது-20 உலக கோப்பையை ஆஸி.வெல்லும் : வோட்ஷன்



உலக கோப்பை இருபது-20 கிரிக கெட் போட்டி எதிர்வரும் 16 திகதி பங்களாதேஷில் தொடங்குகிறது.

இதில் பங்கேற்கும் 16 அணி களில் ஒன்றான அவுஸ்திரேலியா முதல்முறையாக உலக கோப்பையை வெல்லும் முனைப்புடன் தயாராகி வருகிறது.

அந்த அணியின் சகலதுறை விளையாட்டு வீரர் 32 வயதான ஷேன வோட்ஷன் நேற்று நிருபர்களிடம் கூறுகையில்,

நான் இதுவரை இடம் பெற்ற அவுஸ்திரேலிய அணிகளிலேயே இது தான் ரொம்ப சரியான கலவை யில் அமைந்திருப்பதாக கருதுகி றேன். எல்லா வகையிலும் தொடர்ச்சி யாக அதிரடி காட்டக்கூடிய துடுபபாட்ட வீரர்கள் எங்களிடம் இருக்கிறார்கள்.

10-வது வரிசை வீரராலும் கூட அதிரடியாக விளையாட முடியும். இதேபோல் உலகத் தரமான தொடக்க வேகப்பந்து வீச்சாளர்கள், இறுதி கட்டத்தில் கட்டுக்கோப்பாக பந்து வச்க்கூடிய பந்துவீச்சாளர்கள், தரம் வாய்நத சுழற்பந்து வீச்சாளர்கள் என்று பந்து வீச்சு துறையும் வலுவாக இருக்கிறது.

உலகின் எந்த விதமான சூழலி லும், எந்த அணிக்கு எதிராகவும் அபார மாக விளையாடும் சர்வவல்லமை உடைய அணியாக திகழ்கிறோம்.

இருபது-20 ஓவர் கிரிக்கெட்டின் முடிவை கணிக்க முடியாது. ஆனால் தனி வீரராக வெற்றியை தேடித்தரக் கூடிய (மேட்ச் வின்னர்ஸ்) வீரர்கள் அணியில் நிறைய பேர் இருக்கும் போது, அதன் பிறகு அந்த அணிக்கே வெற்றி வாய்ப்பு அதிகமாக உண்டு.

அந்த மாதிரியான அணியைத் தான் நாங்கள் கொண்டுள்ளோம். இதனால் கோப்பையை வெல்ல எங்களுக்கு பிரகாசமான வாய்ப் புள்ளது என்றார். (க)

# வட மாகாண வீரர்களுக்கு இலவச குத்துச்சண்டை பயிற்சி

இலங்கை குத்துதுச் சண்டை சம்மேளனம் வடக்கு மாகாண வீரர்களுக்கான இலவச குத்துச் சண்டை பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளது.

15 வயதிற்கு மேற்பட்ட ஆண் களுக்கே இப் பயிற்சி வழங்கப்பட வுள்ளது.

இவ் வகுப்புக்கள் யாவும் நாளை சனிக்கிழமை, நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி மாஸ் நிலையத்தில் இடம்பெற வுள்ளது.

முற்றிலும் இலவசமாக இடம் பெறும் இப் பயிற்சிகளில் பங்குபற் றும் வீரர்களுக்கு சீருடை, உணவு தங்குமிடம் யாவும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து செல் லும் வீரர்களுக்கு இலவச போக்கு வரத்து ஏற்பாடுகளும் செய்யப்பட் டுள்ளது.

ஆர்வமுள்ள வீரர்கள் அவ் அவ் பிரதேச இளைஞர் சேவை உத்தி யோகத்தர்களிடம் தொடர்பு கொள்ளு மாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 077 433 5928 என்னும் இலக்கத்து டன் தொடர்பு கொள்ளுமாறு அறி விக்கப்பட்டுள்ளது. (க-23)

# மீட்கப்பட்டுள்ள எலும்புக்கூடு அடையாளம் காணப்பட்டது

(மாங்குளம்)

ஏ-9 வீதியிலுள்ள மாங்குளத் தில் நேற்று முன்தினம் புதன் கிழமை காலை 10 மணியளவில் பற்றைக்காட்டினுள் கண்டுபிடிக்கப் பட்ட எலும்புக் கூட்டுக்குரிய நபரை உறவினர்கள் இனங்காட்டியுள்ள னர்.

எலும்புக் கூட்டுடன் கண்டெடுக் கப்பட்ட தேசிய அடையாள அட்டை மற்றும் பொருட்களின் உதவியு டனே குறித்த நபர் இனங்காணப் பட்டுள்ளார்.

இந் நிலையில் எலும்புக் கூட்டு டன் பயணத்திற்கு கொண்டு செல் லப்படும் பையொன்றும் எடுக்கப்பட் டது. அப் பையினுள்ளிருந்து தேசிய அடையாள அட்டையின்படி இறந் தவர் இளவாலை லேன், கோப்பாய் மத்தியினைச் சேர்ந்த கார்த்திகேசு நிருபன் (வயது 38) என அடையாளம் காணப்பட்டார்.

இதையடுத்து, குறித்த நபருடைய சகோதரியான திருமதி சிவகரன் நிஷந்திலா நேற்றையதினம் மாங் குளம் பொலிஸாருடன் தொடர்பை மேற்கொண்டு கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக் கப்பட்டிருந்த இறந்தவருடைய தட யப் பொருட்களினை பார்வையிட்ட பின்னர்,

குறித்த சகோதரியும் கணவரு மாக எலும்புக்கூட்டுடன் தொடர் புடையவர் யாரென அடையாளங் காட்டியுள்ளனர்.

அவ்வேளை குறித்த சகோதரி கருத்து வெளியிடுகையில், இங்கு எடுக்கப்பட்டுள்ள தடயப் பொருட் களுடன் தொடர்புடையவர் தனது சகோதரன் எனவும் அவருடைய ஒரு கையும் காலும் போலியோ நோயினால் பாதிக்கப்பட்டவர் என் றும் குறிப்பிட்டார்.

அத்தோடு வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் 5 வருடங்களுக்கு மேலாக ஆசிரிய ராக கடமையாற்றியுள்ளார்.

இந்நிலையில் கடந்த 2013 ஆம ஆண்டு செப்டெம்பர் மாதம் (9 மாதம்) 18 ஆம் திகதி வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்திலுள்ள தனது வீட் டிற்கு வரும் வழியில் காணாமல் போயுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபர் காணாமல் போயுள்ளதாக யாழ். மாவட்ட மனித உரிமை காரியா லயத்திலும் மற்றும் பொலிஸ் நிலை யங்களிலும் உறவினர்களால் முறைப் பாடு செய்யப்பட்டுள்ளது.

பிரஸ்தாப நபர் தற்போது மர்மமான முறையில் உயிரிழந்து எலும்புக் கூடாக மீட்கப்பட்டுள்ளமை மக்கள் மத்தி யில் அச்ச நிலையைத் தோற்றுவித் துள்ளதுடன் இதுவரை மரணம் நிகழ்ந்தமைக்கான காரணமும் கண்டு பிடிக்கப்படவில்லை. (ஏ-12)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தி ஆஸி. அணி திரில் வெற்றி




தென்னாபிரிக்காவுக்கு எதிரான இரண்டாவது இருபது-20 போட்டி யில், அவுஸ்திரேலிய அணி 5 விக் கெட் வித்தியாசத்தில் வெற்றிபெற் றது.

தெனனாபிரிக்கா சென்றுள்ள அவுஸ்திரேலியா அணி 3 இருபது-20 போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

முதல் போட்டி மழையால் ரத் தான நிலையில் இரண்டாவது போட்டி டர்பனில் நடந்தது.

மழை அவ்வப்போது பெய்து கொண்டிருந்ததால், போட்டி 7 ஓவராக குறைக்கப்பட்டது.

நாணயச் சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலிய அணியின் அணித் தலைவர் பெய்லி களத்தடுப்பை தெரிவு செய்தார்.



இதன்பின் களமிறங்கிய தென் னாபிரிக்க அணி ஒரு விக்கெட் இழப் புக்கு 80 ஓட்டங்கள் எடுத்தது.

இதனை தொடர்ந்து களமிறங் கிய அவுஸ்திரேலிய அணி 5 விக் கெட் இழப்புக்கு 82 ஓட்டங்கள் எடுத்து வெற்றிபெற்றது. (க)

# சுவிஸ் கிராண்ட் பட்மிண்டன் சாய்னா நேவால் வெற்றி

சுவிஸ்கிராண்ட்பிரிக்ஸ்பேட்மிண டன் தொடரில், இந்தியாவின் நட்சததிர வீராங்கனை சாய்னா நேவால் வெற்றி யுடன் போட்டியை ஆரம்பித்துள்ளார்.

மகளிர் ஒற்றையர் முதல் சுற்றில் சாய்னா நேவால், தகுதிச்சுற்று மூலம் பிரதான சுற்றுக்கு வந்த ஜப் பான் வீராங்கனை சீசுட்டோஹாஷியை எதிர்கொண்டார். ஆட்டத்தின் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய சாய்னா, 21:12, 21:12 என்ற நேர்செட்களில் அபாரமாக வெற்றிபெற்றார். 34 நிமிடங்களில் இந்த ஆட்டம் முடி வுக்கு வந்தது.

உலகின் 6-ம் தரநிலை வீராங் கனையான சாய்னா, 2-ம் சுற்றில் பிரான்ஸ் வீராங்கனை சஷினா வங்னஸ் வாரனை எதிர்கொள்கிறார்.

இதேபோல், இந்தியாவின் முன்னணி வீரர்களான பருபள்ளி காஷ்யப், ஆனந்த் பவார் ஆகியோர் 3-ம் சுற்றுக்கு முன்னேறினர். (க)



# ஓபன் டென்னிஸ் ஜோகோவிச் வெற்றி

அமெரிக்காவில் இண்டியன் வெல்ஸ் நகரில் பி.என்.பி ஓபன் டென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது.

நேற்று நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் 4-ம் சுற்று போட்டி யில், உலகின் 2-ம் நிலை வீரரான செர்பியாவின் ஜோகோவிச் மற்றும் குரோஷியாவின் மரின் சிலிச் மோதினர்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இப் போட்டியில் முதல் செட்டை இழந்த ஜோகோவிச், பின்னர் அடுத்தடுத்து இரண்டு செட்களையும் கைப்பற்றி னார். இதனால், 1:6, 6:2, 6:3, எனற செட் கணக்கில் வெற்றி பெற்ற அவர் காலிறுதிக்கு முன்னேறினார்.

வெற்றிக்குப்பின் ஜோகோவிச் கூறுகையில், முதல் 45 நிமிடங் களில் சிலிச்சின் ஆட்டம் மிகவும் அருமையானதாக இருந்தது.

இவர் மிகவும் சிறப்பாக விளை யாடினார் என்று தெரிவித்தார்.

இதேபோல் 17 முறை கிராண்ட்ஸ் லாம் பட்டம் வென்ற ரோஜர் பெடரர், டாமி ஹாசை 6:4, 6:4 என்ற நேர்செட்களில் வென்று காலி றுதிக்கு முன்னேறினார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் அக்னியஸ்கா ரத்வன்ஸ்கா, ஜெலனா ஜான்கோவிச்சை வென்று அரை யிறுதிக்கு முன்னேறினார்.

இப்போட்டியில் முன்னணி வீரர்கள் தடுமாறி வருவது குறிப்பிடத் தக்கது.

டாப்-10 வீரர்களான வாவ்ரிங்கா மற்றும் ஆண்டி முர்ரே ஆகியோர் 4-ம் சுற்றில் தோல்வியடைந்து வெளி யேறியது குறிப்பிடத்தக்கது. (க)

# மாணவி பாலியல் வல்லுறவு நால்வருக்கு மரண தண்டனை உறுதி

(புதுடெல்லி)

டெல்லி மருத்துவ மாணவி பாலி யல் பலாத்கார வழக்கில், குற்றவாளி கள் நால்வருக்கும் வழங்கப்பட்ட மரண தண்டனையை டில்லி உயர்நீதிமன்றம் உறுதி செய்து தீர்ப்பளித்துள்ளது.

ஏற்கெனவே வழங்கப்பட்ட இந்த மரண தண்டனையை எதிர்த்து தொடுக்கப்பட்ட மேல்முறையீட்டில் நேற்று வியாழக்கிழமை டில்லி உயர்நீதிமன்ற நீதிபதிகள் ரேவா கேத்தரபால் மற்றும் பிரதிபா ராணி ஆகியோர் இந்த உத்தரவை பிறப் பித்துள்ளனர்.

மருத்துவ மாணவி பாலியல் பலாத்கார வழக்கில் மரணதண் டனை விதிக்கப்பட்ட முகேஷ், அக்ஷய தாக்கூர், பவன் குப்தா, வினய் ஷர்மா ஆகியோர் சார்பில் தொடுக்கப்பட்ட மேல்முறையீடு மனு மீதான விசா ரணை நடைபெற்று முடிந்து, நேற்று வழங்கப்பட்ட தீர்ப்பில் மீண்டும் அவர களுக்கு மரணதண்டனை உறுதி யாகியுள்ளது.

மேலும் இந்த வழக்கு தொடர்பில் அவர்கள் மேல்முறையீடு செய்வதற்கு 30 நாட்கள் கால அவகாசமும் வழங் கியுள்ளது.

நேற்று வழங்கப்பட்ட இந்த தீர்ப்பை எதிர்த்தும், இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்படும் என இந்த நால்வர் தரப் பில் வாதாடிய வழக்கறிஞர் செய்தி யாளர்களிடம் பின்னர் தெரிவித்தார். மேலும் அவர் இது குறித்து தெரி வித்த போது உயர்நீதிமன்றம் திடீ ரென்று இந்த தீர்ப்பை வழங்கியுள்ள தாகவும், இந்த நால்வருக்கான நீதி மறுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

டில்லியில் கடந்த 2012-ம் வருடம டிசம்பர் மாதத்தில் ஓடும் பேருந்தில் 23 வயது மாணவியை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய வழக்கில், குற்றவாளிகளாக அறிவிக் கப்பட்ட நான்கு பேருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. கடந்த வருடம் செப்டம்பர் மாதத்தில் தெற்கு டில்லி விரைவு நீதிமன்றம் வழங்கிய இந்த தீர்ப்பை எதிர்த்து, தண்டிக்கப்பட்ட இந்த நால்வர் சார்பில் டில்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப் பட்டது. (எ-11)

## பிரித்தா...

உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

உறுப்பு நாடுகள் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் போன்ற வற்றின் உதவி பெற்றுக்கொள் ளப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள் ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை முழு அளவிலான விசார ணைகளை நடத்தி நியாயம் வழங் கும் என நம்புவதாகத் தெரிவித்துள் ளார்.

நிலக்கண்ணி வெடி அகற்றுதல, சிறுவர் போராளிகளுக்கு புனர்வாழ்வு அளித்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கத் தின் நடவடிக்கைகளை பிரித்தானியா ஏற்கெனவே வரவேற்றுள்ளதாகத் தெரிவித்துள்ளார். (ஏ-11)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## 24 மீனவர்கள்...

மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது, சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய நீதவான் இவர்களை விடுவித்துள்ளார்.

தலைமன்னார் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து 03 படகுகளில் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இந்திய மீனவர்கள் 15 பேரை கடந்த 5ஆம் திகதி கடற்படையினர் கைதுசெய்தனர்.

மறுநாளான கடந்த 6 ஆம் திக்தி மேற்படி கடற்பரப்பில் 02 படகுகளில் வந்து மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் இந்திய மீனவர்கள் 09 பேரை கடற்படையினர் கைது செய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மன்னார் நீதிமன்றத்தில் கடந்த 06ஆம் திகதி 15 மீனவர்களையும் 07ஆம் திகதி 09 மீனவர்களையும் ஆஜர்படுத்தியபோது, இவர்களை எதிர்வரும் 20ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார் நீதவான் ஆனந்தி கனகரட்ணம் உத்தர விட்டிருந்தார்.

இந்நிலையில், மேற்படி மீனவர்களின் விடுதலை தொடர்பில் தலைமன்னார் பொலிஸாருக்கு சட்ட மா அதிபர் திணைக்களத்திலிருந்து நேற்று முன்தினம் புதன்கிழமை ஆலோசனை வழங்கப்பட்டது.

இது தொடர்பில் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்கு தலைமன்னார் பொலிஸார் கொண்டுவந்தனர். இந்நிலையில் மேற்படி 24 மீனவர்களும் நேற்று திடீரென விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் 116 இந்திய மீனவர்களும் 27 படகுகளும் ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தினால் விடுதலைசெய்யப்பட்டிருந்தனர். இந்நிலையில் நேற்று மன்னார் நீதவான் நீதிமன்றத்தினால் 24 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (எ-6)

## வீடொன்று சுற்றி...

கிளிநொச்சி பகுதியில் ஒரு சம்பவத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் காயமடைந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

கிளிநொச்சியில், தர்மபுரம் பகுதியில் ஒரு வீட்டை இராணுவத்தினர் சுற்றி வளைத்து, அந்த வீட்டில் இருந்த இரு பெண்களை அங்கு தடுத்து வைத்திருப்பதாக அங்குள்ளவர்கள் தெரிவித்திருந்தனர்.

அந்தப் பெண்களை தாம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நிலைமையை அறிய முற்பட்டபோது, அவர்களுடன் அங்கிருந்த யாரோ, தன்னை அவர்களுடன் பேச அனுமதிக்கவில்லை என்றும், அவர்கள் தம்மை பொலிஸார் என்று கூறியதாகவும், அங்கு ஒரு விசாரணை நடப்பதாக அவர்கள் கூறியதாகவும், சட்டத்தரணி கஜேந்திர குமார் பொன்னம்பலம் கூறினார்.

இந்த விடயம் குறித்து பொலிஸ்தரப்பு பேச்சாளர் அஜித் ரோகண அவர்களை தொடர்பு கொண்டு கேட்டபோது, இது ஒரு குற்றவியல் சம்பவம் என்று அவர் கூறினார்.

அந்த வீட்டுக்கு ஒரு கிரிமினல் குற்றவாளியை தேடி பொலிஸார் சென்றபோது அவர் தப்பி ஓடிவிட்டார் என்றும் அப்போது ஒரு பொலிஸ்காரருக்கு காலில் காயம் ஏற்பட்டு விட்டது என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

காயமடைந்த பொலிஸ்காரர் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் அவருக்கு எப்படி காயம் ஏற்பட்டது என்பதை தன்னால் உடனடியாக கூற முடியாது என்றும் அதனையடுத்து அங்கு பொலிஸார் விசாரணை நடத்துவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அந்தச் சம்பவத்தில் இராணுவத்துக்கு சம்பந்தம் கிடையாது என்றும் அது ஒரு கிரிமினல் சம்பவம் மாத்திரமே என்றும் அவர் குறிப்பிட்டார். (எ-11)

## அரச உயர் ...

பல்வேறுபட்ட குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. வடக்கு தமிழர்களின் மீள்குடியேற்றம், வடக்கில் இராணுவத்தின் அத்துமீறிய தலையீடு, கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்கத்திற்கான ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதிலுள்ள தாமதம் போன்ற சரத்துக்கள் முக்கியமாக அந்த உத்தேச வரைபில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

இந்தக் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் முகமாக கடந்த 6ஆம் திகதி புதன்கிழமை, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸினால் மனித உரிமைப் பேரவையில் அறிக்கையொன்று வாசிக்கப்பட்டது. தற்பொழுதும் நவநீதம்பிள்ளையின் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வாதப் பிரதிவாதங்கள் நடைபெறுகின்றன.

இந்நிலையில், இலங்கை அரசாங்கத்துக்கு வலுச்சேர்க்கும் முகமாக முக்கிய உயர்மட்ட அதிகாரிகள் சிலரை உள்ளடக்கிய மற்றுமொரு குழுவொன்றை ஜெனீவாவுக்கு அனுப்ப அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

வெளிவிவகார அமைச்சை சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் சிலரும், சட்ட மா திணைக்களத்தினைச் சேர்ந்த உயர்மட்ட அதிகாரிகள் சிலரும் ஜனாதிபதி ஊடகப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளும் இந்த உயர்மட்ட குழுவில் உள்ளடங்கவுள்ளதாக நம்பத்தகுந்த அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-11)

## மார்ச் 25இல்...

பெறவில்லை என்று ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

நேற்று மாலை கொழும்பில் மீனவர் பேச்சுவார்த்தை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. இருப்பினும் இந்த பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டது. இந்த பேச்சுவார்த்தை ஒத்திவைப்புக்கு விசேட காரணங்கள் எதுவும் இல்லை என்றும் அவர் கூறினார்.

பேச்சுவார்த்தையில் கலந்துகொள்வதற்காக இலங்கை வரவிருந்த இந்தியாவின் மீனவப் பிரதிநிதிகள் அனைவருக்குமான அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து வைக்கப்பட்டிருந்தன.

அவர்களுக்கான போக்குவரத்து வசதிகளும் செய்துவைக்கப்பட்டிருந்த அதேவேளை, அவர்களை வரவேற்பதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்து முக்கியஸ்தர்களை அனுப்பியிருந்தோம்.

ஆனால், கடைசி நிமிடத்தில் அவர்கள் வரவில்லை என்று அறிவித்துவிட்டனர் என்று நிமல் ஹெட்டியாரச்சி மேலும் தெரிவித்தார். (எ-11)

உங்கள் அலுவலகம் அல்லது வீட்டு கணினிகள் பிரச்சினையா...?
Computer Repair
DTP (Graphics Designing) கற்பிக்கப்படும்
T-shirt Printing
கணினி திருத்தம் மற்றும் கணினி தொடர்பான உதவிகளுக்கு...
(C-6742)
விரைவான சேவைக்கு.. 0774724075

## யாழ். குடா...

21 நாட்கள் கடந்த நிலையில்,

வலி.வடக்கு மீள்குடியேற்ற குழுவினர் மற்றும் தையிட்டி கிராம முன்னேற்ற சங்கம் யாழ். வணிகர் கழகம் ஆகியவற்றின் வேண்டுகோளையடுத்து எதிர்வரும் 27-ம் திகதி வரை ஒத்திவைத்துள்ளேன்.

அதன் பின் எனது போராட்டத்தை ஆரம்பிப்பதுடன் மறுதினம் 28-ம் தி... யாழ்.குடாநாடு முழுவதையும் முடக்கி எமது மக்களின் தேவைகளை நிறைவேற அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும் என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது (எ-1)

## யாழ். நோக்கி...

இயந்திர கோளாறு காரணமாகவே பஸ் முற்றாக எரிந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது; கொழும்பிலிருந்து இரவு 10 மணிக்கு யாழ்ப்பாணம் நோக்கி பயணித்த தனியாருக்கு சொந்தமான அதி சொகுசு பேருந்து அதிகாலை 3.30 மணிக்கு ஏ9 வீதியிலுள்ள கனகராயன்குளம் பகுதியிலுள்ள குறிசுட்ட குளம் பிரதேசத்தில் வரும் போது பேருந்தின் முன்பகுதியில் தீப்பிடித்துள்ளது.

இதனை அவதானித்த சாரதி பேருந்தை நிறுத்தி பயணிகளை எச்சரித்து துரித கதியில் அவர்களை பேருந்திலிருந்து வெளியேற்றியுள்ளார்.

இதன்போது நடத்துநர் உட்பட 49 பேர் வெளியேற்றப்பட்டனர்.

இதன்போது தமது உடைமைகளை கைவிட்ட நிலையில் பதற்றத்தோடு பயணிகளை இருந்தனர்.

இந்நிலையில் சொற்ப நேரத்தினுள் பேருந்து தீப்பற்றி முற்றாக எரிந்து நாசமாகியதால் பயணிகளின் உடைமைகள் அனைத்தும் எரிந்துபோயின.

குறித்த பேருந்து 2 கோடியே 26 லட்சம் பெறுமதியானது என தெரிவிக்கப்பட்டது.

இதே போன்று கடந்த 5 மாதங்களிற்கு முன்னர் இதே ரக பேருந்து கொழும்பி... ருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த வேளை மாதங்கை என்ற இடத்தில் தீப்பற்றி எரிந்து முற்றாக நாசமாகியமை குறிப்பிடத்தக்கது.

இச் சம்பவத்தையடுத்து ஸ்தலத்திற்கு வந்த கனகராயன்குளப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை மாங்குளத்திலிருந்து பனிச்சங்குளத்திற்கு இடைப்பட்ட 227 கிலோமீற்றர் பகுதியில் பருத்தித்துறை சாலைக்குச் சொந்தமான போக்குவரத்துச் சபை பஸ் விபத்துக்குள்ளானது.

கொழும்பு - பருத்தித்துறை பேருந்து சாரதி நித்திரை தூங்கியமையால் அதிகாலை 2.45 மணியளவில் முன்னால் சென்ற மகேந்திரா டிப்பர் ரக வாகனத்துடன் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதனால் பேருந்தின் முன் பகுதிசேதமடைந்ததுடன் டிப்பர் வாகனமும் சேதமடைந்துள்ளது.

இதில் டிப்பர் வாகனத்தின் சாரதியான தென்பகுதியைச் சேர்ந்த சமிந்தா என்பவர், பேருந்தில் பயணித்த எஸ். ராஜ்குமார், பி. ஞானவேஸ்வரன், எஸ். மனோகரன் ஆகியோர் படுகாயமடைந்துள்ள நிலையில் கிளி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவத்தையடுத்து அங்கு வந்த மாங்குளப் பொலிஸார் இ.போ.ச சாரதியை கைது செய்து விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (எ-9-15,250,266)

ALLIANCE FRANÇAISE DE JAFFNA (AF)
Only Official French Centre in Northern Province
பிரெஞ் மொழியை பிரெஞ் முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.
af Alliance Française de Jaffna
யார் AF இல் பிரெஞ் மொழி படிக்க முடியும்?
திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர். யாழில; AF 1976 முதல் இயங்கிவருகிறது
- உலகில் French கற்பிப்பதற்கு French அரசாங்கம் அங்கிகரிக்கும் சர்வதேச நிறுவனம் AF. இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக French Embassy இன் கீழ் இயங்குகின்றது.
- வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
- பிரெஞ் மொழியில் நன்கு தேர்ச்சிபெற...Videos for listening & speaking practice: "Bienvenue en France" மேலும் Audio CDs (இலவசமாக பயிற்சி பெறலாம்). வகுப்பறையில் வழங்கப்படும் பாடப் பிரதிகள் (Photocopies) முற்றிலும் இலவசம். மாணவர்களுக்காக பிரமாண்டமான நூலக வசதிகள்.
- அதியுர் தகைமைகளையுடைய பல ஆசிரியர்களை கொண்ட ஒரே நிறுவனம் எமதே. (பிரான்ஸ் நாட்டவரும் கலாநிதியுமான Gérard உட்பட)
- Certificates & International Diplomas (DELF A1, A2)
- Letter in French: 6 மாதங்கள் படிக்காதோருக்கு, Embassy க்கு (இலவசம்)
- பிறப்பு, இறப்பு & திருமண சான்றிதழ்களுக்கான பிரெஞ் மொழிபெயர்ப்புகள்...

கவனிக்கவும் : DELF பரீட்சைகளை இலங்கையில; AF மட்டுமே நடாத்தி வருகிறது. AF மாணவர்கள் மட்டுமே குறைந்த கட்டணத்தில் DELF எழுத முடியும். எல்லா நாடுகளிலும் இச் Certificates அங்கிகரிக்கப்படுகின்றன.
புதிய வகுப்புகள் மிக விரைவில்... உடன் பதிவுசெய்யுங்கள்...
வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...
61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093
(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

ஆசிரியர்கள் தேவை
திசைகாட்டியின் துன்னாலை இலவச அறநெறிப்பாடசாலைக்கு
1) பண்ணிசைப் போதனாசிரியர்கள்:
முறைப்படி பண்ணிசை பயின்ற பட்டதாரிகள் விரும்பப் படுகின்றனர்.
2) அறநெறி ஆசிரியர்கள்:
இந்து மத அறநெறிக்கருத்துகளைப் போதிக்கக் கூடிய கணினி அறிவு உடைய ஆசிரியர்கள் தேவை.
கவர்ச்சியான வேதனம்.
நேர்முகத்தேர்வு :
16.03.2014 மு.ப. 10 மணிக்கு பின்வரும் முகவரியில் இடம்பெறும்.
Ms. V. இந்துஜா - பொதுமுகாமையாளர்
(கௌரவ இரக்குநர்சபைக்கட்டளைப்படி)
திசைகாட்டி (பிறை) லிமிற்
175, பருத்தித்துறை வீதி ஆவைப்பந்தி, யாழ்ப்பாணம். 021 2219016
(C-6738)


வட்டுக்கோட்டை சங்கரத்தை பிட்டியம்பதி வீரபத்திரர் சமேத பத்திரகாளி அம்பாள் ஆலயம்
8 ஆம் திருவிழா விஞ்ஞாபனம்
காலம் : 14/03/2014 வெள்ளிக்கிழமை
விசேட நிகழ்ச்சி: பகல், இரவு விசேட மேளக்கச்சேரி
01. அளவெட்டியூர் நாதஸ்வர மேதை கலாபூஷணம் S.S.சிதம்பரநாதன்
02. இணுவையூர் தவில்மேதை N.R.சின்ராசாவின் புதல்வன் N.R.S.ரவீந்திரன் குழுவினர்
03. இணுவையூர் தவில் மேதை N.R.சின்ராசாவின் புதல்வன் N.R.S.சுதாகரன் குழுவினர்
04. இணுவையூர் நாதஸ்வரமேதை N.R.கோவிந்தசாமியின் புதல்வன் குழுவினர்.
05. கோண்டாவில் நாதஸ்வர வித்துவான் குமாரதாஸ் - நாகதீபன் குழுவினர்.
06. வட்டூர் தவில்வித்துவான் இராமநாதன் குழுவினர்.
பகல் அம்பாள் அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் உள்வீதிவலமும் வருவார். இரவுமின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட பூச்சப்பரத்தில் வீதி உலா வருவார்.
பகல் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும்.
உபயம்:
இந்து வாலிபர் சங்கம்
வட்டுக்கோட்டை
(சி-6740)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.